Follow us:

வாரவெளியீடு

# தமிழன்


THAMILAN WEEKLY

தமிலன் සතිඅන්තය

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 56- பிலவ வருடம், ஆடி மாதம் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (18.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 07 0115886187 பக்கங்கள் 20 + 8 விலை ரூ.40

## 'வெடி'மணியம்



ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் ராசதந்திர வியூகங்கள் ஓரளவுக்கு இப்போது தெற்கு மக்களுக்குப் புரிய ஆரம்பித்துவிட்டன.

2009 போர் வெற்றிக்கு பின்னர் ஒரு அரசியல் படுதோல்வியை ராஜபக்ஷ வாரிசுகள் சந்தித்தார்கள்.

அதிலிருந்து அவர்கள் மீண்டு வரமுடியாது என்ற கணிப்பில் எதிர்த்தரப்பு கனவு கண்டுகொண்டிருந்தபோது;

ராஜபக்ஷ வாரிசுகள் அடிபட்ட பாம்புகளாக சினம் கொண்டார்கள்.

போரின் போது ராஜபக்ஷ வாரிசுகளோடு கைகோர்த்து நின்ற இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய தரப்புகள் ஒரு கட்டத்தில்;

சிறிலங்காவில் தங்களின் கால்களை அகலமாக பதிக்க ராஜபக்ஷ கட்சியின் எதிராளிகளோடு "களவாக" கூட்டுச் சேர்ந்தார்கள்.

09

## நக்கல் நமசிவாயம்

இலங்கை அரசாங்கம் சொன்னது எதையும் இதுவரை செய்யேல்லையெண்டு அமெரிக்கா சொல்லுது. அவையிட்ட போய் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கச் சொல்லி எங்கட அரசியல்வாதியள் கேட்கிறாங்கள்...






# ரிஷாட் இல்லத்தில் பணிப்பெண் துஷ்பிரயோகத்துக்குள்ளானாரா?

## மரணத்தின் பின் வெளிவந்த தகவல் குறித்து பொலிஸார் புதிய கோணத்தில் விசாரணை

•ம.சசிதரன்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிக் கொண்டிருந்த நிலையில், தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த சிறுமி தொடர்பில் அவரது பெற்றோர்கள் மற்றும் சிறுமியுடன் பணியாற்றி வந்த இளைஞர் ஆகியோரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு பொரளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்த சிறுமியின் பிரேத பரிசோதனையில் அவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

02




கொத்தலாவல பாதுகாப்புச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு எதிரில் மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்று (17) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: லலித் பெரேரா)

# இவ்வருட இறுதியில் மாகாணசபைத் தேர்தல்

## தயாராகுமாறு கோரினார் பெசில்

•நா.தினுஷா

மாகாணசபைத் தேர்தலை இவ்வருட இறுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தேர்தலை எந்த அடிப்படையில் நடத்துவது என்பது உட்பட பல விடயங்கள் அதற்கு முன் இறுதிசெய்யப்படவுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் அலரி மாளிகையில் விசேட கூட்டமொன்று நடந்தது. உள்ளூராட்சி மன்றங்களின்...

02

# யாழ். செல்கிறார் மஹிந்த

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்கிறார்.

இதன்போது திறப்பு விழாக்கள் மற்றும் வீட்டுத்திட்ட அடிக்கல் நாட்டு நிகழ்வுகள் சிலவற்றில் அவர் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சரவையில் அதிரடி மாற்றம்!

## அமைச்சர்கள் பலரின் தலைகள் உருளும்;

## எரிபொருள், வெளிநாடு, கல்வி உட்பட்ட துறைகளுக்கு புதிய முகங்கள்

•நமது அரசியல் செய்தியாளர்

அமைச்சரவையில் அதிரடி மாற்றங்களை செய்ய அரச உயர்மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விரைவில் நடைபெறவுள்ள இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது வெளிநாட்டலுவல்கள், கல்வி, கைத்தொழில், எரிபொருள், போக்குவரத்து மற்றும் வீடமைப்பு ஆகிய அமைச்சுகளுக்கு புதிய அமைச்சர்மார் நியமிக்கப்படவுள்ளதாக அறியமுடிந்தது.

அதேசமயம் வெற்றிடமாகவுள்ள இரு அமைச்சுப் பதவிகள் மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவி ஒன்றுக்காக சிலரின் பெயர்கள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்...

02




# சர்வதேசத்தை வளைக்க முன் சிறுபான்மை மக்களின் மனங்களை வெல்ல வேண்டும்

## அமைச்சர் பெசிலுக்கு மனோ எம்.பி. ஆலோசனை

புதிய நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, இலங்கையிலுள்ள அமெரிக்க, இந்திய, சீன, ரஷ்ய, ஐரோப்பிய யூனியன், ஜேர்மனி மற்றும் பிரித்தானிய தூதுவர்களை அவசர அவசரமாக சந்தித்துள்ளார்.

நம்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டு முதலீடுகள் தேவை என்று கூறுகிறார். அதற்கு இந்த தூதுவர்கள் உதவ வேண்டுமெனவும் கூறுகிறார். புதிய நிதியமைச்சரின் கருத்து சரிதான்.

ஆனால், சர்வதேச நாடுகளை வளைத்துப் போட, நிதியமைச்சரை மாற்றி, தூதுவர்களை சந்தித்து கோரிக்கை விடுப்பது மாத்திரம் போதாது. இலங்கை அரசாங்கம் தனது, "போலி தேசியவாத" கொள்கையை மாற்ற வேண்டும். இனவாதத்தைக் கைவிட்டு, தமிழ், முஸ்லிம் மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

02


# டெல்ட்டா திரிபு காரணமாக நான்காவது அலை அபாயம்

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை; பயணக்கட்டுப்பாடுகள் வரலாம்

•நா.தினுஷா

இந்தியாவின் டெல்ட்டா திரிபு வைரஸ் காரணமாக இலங்கையில் கொரோனா நான்காவது அலை அபாயம் உள்ளதாக சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. டெல்ட்டா திரிபு காரணமாக மேலும் ஒரு கொவிட்-19 அலை உருவானால், அது பாரிய பாதிப்பினை ஏற்ப டுத்தும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. தேசிய தொற்று நோய்த் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம இந்த எச்சரிக் கையினை விடுத்துள்ளார்.

02



# தமிழ் தேசிய கூட்டமைப்புடன் யாழில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சந்திப்பு

தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியினரும் நேற்று (17) நேரடிப் பேச்சில் ஈடுபட்டனர்.

இதன்போது தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், பங்காளிக்கட்சிகளின் தலைவர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், வினோ நோகராதலிங்கம் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) முன்னெடுத்து வரும் ஒற்றுமை முயற்சியின் ஒரு அங்கமாக இந்த சந்திப்பு இடம்பெற்றது.

எனினும், இலங்கை தமிழரசுக் கட்சி இந்த சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்த சந்திப்பை ஏற்பாடு செய்த ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராசாவிற்கு தொலைபேசி வழியாக அழைப்பு விடுத்திருந்தார். எனினும், இந்த சந்திப்பில் மாவை சேனாதிராசா கலந்து கொள்ளவில்லை. அவர் சார்பில் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவில்லை.

இந்த சந்திப்பு குறித்து தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் ஊடகமொன்றிடம் கருத்து வெளியிடுகையில்,

எமது ஒற்றுமை முயற்சி பதவியை, தலைமையை நோக்கமாகக் கொண்டதல்ல, மக்கள் நலன் சார்ந்தது என கூட்டத்தின் ஆரம்பத்தில் ரெலோ தரப்பால் கூறப்பட்டது. எனினும், எமது கூட்டணி சார்பில் கலந்துகொண்ட சுரேஷ் பிரேமச்சந்திரன் கொஞ்சம் காட்டமாக கருத்து தெரிவித்தார்.

ஏற்கனவே 10 கட்சிகள் ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் தமிழ் தேசிய பேரவை பற்றி நான் கருத்து தெரிவித்தது பிழையென தமிழரசுக் கட்சி குழப்பியது. ரெலோவும் அதை ஆதரித்து அறிக்கை வெளியிட்டது. அது பிழையென்றால், அது பற்றிக் கலந்துரையாடியிருக்கலாம். அதை விட்டு, குழப்புவதைப் போல் நடந்து விட்டு, இப்போது புதிய கூட்டணி முயற்சிக்கு ஏன் வருகிறீர்கள் என செல்வம் அடைக்கலநாதனிடம் கேள்வியெழுப்பினார் சுரேஷ்.

பழைய முயற்சிகளில் ஏதேனும் குறைகள் இருந்தால் அதை நிவர்த்தி செய்து அதனையே தொடரலாமென்றும் சுரேஷ் குறிப்பிட்டார் என அந்த பிரமுகர் குறிப்பிட்டார்.

எனினும், ஒற்றுமை முயற்சியின் அவசியத்தை எமது தரப்பின் ஏனைய இரண்டு கட்சிகளாக தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ் தேசிய கட்சி இரண்டும் ஏற்றுக்கொண்டன. ஆனால், அது தொடர்பில் தொடர்ந்து பேச வேண்டுமென அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த கூட்டத்தின் ஆரம்பத்திலேயே "செல்வம் உங்கள் முயற்சி பெயிலியர்'' என விக்னேஸ்வரன் குறிப்பிட்டார். மாவை சேனாதிராசா கலந்து கொள்ளவில்லையென்பதால் அப்படி தெரிவித்தார். எனினும், ரெலோ பிரமுகர் ஒருவர் காட்டமாக, அப்படியல்ல. இது இரண்டு தரப்பும் கலந்துரையாடிய பின்னர், இந்த சந்திப்பை தொடர்வதென முடிவாகியது என்றார்.

இறுதியில் விக்னேஸ்வரன்-

நாம் என்ன அடிப்படையில் சேர்ந்தியங்குவதென்பதைத் தீர்மானிக்க வேண்டும். தமிழ் தேசிய பேரவையா, கூட்டணியா, அல்லது வேறு வடிவமா என்பதை தீர்மானிக்க வேண்டும். எந்த பிரச்சினைகளில் சேர்ந்தியங்குவது என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அதற்காக முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பட்டியலிடுவோம். அதில் எதில் இணைந்து செயற்படுவது என்பதை தீர்மானிப்போம் என்று கூறினார்.

இந்த தீர்மானத்தின்படி கூட்டம் நிறைவடைந்தது என்றார்.

## கிண்ணியா கடற்கரையில் ஆணொருவரின் சடலம் மீட்பு

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்பாற்றுக் கடற்கரையில் சடலமொன்று நேற்று (17) காலை 7 மணியளவில் கிண்ணியா பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கடற்கரையிலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் இச்சடலம் மீட்கப்பட்டது. மீனவர்களின் கட்டுவலையில் இச்சடலம் ஒதுங்கிய நிலையிலேயே காணப்பட்டது.

கறுப்பு நிற நீள காற்சட்டையும், சிவப்பு நிற சேர்ட்டும், கபில நிற இடுப்புப் பட்டியும் இவர் அணிந்திருந்தார். உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான வில்வெளியைச் சேர்ந்த முஹம்மட் இஸ்மாயில் றிஸ்வி (வயது 42) என அடையாளம் காணப்பட்டது. இவரது சடலம் கிண்ணியா தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தடுப்பூசி ஏற்றுதல் - கொத்தலாவல சட்டம் பற்றி மகா சங்கத்தினருக்கு ஜனாதிபதி விளக்கம்

கொவிட் - 19 ஒழிப்புக்குத் தடுப்பூசி ஏற்றுதல் உள்ளிட்ட அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டம் தொடர்பில், பௌத்த மகா சங்கத்தினருக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளார்.

பௌத்த ஆலோசனை சபை, 11ஆவது தடவையாக நேற்று முன்தினம் (16) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடியபோதே, ஜனாதிபதி இதுபற்றித் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 28ஆம் திகதியன்று, எஸ்ட்ரா செனிக்கா தடுப்பூசியின் முதலாவது தொகுதி கிடைக்கப்பெற்றது முதல், இதுவரையில் கிடைத்துள்ள அனைத்துத் தடுப்பூசிகள் மற்றும் நாடளாவிய ரீதியில் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தின் மூலம், ஒகஸ்ட் மாதம் நிறைவடைவதற்கு முன்னர், 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசியின் இரண்டு அலகுகளையும் வழங்கி முடிக்க முடியுமெனவும், ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும், "கண்டி ஸ்ரீ தலதா பெரஹராவுக்கு முன்னர், கண்டி மாவட்டத்தின் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபனம், நாட்டின் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ளதுடன், தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில், தெற்காசிய நாடுகளின் வரிசையில், இலங்கையே முன்னணியில் இருக்கின்றது" என்றும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் எதிர்காலத்துக்காக மேற்கொள்ளப்படும் கொள்கை சார்ந்த தீர்மானங்களுக்கு சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருவது, எதிர்காலத் தலைமுறைக்குச் செய்யப்படும் பாரிய அநீதியாகுமென்றும், ஜனாதிபதி இதன்போது எடுத்துரைத்தார்.

"கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகமானது, 40 வருட காலமாக நாட்டுக்குத் தேவையான பெரும் எண்ணிக்கையான கல்விமான்களை உருவாக்கியுள்ளது. உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளுடன் சித்தியடைகின்ற மாணவர்கள்கூட, கொத்தலாவல பல்கலைக்கழகத்தைத் தங்களது உயர்கல்விக்காகத் தெரிவுசெய்வதற்கு அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்" என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உயர் கல்விக்காக தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம், நாடும் பெற்றோர்களும் இழக்க வேண்டி ஏற்படும் பாரிய தொகையைச் சேமிக்க வேண்டுமானால், உயர்ந்த தரம் வாய்ந்த இத்தகைய பல்கலைக்கழகங்கள் நாட்டில் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சட்டத்தில் உள்ள தடைகளை அகற்றி, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தை அதன் கீழ் கொண்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதன்போது, கொவிட்-19 ஒழிப்புக்காக ஆரம்பம் முதல் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்து வரும் நிகழ்ச்சித்திட்டங்களைப் பாராட்டிய மகா சங்கத்தினர், கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட நோக்கங்கள் குறித்து மக்களுக்கு அறிவூட்டி, சமூகத்தில் பரவி வரும் பிழையான தகவல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினர்.

பௌத்த ஆலோசனைச் சபையின் உறுப்பினர்களான மகா சங்கத்தினர், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுக்களின் செயலாளர்கள், அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்டோர், இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

### அமைச்சரவையில் ...

ஒருவரின் பெயர் இராஜாங்க அமைச்சு பதவிக்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் தற்போதைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற காலம் முதல் இதுவரை அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகளை வகித்தவர்களில் திறமாக செயற்பட்டவர்கள் தொடர்பில் ஆராயும் அரசு, அப்படியானவர்களை அதே அமைச்சில் தொடரவைக்க அனுமதிக்கவும் உத்தேசித்துள்ளது.

### இவ்வருட இறுதியில்...

உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ , மாகாணசபைத் தேர்தலுக்குத் தயாராகுமாறு கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

அரசின் வேலைத்திட்டத்தை மேலும் பலமாக முன்னெடுக்க மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் பெசில் இங்கு கேட்டுக்கொண்டாரென சொல்லப்பட்டது.

### ரிஷாட் இல்லத்தில்...

தற்போது இரகசிய பொலிஸாரின் தடுப்பில் உள்ள ரிஷாட் பதியுதீனிடமும் இது தொடர்பில் வாக்குமூலம் பெறப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ரிஷாட் பதியுதீன் எம்.பி.யின் வீட்டுக்குப் பணிக்கு அழைத்து வரப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த சிறுமியின் வயது 15 வருடங்களும், 11 மாதங்களும் ஆகுமென அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பணியாற்றிக் கொண்டிருந்த குறித்த சிறுமி வீட்டிலுள்ள மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டுள்ளதாகவும், இதற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நீண்ட காலமாக துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளமையே குறித்த சிறுமியின் மரணத்திற்குக் காரணமாக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இருப்பினும், இது தொடர்பாக விரிவான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கபடுகிறது.

ஹட்டன் - டயகம மேற்குப் பகுதியைச் சேர்ந்த இஷாலினி ஜூட் குமார் என்ற சிறுமி, கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரிஷாட்டின் வீட்டிற்கு பணிப்பெண்ணாக வருகை தந்துள்ளார்.

இவர் ஒரு வருடத்திற்கு அதிக காலம் அங்கு பணியாற்றியுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்நிலையில் இவர் குறைந்த வயதிலேயே பணிக்கு அமர்த்தப்பட்டமை தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரிஷாட் பதியுதீன் எம்.பி.யின் வீட்டில் பணியாற்றி வந்த குறித்த சிறுமி கடந்த ஜூலை மாதம் 3ஆம் திகதி 72 வீதமான அளவிற்கு உடலில் தீக்காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த 12 நாட்களாக சிகிச்சை பெற்றுவந்த சிறுமி கடந்த 15ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




### டெல்ட்டா திரிபு...

உரிய சுகாதார வழிகாட்டுதல்களை பொதுமக்கள் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். அவ்வாறில்லையெனின், எதிர்வரும் சில வாரங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின் மரண வீதமும் அதிகரிக்கக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. எனவே, டெல்ட்டா வைரஸ் திரிபு குறித்து பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்பதுடன், சுகாதார வழிகாட்டல்களையும் உரிய முறையில் பின்பற்ற வேண்டுமென விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இதேவேளை டெல்ட்டா தொற்று நாடளாவிய ரீதியில் பரவியிருக்கலாமென அஞ்சப்படுவதால் இம்மாத இறுதியில் சுகாதார கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்க சுகாதார தரப்பு ஆராய்ந்து வருகிறது.

மாகாணங்களுக்கிடையில் தற்போதுள்ள போக்குவரத்துக் கட்டுப்பாட்டை அடுத்த வாரமும் தொடர ஆலோசிக்கப்பட்டுள்ளது.

### சர்வதேசத்தை...

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசாங்கம், உலக நாடுகளுக்கு தந்துள்ள தேசிய ஒருமைப்பாடு, மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி ஆகியவை பற்றிய உறுதிமொழிகளை காப்பாற்றுகின்றதா என்பதை, இந்த அமெரிக்க, இந்திய, சீன, ரஷ்ய, ஐரோப்பிய யூனியன், ஜேர்மனி மற்றும் பிரித்தானிய தூதுவர்களும் உறுதி செய்து விட்டு, இலங்கை அரசுக்கு உதவ முன்வர வேண்டும். அதைவிடுத்து விட்டு, தங்கள் சொந்த நலன்களுக்காக, தமிழ் பேசும் மக்களின் தோள்களில் சவாரி ஓட இனியும் முனைய கூடாது. உங்களை நம்பி பிரயோஜனம் இல்லை என்ற நிலைக்கு தமிழ் மக்களைத் தள்ளி விட வேண்டாம். 'சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழலாம்' என, இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து "வன் பெல்ட்-வன் ரோட்" என்ற சீனாவின் பட்டுப்பாதையில் தமிழ் மக்களும் பயணிக்கும் நிலைமையை உருவாக்கிட வேண்டாம்

இவ்விவகாரம் பற்றி த.மு.கூ. தலைவர் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

புதிய துடைப்பான் நன்றாக துடைப்பது போன்று, புது நிதி மந்திரி பதவிக்கு வந்தது முதல் நன்றாக சுறுசுறுப்பாக இயங்குகிறார். விளைவுகள் இன்னமும் வெளிவரவில்லை என்றாலும், பெசில் ராஜபக்ஷ அரசுக்குள் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தி உள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் ராஜபக்ஷ சகோதரர்களின் தோல்வியால் துவண்டு போயிருந்த இலங்கை பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு பெசில் ராஜபக்ஷதான் இப்போது கிடைத்துள்ள ஒரே துருப்புச்சீட்டு என நன்றாகத் தெரிகிறது.

இவரது மூத்த சகோதரரான பிரதமரும் முன்னாள் நிதி மந்திரியுமான மஹிந்த ராஜபக்ஷ கையில் எப்போதும் ஒரு மந்திரப் பந்தை வைத்து உருட்டிக் கொண்டே இருப்பார். கடைசியில் அந்த மந்திரப் பந்து சரியாக வேலை செய்ய வில்லை எனத்தெரிகிறது. அது சரியாக வேலை செய்திருந்தால், அவர் பதவி விலகி அந்த இடத்துக்கு பெசில் வர வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காதே.

இப்போது புதிய நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, ஏறக்குறைய எனக்கு எதிரில்தான் ஆளும்தரப்பில் அமர்ந்துள்ளார். அலாவுதீனின் அற்புத விளக்கை, பெசில் தனது கையில் வைத்திருக்கின்றாரா என நான் அவர் பாராளுமன்றம் வந்த நாளன்று தேடிப் பார்த்தேன். அலாவுதீனின் அற்புத விளக்கையே காணோம். தனது அலுவலகத்தில் வைத்திருக்கிறாரோ தெரியவில்லை.

'அண்டா-கா-கசம், அபூ-கா-கசம்-திறந்திடு சீசே' என்ற மந்திரத்தை சொல்லி, கொள்ளையன் அபு ஹுசைனின் இரகசிய குகையை திறந்து, தங்கத்தையும், வைரத்தையும், செல்வத்தையும், நம்ம அலிபாபா எடுத்துத் தந்ததை போல, நம்ம புதிய நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவும் மக்களுக்கு மந்திரத்தால் நிவாரணம், விலைகுறைப்பு, சம்பள உயர்வு, இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்வு, அனைவருக்கும் எல்லையில்லா தடுப்பூசி என்று வரிசையாக எடுத்து விடுவார் என எதிர்பார்த்தேன்.

அவர் தற்போது, அமெரிக்கா, இந்தியா, சீனா, ரஷ்யா, ஐரோப்பிய யூனியன், ஜேர்மனி, பிரித்தானியா ஆகிய நாடுகளின் தூதுவர்களை சந்தித்து ஒத்துழைப்பைக் கோரியுள்ளார். நிறைய முதலீடுகளையும், கடன்களையும், நன்கொடைகளையும் நிதி மந்திரி கோரினார் என எனக்கு ஒரு மேற்குலக வெளிநாட்டுத் தூதுவர் கூறினார். நல்ல விடயம்தான். எப்படியாவது மக்களுக்கு நல்லது நடந்தால் சரி. எமது அரசாங்கம் விரைவில் வரும். அதுவரை கஷ்டத்தை பொறுத்துக்கொண்டு இருங்கள் என நான் அரசியல் நோக்கில் பேச மாட்டேன். எங்கள் மக்களுக்கு நன்மை கிடைத்தால், நாம் உள்ளே இருந்தாலும், வெளியே இருந்தாலும், அது நம்ம அரசாங்கம்தான்.

ஆனால், புதிய நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவும், அவரது ஜனாதிபதி சகோதரரும், பிரதமர் சகோதரரும், தமது கொள்கைகளை மாற்ற வேண்டும். தொட்டதுக்கு எல்லாம் போலி தேசியவாதம் பேசி, நாடு பறி போகிறது என்று கூறி, சிங்கள இனம், பௌத்த மதம் ஆகிய இரண்டையும் இழுத்து விடும் பழக்கத்தைக் கைவிட வேண்டும். தேசிய ஒருமைப்பாடு, மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி ஆகியவை தொடர்பில் உலகத்துக்கு கொடுத்த உறுதிமொழிகளை நிலை நாட்ட முன் வர வேண்டும். தமிழ், முஸ்லிம், இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க இலங்கை மக்களின் மனங்களை வெல்ல முயல வேண்டும். அப்படி செய்தால், இலங்கையை நோக்கி முதலீடுகள் குவியும். செல்வம் குவியும்.

அமெரிக்க, இந்திய, சீன, ரஷ்ய, ஐரோப்பிய யூனியன், ஜெர்மனி, பிரித்தானிய நாட்டுத் தூதுவர்களுக்கும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்த செய்தியின் மொழிபெயர்ப்பு இவர்கள் கவனத்துக்குப் போகும் என எனக்கு தெரியும். தமிழ், முஸ்லிம், இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க இலங்கை மக்களை இந்த அரசாங்கம் நியாயமாக நடத்துகிறதா எனத் தேடிப் பாருங்கள். தேசிய ஒருமைப்பாடு, மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை உறுதி செய்ய சொல்லுங்கள். உங்கள் சொந்த நலன்களுக்காக தமிழ் மக்களை இனியும் பயன்படுத்த முயல வேண்டாம். உங்களை நம்பி பிரயோஜனம் இல்லை என்ற நிலைக்கு தமிழ் மக்களைத் தள்ளி விட வேண்டாம். சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழலாம் என, இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து "வன் பெல்ட்-வன் ரோட்" என்ற சீனாவின் பட்டுப்பாதையில் தமிழ் மக்களும் பயணிக்கும் நிலைமையை உருவாக்கிட வேண்டாம் எனக்கூறி வைக்க விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.




# கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் தேர்தலை அடிப்படையாக கொண்டிருந்ததாலேயே பிரிவை நோக்கிச் செல்கின்றன

## வீரமக்கள் தின நிகழ்வில் சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு



கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் தேர்தலை அடிப்படையாகக் கொண்டிருந்த காரணத்தினாலேயே அவை பிரிவை நோக்கிச் செல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற வீரமக்கள் தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அனைவரது அர்ப்பணிப்புக்களும், உயிர்த் தியாகங்களும் வீண்போய் விடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியிலிருக்கிறது. தற்போது ஒரு பின்னடைவான நிலைமைக்கு தமிழ் மக்கள் முகம் கொடுத்துள்ளனர். இதற்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய ஒற்றுமையின்மை மற்றும் தமிழ்க் கட்சிகள் பல கட்சிகளாக பிரிந்து நின்று மாறுபட்ட கருத்துக்களை தெரிவிக்கின்றமை, அரசுக்கு மிகவும் சாதகமாக அமைகின்றது.

கட்சிகள் ஒற்றுமையாக இருந்தால் இனம் ஒற்றுமையாக இருக்கும் என்ற அடிப்படையில் நாம் பல முயற்சிகளை எடுத்திருக்கிறோம். அவை மக்களின் விடுதலையை விரும்புகின்ற, அல்லது நேசிக்கின்ற அடிப்படையில் எடுக்கப்பட்டவையாக கடந்த காலங்களில் இருக்கவில்லை. கூடுதலான ஒற்றுமை முயற்சிகள் தேர்தலை அடிப்படையாகக் கொண்டிருந்த காரணத்தினால்தான் அவை பிரிவை நோக்கிச்செல்கின்றன.

கூட்டமைப்பானது பலம் வாய்ந்த அமைப்பாக இருந்த நிலையில், தற்போது பலவீனமடைந்து வரும் நிலையைப் பார்க்கிறோம். அது பலவீனமடைகின்றபோது தமிழினமும் பலவீனமடைகின்றது. வடகிழக்கில் அரசுக்கு சார்பான 6 பேர் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றனர். இது ஒரு பின்னடைவை கொடுக்கக்கூடிய விடயமே. எனவே, மக்கள் சரியாக உணர்ந்துகொள்ள வேண்டும். ஒற்றுமையான முயற்சியை அவர்கள் ஆதரிக்கவேண்டும். கட்சிகளும் மற்றவர்களை அரவணைப்பதில் கவனமாக இருக்கவேண்டும்.

சில தவறுகள் காரணமாகவே கூட்டமைப்பில் இருந்து பலர் பிரிந்துசென்றனர். அவர்களை மீளவும் உள்வாங்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். அந்த முயற்சிகளை தொடர்ந்து நாம் எடுக்கின்றோம். ஆனால், தமிழ் மக்கள் விடயத்தில் எமக்குத்தான் அதிகம் தெரியும் என்றவாறான அபிப்பிராயங்களை ஊடகங்கள் மூலமாகக் கூறி குழப்பங்களைத் தொடர்ந்து வைத்திருக்கிறோம். இது ராஜபக்ஷ அரசுக்கு சாதகமாக அமைந்திருக்கின்றது.

மாகாணசபையை இயங்க வைக்கக்கூடாது என்ற ஒரு எண்ணப்பாடு அரசின் மத்தியில் இருக்கிறது. காலப்போக்கில் அதனை மறந்து விடும் நிலைமையினை உருவாக்கி அந்த முறைமையே இல்லாமல் ஆக்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. மாகாணசபை மாத்திரமே தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய ஓரேயொரு சட்டவாக்கம். அதுவும் இல்லையென்றால் மீண்டும் பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கும் ஒரு நிலைமை உண்டாகும்.

எனவே, அதனைக் காப்பாற்றிக்கொண்டு அதற்கான தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். அங்கு இறுக்கமான ஒரு அரசை உருவாக்குவதன் மூலம்தான் அதனை காப்பாற்றுவதுடன் அதிலிருந்து படிப்படியாக மேலே செல்லமுடியும். அதுதான் யதார்த்தமான விடயம்.

இதேவேளை, 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவேண்டும் என்பதில் இந்திய அரசு உறுதியாக இருக்கிறது. ஆயினும் தமிழ்மக்கள் ஒன்றுபட்டு அதனை உருவாக்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று அவர்கள் எமக்குத் தெரிவிக்கின்றனர்.

ஒற்றுமையாக ஒரே கட்சியாக இருக்கவேண்டும் என்றில்லாமல், அடிப்படையில் தமிழ் மக்களின் தேவை என்ன என்பதை உணர்ந்து சரியான நிலைப்பாட்டை நகர்த்துவதன் மூலம்தான் எமது மக்கள் தலைநிமிர்ந்து நிற்கும் நிலையை உருவாக்கமுடியும்.

அதற்கு முயற்சிப்பதுடன், அதனை அடைவதன் மூலம்தான் இன்னுயிரை கொடுத்தவர்களின் ஆத்மா சாந்தியடையும் என்றார்.

# ஹப்புத்தளை விபத்தில் நபரொருவர் பலி

ஹப்புத்தளையில் மோட்டார் சைக்கிளொன்றும், காரொன்றும் நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் மரணமானார்.

இவ்விபத்து நேற்று (17) அதிகாலை பண்டாரவளை - ஹப்புத்தளை பிரதான வீதியில் ககொல்லை என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது. பதுளையிலிருந்து கொழும்பை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், ஹப்புத்தளையிலிருந்து பண்டாரவளைக்கு வந்து கொண்டிருந்த காருமே நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்து குறித்து ஹப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். விபத்துக்குள்ளான காரின் சாரதியும் ஆபத்தான நிலையில் தியத்தலாவை அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# வவுனியாவில் நடைபெற்ற ஆடிப்பிறப்பு விழா





வவுனியா சோமசுந்தரப்புலவர் நினைவுச் சிலைக்கு அருகில் நேற்று (17) முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் அனுசரணையில், வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில், ஆடிப்பிறப்பு இடம்பெற்றது.

இந்நிகழ்வு பஜார் வீதியிலுள்ள நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் சிலையடியில் இடம்பெற்றது.

இதன்போது விருந்தினர்களால் சோம சுந்தரப்புலவரின்சிலைக்கு மாலை அணிவிக்கபட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அவர் தொடர்பான சிறப்புரையினை ஆசிரிய ஆலோசகர் நிறைமதி நிகழ்த்தியிருந்தார்.

இந்நிகழ்வில் நகரசபை செயலாளர், நகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகள் மற்றும் மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் சிரட்டையில் ஆடிக்கூழும், கொழுக்கட்டையும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வண்ணாத்திப் பாலத்தடியில் விபத்து – ஏழு பேர் படுகாயம்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் - வண்ணாத்திப் பாலத்தடியில் நேற்று (17) மதியம் இடம்பெற்ற விபத்தில் ஏழு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

புத்தூர் வீதியினூடாகப் பயணித்த பிக்கப் ரக வாகனம் குறுக்கே சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றினைக் காப்பாற்ற முயற்சித்ததால் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் மற்றும் பிக்கப் ரக வாகனத்தில் பயணித்தவர்கள் என ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்தில் நால்வர் மேலதிக சிகிச்சைக்காக



யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# முல்லையில் நோய்வாய்ப்பட்டு காட்டுயானை ஒன்று உயிரிழப்பு



(விஜயரத்தினம் சரவணன)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், பெரியகுளம் வயல்வெளியில் நோய்வாய்ப்பட்டிருந்த காட்டுயானை ஒன்று நேற்று (17) உயிரிழந்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் காட்டுயானையொன்று நோய்வாய்ப்பட்டு வயல்வெளியில் வீழ்ந்திருந்த நிலையில், அந்தப் பிரதேச மக்களால் ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட வனஜீவரசிகள் திணைக்கள அலுவலகத்திற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வனஜீவராசிகள் திணைக்கள வைத்தியரும், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோத்தர்களும் நோய்வாய்ப்பட்ட யானைக்கு சிகிச்சை வழங்கியிருந்தனர். எனினும், சிகிச்சை பலனின்றி குறித்த யானை உயிரிழந்துள்ளது.

யானை நோய்வாய்ப்பட்டமை தொடர்பாக மேலதிக பரிசோதனைகளை வனஜீவராசிகள் திணைக்களம் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. சந்திவெளியில் வெடிபொருள் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு - சந்திவெளி பகுதி ஆற்றங்கரை பகுதியிலிருந்து கைவிடப்பட்ட வெடிபொருள் ஒன்றை நேற்று முன்தினம் (16) மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்திவெளி பிள்ளையார் ஆலய வீதியிலுள்ள ஆற்றங்கரைப் பகுதியிலிருந்து வெடிபொருள் ஒன்றை பொலிஸார் இராணுவத்துடன் இணைந்து மீட்டுள்ளனர்.

இது தொடர்பான மேதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# அரசாங்கத்தின் அடக்குமுறைகள் போராட்டங்களை பலப்படுத்தும்

## இலவசக் கல்வியை சவக்குழிக்குள் தள்ள வேண்டாமென மக்கள் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு




ஆரசாங்கத்தின் அடக்குமுறை நிகழ்ச்சிநிரல் ஆசிரியர்களின் நியாயமான போராட்டங்களை பலவீனப்படுத்துவற்கு மாறாக மேலும் பலப்படுத்துமென மக்கள் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அச்சங்கத்தினர் கஹவத்தை ரண்முத்து ஹோட்டலில் நேற்று (17) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அதன் உறுப்பினர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

24 வருட காலமாக நிலவிவரும் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டினை தீர்த்து அதிபர், ஆசிரியர்களுக்கான நியாயமான சம்பளத்தை வழங்குமாறு தொடர்ச்சியாக பல போராட்டங்கள் நடைபெற்றிருந்த போதிலும் இந்த அரசாங்கமும், இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்களும் அதற்கு செவிசாய்க்கவில்லை. கொவிட் -19 தொற்றுக்குப் பின் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலையை காரணங்காட்டி அதற்குத் தீர்வு வழங்காது தொடர்ச்சியாக இழுத்தடிப்பு செய்யப்படுகிறது. சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் வரை இடைக்கால கொடுப்பனவை வழங்குவதாக அரசாங்கம் கூறினாலும் இதுவரையில் அதனையும் வழங்கவில்லை. இந்நிலையில் கொவிட் -19 தொற்று காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் போது அதிபர், ஆசிரியர்கள் தங்களது சொந்த செலவில் ஒன்லைன் மூலமாக கற்பித்தலை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் ஆசிரியர்களுக்கு ஒன்லைன் மூலமாக கற்பித்தலுக்கு தேவையான வசதிகளை பெற்றுக் கொடுக்குமாறு மக்கள் ஆசிரியர் சங்கம் வற்புறுத்தி வந்தது.

அத்தோடு பொருளாதார ரீதியாக பலவீனமான பின்னணியை கொண்ட, கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் தொலைபேசியின்மை, தொழில்நுட்ப அறிவு போதாமை, இணைய வதியைப் பெற பணமின்மை, இணைய அலைவரிசை சிக்கல்கள் போன்றவை காரணமாக ஒன்லைன் மூலமாக கற்பித்தலில் எதிர்நோக்கும் பாதிப்புகள் குறித்தும் கல்வி அமைச்சும் உரிய உயர் அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தி வந்ததோம்.

இவ்வாறான சூழ்நிலையில் மேற்குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைப்பது மற்றும் பாடசாலையை உரிய சுகாதார பாதுகாப்புடன் மீண்டும் திறப்பதற்கு முயற்சிகளை விடுத்து அரசாங்கம் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைகழக சட்ட மூலத்தினூடாக கல்வியை இராணுவமயப்படுத்தவும் தனியார் மயப்படுத்தவும் முன்நகர்த்துவதற்கே முக்கியத்துவம் வழங்கியது. ஏற்கனவே கல்வியை தனியார் மயப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளை முன்னைய அரசாங்கங்களும், தற்போதைய அரசாங்கமும் மேற்கொண்ட நிலையில், அவை ஆசிரியர் தொழிற் சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரினதும் போராட்டங்களினால் முறியடிக்கபட்டிருந்தமை நினைவில் கொள்ளத்தக்கதாகும். கல்வியை இராணுவமயப்படுத்தவும், தனியார் மயப்படுத்தவும் முன்னைய அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரிய தொழிற்சங்க தலைவர்களையும், அரசியல் தலைவர்களையும் , சமூக செயற்பாட்டாளர்களையும் இவ்வரசாங்கம் சட்டவிரோதமாகவும், மனிதாபிமானமற்ற முறையிலும் கைதுசெய்து வழக்குத்தாக்கல் செய்துள்ளதை மக்கள் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. தமது இயலாமைகளை மறைப்பதற்காக தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு முரணாக அவர்களை தனிமைப்படுத்தி அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு மக்களின் நியாயமான போராட்டங்களை அடக்குவதற்கான முஸ்தீபுகளை நாம் காண்கின்றோம்.

இந்த அடக்குமுறை நிகழ்ச்சிநிரல் ஆசிரியர்களின் நியாயமான போராட்டங்களை பலவீனப்படுத்துவற்கு மாறாக மேலும் பலப்படுத்தும் என்பதை நாம் அரசாங்கத்திற்கு கூறிவைக்க விரும்புகின்றோம். இந்த பின்னணியில் பின்வரும் கோரிக்கைகளுடன் ஏனைய ஆசிரியர் சங்கங்களுடனும் இணைந்து நாம் முன்னோக்கி பயணிக்கின்றோம்.

இலவசக் கல்வியை சவக்குழிக்கு தள்ளி கல்வியை தனியார் மயப்படுத்தி இராணுவ மயப்படுத்தும் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்தை உடனே நிறுத்து,

இலவசக் கல்விக்கான உரிமை உட்பட மக்களின் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் கருத்துவெளியிடும் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடி எதிர்ப்பை தெரிவிக்கும் சுதந்திரம் ஆகிய அடிப்படை உரிமைகளில் கைவைக்காதே,

சம்பள முரண்பாட்டை தீர்த்து ஆசிரியர் அதிபர்களுக்கு நியாயமான சம்பளத்தை உடனே வழங்கு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91 விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42.
தொலைபேசி : 015 200 900/ 015 88 61 87
விளம்பரம் : 077 172 1680
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

# தடுக்கப்படவேண்டிய சிறுவர் மரணங்கள்!

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ரிஷாட் பதியுதீனின் வீட்டில் நீண்டகாலம் பணிபுரிந்த குறித்த சிறுமி, தீக்காயங்களுக்குள்ளான நிலையில் கடந்த 3 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், சிகிச்சை பலனின்றி கடந்த 15 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய நுவரெலியாவின் டயகம பகுதியைச் சேர்ந்த 16 வயது 8 மாதங்கள் வயதுடைய ஹிஷாலினி என்ற சிறுமியே இவ்வாறு மரணமடைந்துள்ளார். தீக்காயங்களுக்குள்ளான நிலையில் கடந்த ஜூன் 3 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இந்த சிறுமி அனுமதிக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளன. பொரளை பொலிஸாரால் இதுவரை 10 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. சிறுமி பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக முதற்கட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

மண்ணெண்ணெய் ஊற்றி தன்னைத்தானே எரித்துக்கொண்டாரென இந்த சிறுமி ஆரம்பத்தில் மருத்துவர்களிடம் தெரிவித்துள்ளார். ஆனால், என்ன காரணத்திற்காக அவர் இவ்வாறு செய்துகொண்டார் என்பது பற்றிய தகவல் அவரால் சொல்லப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அக்கரப்பத்தனை, டயகம 3 ஆவது பிரிவை சேர்ந்த 16 வயதான மேற்படி யுவதி வறுமை காரணமாக 7 ஆம் தரத்துடன் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளார்.

6 சகோதரர்களைக் கொண்ட குடும்பத்தில் மூன்றாமவரான இவருக்கு, மூத்த சகோதரன் ஒருவரும், சகோதரிகள் நால்வரும் உள்ளனர். சுமார் 7 மாதங்களுக்கு முன்னதாக தரகர் ஒருவரின் மூலம் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளதாக யுவதியின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். யுவதி தொழிலுக்குச் சென்றதன் பின்னர், ஒரு தடவை கூட அவரை சந்திப்பதற்கு அவர் பணியாற்றிய வீட்டார் அனுமதித்திருக்கவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

எனினும், அவர் மாதாந்தம் வீட்டுக்கு, பணம் அனுப்பிவந்ததுடன், அவ்வப்போது தொலைபேசி ஊடாகவும் வீட்டாருடன் பேசியுள்ளார். இறுதியாக வீட்டாருடன் தொலைபேசியில் பேசியபோது, அவ்வீட்டில் பணிபுரியும் சாரதியொருவர் தன்னைத் தாக்கினார் என அவர் கூறியதாக யுவதியின் சகோதரன் தெரிவித்துள்ளார்.

இந்த உயிரிழப்பு சம்பவம் தொடர்பில் தமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், பொலிஸார் உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுத்து உண்மையைத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் உறவினர்கள் கோரியுள்ளனர். இதேவேளை, சிறுமியின் உடலில், 72 சதவீதத்துக்கு மேற்பட்ட பகுதிகள் தீயினால் எரிந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுவருவதுடன், மேலதிக விசாரணைகளின் பொருட்டு ரிஷாட் எம்.பி.யிடமும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன. இச்சிறுமியின் உயிரிழக்கும் முன்பாக நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்குப் பணிப்பெண்ணாக சென்றபோது அவர் 16 வயதை பூர்த்திசெய்திருக்கவில்லை என தெரியவந்துள்ளது.

இந்த மலையக சிறுமியின் உயிரிழப்பினை சாதாரண ஒரு விடயமாகக் கடந்துசெல்ல முடியவில்லை. கொழும்பிலுள்ள பணக்காரர்களின் வீடுகளில் வேலைகளுக்கு மலையக யுவதிகளை அனுப்புவதென்பது நீண்டகாலம் நடந்துவரும் வியாபாரம். இப்படி ஒருவரை அனுப்பும்போது தரகராக செயற்படும் ஒருவருக்கு ஒரு தொகை பணம் கிடைக்கும். அதேபோல் வேலைக்குச் செல்லும் சிறுமி அல்லது யுவதியின் பெற்றோருக்கும் பணம் முதற்கட்டமாக கிடைக்கும். அதற்கப்பால் தேவைப்படும் நேரங்களிலெல்லாம் வேலை செய்யும் இந்த பிள்ளைகளின் வீடுகளுக்கு சென்று நிதியுதவிகளை பெறும் வசதி பெற்றோருக்கு உள்ளது.

பிள்ளைகளை கொழும்பு பங்களாக்களுக்கு அனுப்பும் பெற்றோர்கள் அவர்களைப் பற்றித் தேடிப் பார்ப்பதில்லை. பெரும்பாலான மலையக தந்தைமார் மதுப்பழக்கத்திற்கு அடிமையாக இருப்பதால் அவர்களுக்கு பணம் மட்டுமே கண்ணுக்குத் தெரியும் நிலைமை. மலையகத் தாய்மார் நாட்டுப் பொருளாதாரத்துடன், வீட்டுப் பொருளாதாரத்தையும் கவனிக்க வேண்டிய நிலையுள்ளதால் பிள்ளைகளின் நலனில் ஒரு கட்டத்திற்கு மேல் தலையிட முடியாத துயர நிலைமை அவர்களுக்குண்டு. இப்படி எல்லா பக்கங்களிலுமுள்ள குறைபாடுகள் காரணமாக மலையக இளவயதினர் கொழும்பில் குறைந்த சம்பளத்துடன் தொழில்செய்ய வேண்டிய நிலைமை தொடர்ந்துகொண்டிருக்கிறது. மலையகத்தில் கல்வி கற்க வசதியில்லாத இளவயதினரை இப்படி வேலைக்கு அனுப்புவதென்பது வியாபாரமாக நடந்துகொண்டிருக்கிறது.

அண்மையில் 15 வயது இளம் சிறுமியொருவர் பணத்திற்காக இணையத்தில் விற்கப்பட்டு அந்த சிறுமியை துஷ்பிரயோகம் செய்த பலர் கைதான சம்பவம் நடந்தது. அதுபோல் 13 வயதான சிறுமியொருவர் பலரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் குறித்தும் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், இச்சம்பவங்கள் தொடர்பில் குரலெழுப்ப பல தரப்புகள் இருந்தன. அவற்றின் சந்தேகநபர்களும் அடுத்தடுத்து கைதுசெய்யப்பட்டனர். ஆனால், மலையக சிறுமியொருவர் இரு வாரங்களாக தீக்காயங்களுடன் போராடி மாண்டிருக்கிறார். அவரைப்பற்றி பேச எவருமில்லை. மலையகத்தில் பெட்டிக்கடைகள் போன்று இருக்கும் அமைப்புகளும் சரி, அப்பகுதி அரசியல்வாதிகளும் சரி, இதுவிடயத்தில் மௌனம் காப்பதன் மர்மம் புரியவில்லை.

மலையகத்தின் இச்சிறுமி மட்டுமல்ல, நாட்டின் எப்பகுதியிலுமுள்ள எவருக்கும் இப்படியான அநியாயங்கள் நடந்துவிட அனுமதிக்க கூடாது. ஒருவரின் வறுமையே காலப்போக்கில் அவரின் சாவுக்கும் காரணமாக அமைந்துவிடக்கூடாது. சிறுவர்களை தொழிலுக்கு அமைத்தல் தொடர்பில் கடும் சட்டதிட்டங்கள் இருந்தாலும் அவை வெறுமனே ஏட்டுச் சுரைக்காயாக இருந்துவிடக் கூடாது. மலையகத்தின் இந்த சிறுமியின் மரணம் தொடர்பில் எடுக்கப்படும் காத்திரமான நடவடிக்கைகள், இனிமேலும் இப்படியான சம்பவங்கள் நடைபெறாத வகையில் பலரின் உயிரை காப்பாற்றுமென நம்புவோம்.

# நாட்டில் பஞ்சம் ஏற்படும்!



## ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. கூறுகிறார்

**நாட்டில் தற்போது உருவாகியுள்ள பொருளாதார நிலைமையைப் பார்க்கும்போது 1970 மற்றும் 1977 ஆம் ஆண்டுகளிலிருந்த பஞ்சநிலை நினைவுக்கு வருவதாகவும், அந்த சூழ்நிலையே மீண்டும் நாட்டில் உருவாகி வருவதாகவும், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார 'தமிழன்' வார இதழுக்குத் தெரிவித்தார்.**

**அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு,**

**கேள்வி : கொரோனா கட்டுப்பாட்டு விடயத்தில் அரசாங்கம் கையாளும் வேலைத்திட்டங்கள் திருப்தியளிக்கக் கூடியவையாக இருக்கின்றனவா?**

**பதில் :** எங்களின் அரசியல் செயற்பாடுகள் மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை மட்டுப்படுத்துவதற்காக கொரோனா தொற்று நோயை பிரதான காரணியாக வைத்துகொண்டு புதிய சட்டதிட்டங்களை அமுல்படுத்தும் முயற்சியையே அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

கொரோனாவை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாட்டு சட்டதிட்டங்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. நாவலப்பிட்டி நகரசபையின் புதிய தலைவராக அமல் பிரியந்த தெரிவுசெய்யப்பட்டதையடுத்து, கடந்த வியாழக்கிழமை அந்தப் பிரதேசத்தில் பெருந்திரளானவர்கள் ஒன்று திரண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எங்களின் கூட்டணி நடவடிக்கைகள் முறையாக இடம்பெற்று வருகின்றன. கூட்டணியமைத்து செயற்படுவதனூடாக அரசாங்கத்தால் விதிக்கப்படும் தடைகளுக்கு எதிராக செயற்படக்கூடியதாக இருக்கும். கொரோனா தொற்றுப்பரவலுக்கான தடைகளை விதிப்பதற்கு மாறாக கொரோனா தடுப்பூசிகளைக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் தொற்றுப்பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கூடியதாக இருக்கும்.

கொரோனா நோய் வீரியமடைய ஆரம்பித்து 17 மாதங்கள் கடந்தும், இதுவரையில் நாட்டின் 25 சதவீதமானவர்களுக்குக் கூட தடுப்பூசி வழங்கப்படவில்லை. இயலாமையை மறைப்பதற்காக அரசாங்கம் புதிய சட்டதிட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

இந்த தொற்றுப்பரலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமானால் தடுப்பூசி வழங்குவது மாத்திரமே தற்போதிருக்கும் ஒரேயொரு சிகிச்சை முறை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே தெரிவித்துள்ளார். இவ்வாறு இருக்கையில் தேவையான அளவு தடுப்பூசிகளை முறையாக வழங்காமல் நோய் கட்டுப்பாட்டுக்குள் வரப்போவதில்லை.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாடுகள் எந்த நிலைமையில் இருக்கின்றன?**

**பதில் :** அரசியல் கட்சி என்ற அடிப்படையில் எங்களின் பயற்சி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. மறுபுறம் கட்சியின் சகல பிரிவினரையும் கூட்டிணைக்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கிராம மட்டத்திலான கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. இன்றைய சூழ்நிலையில் நாட்டிலுள்ள பிரதான பிரச்சினைகளான அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, கொரோனா நிலைமை, எரிபொருள் விலை அதிகரிப்பு, உரப் பற்றாக்குறை ஆகிய விடயங்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தி வருகின்றோம்.

**கேள்வி : நாட்டிலுள்ள பொருளாதார நிலைமைகள் குறித்து அமைந்துள்ளனவா?**

**பதில் :** தோல்வி மிக்க பொருளாதார நிலைமையே தற்போது நாட்டில் உள்ளது. மக்களே சிரமத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 1970 மற்றும் 1977 ஆம் ஆண்டுகளில் நாட்டில் இருந்த பஞ்சநிலை மீண்டும் ஏற்படுவதற்கான சூழ்நிலையே தற்போது உருவாகி வருகின்றது. மக்களின் வாழ்க்கை வீத அதிகரிப்பை மாத்திரமே நாட்டின் அபிவிருத்தி என்று அரசாங்கம் எண்ணிக்கொண்டிருக்கிறது. வீடுகளை நிர்மாணித்துக்கொள்ளல், இலத்திரனியல் பொருட்களை கொள்வனவு செய்தல் போன்ற விடயங்களுக்கு அரசாங்கமே தடைவிதித்துள்ளது. நாடு மீண்டும் பழைய நிலைமையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது.

பொருட்களின் விலை அதிகரித்துள்ள நிலையில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மாறாக தமது இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

**கேள்வி : நாட்டில் கடந்த சில தினங்களாக அரசாங்கத்துக்கு எதிராக, போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தது. தற்போதுள்ள நிலைமையில் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்பதால் கொரோனா தொற்றுப் பரவல் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றனவே?**

**பதில் :** சுகாதார வழிகாட்டல்களுக்கமையவே நாங்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். திருமண வீடொன்றில் பங்குகொள்வதற்கு 150 பேருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கமுடியுமாக இருந்தால், ஏன் எங்களால் ஆர்ப்பாட்டம் செய்யமுடியாது? அரசாங்கத்தரப்பில் நூறு பேர் இணைந்து அடிக்கல் நாட்டும்போது ஏன் எதிர்த்தரப்பினரால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்க முடியாது?

எம்மை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காகவே இந்த அரசாங்கம் சட்டதிட்டங்களை வகுத்து வருகின்றது. பாதுகாப்பு நடைமுறைகளுடன் எங்களின் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வோம்.

**கேள்வி : அரசாங்கம், எதிர்த்தரப்பு மற்றும் சிவில் அமைப்பு என ஒவ்வொரு தரப்பினருக்கும் வெவ்வேறு நியதிகள் கையாளப்படுவதாக நீங்கள் கருதுகிறீர்களா?**

**பதில் :** அரசாங்கத்துக்கு உதவுபவர்களுக்கு ஒரு விதத்திலும், எதிர்க்கட்சிக்கு ஒரு விதத்திலுமே சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. 'ஒரே நாடு ஒரே நீதி' என்ற கொள்கையிலேயே ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தார். ஆனால், நாட்டில் நான்கு ஐந்து சட்டதிட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. நாட்டில் சமத்துவமொன்று இல்லை.

**கேள்வி : நாட்டில் ஆட்சிமாற்றமொன்று அவசியமென கருதுகிறீர்களா?**

**பதில் :** உரிய காலத்தில் உள்ளூராட்சி மன்றத்தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை நடத்தவேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. ஆட்சி மாற்றமொன்று ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பமும், வாய்ப்பும் எமக்கு வரும்போது உரிய நடவடிக்கை எடுப்போம்.

இந்த அரசாங்கத்துக்கு ஐந்து வருட ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 5 வருடங்கள் முழுமையடைவதற்கு முன்னரே தோல்வியைத் தழுவி வீடு திரும்பும் நிலையே உருவாகியுள்ளது.

**கேள்வி : ரணில் விக்ரமசிங்க மற்றும் பெசில் ராஜபக்ஷ ஆகியோரின் நாடாளுமன்ற வருகை தொடர்பில்?**

**பதில் :** ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றம் வந்துவிட்டார் என்பதற்காக எதுவும் மாறிவிடப்போவதில்லை. ரணிலுடன் 60 பேர் வரையில் இணைவார்கள் என்று கூறினார்கள். ஆனால், நாடாளுமனறத்தில் ரணில் மாத்திரம் தனியாகவே இருக்கிறார்.

பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் அவரே நாட்டில் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். தற்போது பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள நிலையை மக்கள் அவதானித்துக் கொண்டே இருக்கிறார்கள். அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்து, கடன் சுமையும் அதிகரித்துள்ளது. வங்கிகளும் நெருக்கடியை சந்தித்து வருகின்றன. தற்போது பெசில் ஆட்சிக்குள் நுழைந்துள்ளார். எதிர்வரும் காலங்களில் மிஞ்சியுள்ளவைக்கும் முடிவு கட்டிவிட்டுச் செல்வார். பெசில் ராஜபக்ஷ வந்தமைக்கு அவர் தொடர்பில் பிரசித்தமான காரணமொன்று இருக்கிறது. அந்த வேலை முடிந்தவுடன் திரும்பி விடுவார் என்று கருதுகிறோம்.

**கேள்வி : ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படும் எதிர்பார்ப்பு இருக்கிறதா?**

**பதில் :** ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள திருடர்களுடனும், மக்களால் நிராகரிப்பட்ட தலைவர்களுடன் இணைந்து செயற்படும் எதிர்பார்ப்பு எமக்கு கிடையாது. அடிமட்டத்திலிருந்து நேர்மையான தலைவர்கள் இருப்பார்களானால் அவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளோம்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்குள் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று சஜித் பிரேமதாச பல்வேறு கலந்துரையாடல்களின் போது தெரிவித்திருந்தார். அதற்கான வேலைத்திட்டங்கள் எதுவும் இருக்கிறதா?**

**பதில் :** ஒவ்வொரு பிரிவுக்கும் தனியான குழுவை நியமித்து, அந்தக் குழுக்களினூடாக சம்பந்தப்பட்ட பிரிவுகளிலுள்ள பிரச்சினைகள், அந்த பிரச்சினைகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது தொடர்பில் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றோம்.

குடும்ப ஆட்சியே நாட்டில் நிலவி வருகின்றது என்பதை சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் குரல் கொடுக்கும் உரிமையோ மற்றவர்களுக்கு அதிகாரமோ இல்லை. குடும்ப ஆட்சிப்பிடியில் இருக்கிறோம். அதனால், எமது நாட்டிலுள்ள நிபுணர்கள், கல்வியியலாளர்கள், அனுபவம்பெற்ற அரசியல்வாதிகளுடன் ஒன்றிணைந்து செயற்பட நாங்கள் எதிர்ப்பார்த்துள்ளோம்.

சந்தர்ப்பம் வரும்போது அதற்கான மாற்றுத் தீர்மானங்களை அறிவிப்போம். கட்சியின் கொள்கைக்கமைய, சகல இன மக்களுடன் ஒன்றிணைந்து இலங்கையர்கள் என்ற போர்வையில் ஆட்சிபுரிவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படும். அதேபோன்று, இலஞ்ச ஊழல்கள் நாட்டில் தொடர்ச்சியாக இருந்து கொண்டே வருகின்றன. சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்காமையே கடந்த அரசாங்கத்தின் பாரிய குறைபாடாகும். ஆகவே, குற்றவாளிகளைக் கைதுசெய்து, பொய் கூறியவர்களை மக்கள் மத்தியில் முன்னிறுத்தி சிறந்த பொருளாதாரக் கொள்கை கொண்ட நாடாக மாற்றுவோம்.

**கேள்வி : விரைவில் ரணில் விக்ரமசிங்க எதிர்கட்சித் தலைவராக தெரிவாவார் என்றும், ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும், அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருந்தார். இதில் உண்மைத் தன்மை உள்ளதா?**

**பதில் :** ரணில் விக்ரமசிங்கவை எதிர்க்கட்சித் தலைவராக்கி அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சி பதவிக்கு சிறந்தவர். ஆகவே, அவர் எதிர்க்கட்சித் தலைமையை ஏற்றால் அரசாங்கத்துக்கு ஏற்றவகையில் ரணிலுக்கும், மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான டீலை மேலும் வலுப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் செயற்படக் கூடியதாக இருக்கும். ஆனால், ஒருவர் மாத்திரம் இருந்துகொண்டு அவர் எப்படி எதிர்க்கட்சிக்கு தலைவராகப்போகிறார்?

**கேள்வி : தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறை ஆகியவற்றை மறுசீரமைப்பதற்கான நாடாளுமன்ற விசேட குழுவுக்கு மக்கள் சக்தியின் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா?**

**பதில் :** பல்வேறு முன்மொழிவுகளை முன்வைத்துள்ளோம். மாகாணசபை முறை உள்ளிட்ட தேர்தல் முறைகள் தொடர்பான ஆலோசனைகளை முன்வைத்துள்ளோம்.

**கேள்வி : நாட்டில் வெளிநாட்டுக் கடன் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில் :** வெளிநாட்டு கடன் தொடர்பான யோசனைகளை தேவைப்படும் சந்தர்ப்பத்தில் வெளியிட எதிர்பார்த்துள்ளோம். சிறியளவான வட்டியுடன் கூடிய கடன்தொகை இருக்கும்போது ஜப்பான், சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கிடைக்கவிருந்த கடன் என்பவற்றை நிறுத்திவிட்டு, அரசாங்கம் சீனாவிடமிருந்து அதிகளவான வட்டித் தொகையில் கடனைப் பெற்று வருகின்றது. ஆகவே, எமக்கு செலுத்தக்கூடிய தொகையை நிவாரண அடிப்படையில் பெற்றுக்கொள்ள வேண்டும். நாட்டிலுள்ள வளங்களை விற்பனை செய்யாமல் நாட்டை பலப்படுத்தும் வேலைத்திட்டமே முன்னெடுக்கப்படவேண்டும்.

இந்த செயற்பாடுகளை நிறுத்தி விற்பனைசெய்யப்பட்ட வளங்களை மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

**கேள்வி : எதிர்க்கட்சியால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களின்போது தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதே?**

**பதில் :** கடந்த வாரம் கடவத்தை, காலி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்த ஒவ்வொரு ஆர்ப்பாட்டங்களின்போதும் தமிழ்மொழி பயன்படுத்தப்பட்டிருந்தது.

**கேள்வி : நல்லாட்சி அரசாங்கத்தில் நீங்கள் சட்ட, ஒழுங்கு அமைச்சராக கடமையாற்றியிருந்தீர்கள். அப்போதிருந்த சட்ட ஒழுங்குகளுக்கும் தற்போதுள்ள நிலைக்கும் எவ்வாறான வித்தியாசத்தை அவதானிக்கிறீர்கள்?**

**பதில் :** அப்போது நாட்டில் பொதுவான நீதி இருந்தது. பொலிஸாருக்கு சுயாதீனமாக செயற்படும் உரிமை இருந்தது. ஆனால், இன்று அவ்வாறானதொரு நிலை கேள்விக்குறியாகியுள்ளது.

**கேள்வி : உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் ஐக்கிய மக்கள் சக்திக்கு பாதிப்பை ஏற்படுமா?**

**பதில் :** ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவாக செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை நீக்கிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளின் மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை நியமிக்கும் நடவடிக்கைகளே தற்போது இடம்பெற்று வருகின்றன. இதுவே, ஐக்கிய தேசியக் கட்சிக்கும், மொட்டுக் கட்சிக்கும் இடையிலுள்ள ஒப்பந்தமாகும்.

(உரையாடல் - நா.தினுஷா)

# பாம் எண்ணெய்: சத்தானது மற்றும் சிக்கனமானது, ஆனால் நியாயமற்ற தரவுகளால் அச்சுறுத்தப்படுகிறது

பாம் எண்ணெய் உலகில் அதிகம் நுகரப்படும் சமையல் எண்ணெய். ஆனால் உலகில் எந்த பிரபலத்திற்கும் ஏற்படுகின்ற கதியைப் போலவே, இது நல்லதா அல்லது கெட்டதா என்பது பற்றிய விவாதம் எழுந்துள்ளது. பெரும்பாலான விவாதங்களைப் போலவே, விவாதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உண்மைகள் தொடர்பில் தெளிவற்றவர்களாகவும், வெறும் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றவர்களாகவும், அகங்காரத்தின் பால் நாட்டம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆனால் விவாதத்தை வெல்லுவதற்கு ஒரே ஒரு விடயம் தான் இருக்கிறது, அதுதான் உண்மை! எனவே கட்டுக்கதைகளுக்கு எதிரான உண்மைகள் இங்கே தரப்பட்டுள்ளன. அவையாகவே உண்மையை வெளிப்படுத்துகின்றன.

## கட்டுக்கதை #1:

### பாம் எண்ணெய் தாவரங்கள் காடழிப்புக்கு காரணமாகின்றன - இலங்கையில் ஒருபோதும் கிடையாது!

உண்மையில், பாம் எண்ணெய் தாவரங்கள் பயிர் சுழற்சிக்கான பொருத்தமான மாற்றுப் பயிர் ஆகும், இது ஏற்கனவே செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர் அதன் பயன்தரும் காலம் முடிந்த பின்னர் மேற்கொள்ளப்படலாம். தற்போது, இலங்கையின் **ஒட்டுமொத்த விவசாய நிலங்களில் 12,000 ஹெக்டேயர் அல்லது 1.5% மாத்திரமே (நாட்டின் மொத்த நிலத்தில் 0.0018) பாம் எண்ணெய் தாவரங்கள் செய்கை பண்ணப்படும் நிலங்களாக காணப்படுவதுடன்,** அவை பெரும்பாலும் தற்போதுள்ள இறப்பர் அல்லது தேயிலைத் தோட்டங்களிலேயே அவற்றுக்குப் பதிலாக செய்கை பண்ணப்படுகின்றன. இதனால், அவை குறிப்பிடத்தக்க அளவு காடழிப்புக்கு துணை போவதில்லை. மறுபுறத்தே 202,000 ஹெக்டேயர் தேயிலை, 136,000 ஹெக்டேயர் இறப்பர் மற்றும் 440,000 ஹெக்டேயர் தென்னையுடன் இந்த நிலப்பரப்பினை ஒப்பிட்டுப் பார்த்தால் இதன் உண்மை புரியும். தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் ஆகியவற்றால் இந்த பயிர்ச்செய்கை கடுமையான ஒழுங்குமுறைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. இன்றுவரை பாம் எண்ணெய் தாவர செய்கை காரணமாக எவ்விதமான காட்டு நிலங்களும் பயிர்ச் செய்கை நிலங்களாக மாற்றப்பட்டது கிடையாது.

## கட்டுக்கதை #2:

### பாம் எண்ணெய் தாவர செய்கை மழைவீழ்ச்சியைப் பாதிக்கிறது, நிலத்தடி நீரைக் குறைக்கிறது - முற்றிலும் தவறானது!

இதில் எந்த உண்மையும் கிடையாது. **உண்மையில், பாம் எண்ணெய் தாவர செய்கை பண்ணப்படாத இடங்களை விட அவை செய்கை பண்ணப்படுகின்ற பகுதிகளில் அதிகரித்த மழைவீழ்ச்சி கிடைப்பதற்கான** சான்றுகள் உள்ளன. மழைவீழ்ச்சி முக்கியமாக பருவப்பெயர்ச்சி மழைக்காலங்களால் தீர்மானிக்கப்படுகிறது. பாரிய பிரதேசத்தின் மத்தியில் குறிப்பிட்ட பிரதேசமொன்றில் ஏற்படும் காலநிலை மாற்றங்கள் பருவமழை மற்றும் இடைக்கால பருவ மழையை பாதிக்கக்கூடும், ஆனால் 12,000 ஹெக்டேயர் பாம் எண்ணெய் செய்கை போன்ற சிறிய அளவுகளில் அத்தகைய பாதிப்புக்களுக்கு வாய்ப்புக்கள் கிடையாது. மேலும், 50 ஆண்டுகளுக்கும் மேலாக காலியிலும், 100 ஆண்டுகளுக்கும் மேலாக மலேசியாவின் அனேகமான பாகங்கள் மற்றும் இந்தோனேசியாவிலும் இது செய்கை பண்ணப்பட்டு வருகின்ற நிலையில், பயிர் தொடர்பான நீர் பற்றாக்குறை எதுவும் இது வரையில் முறையிடப்படவோ அல்லது அவதானிக்கப்படவோ இல்லை.

உண்மையில் புள்ளி விபரங்களின் அடிப்படையில் இதைப் பார்க்கும்போது, 1 ஹெக்டேயர் நிலப்பரப்பிலுள்ள இறப்பரில் தினசரி ஆவியாதல் தூண்டுதல் சுமார் 31,500 லீட்டர் ஆகும், அதனுடன் ஒப்பிடுகையில் பாம் எண்ணெய் தாவரங்களின் மூலமாக 34,680 லீட்டர் ஆவியாதல் தூண்டலை ஏற்படுத்துகின்றது. இது குறிப்பாக இறப்பருடன் ஒப்பிடும் போது ஹெக்டேயர் ஒன்றுக்கு குறைவான எண்ணிக்கையான பாம் எண்ணெய் தாவரங்களே காணப்படுவதால் ஆவியாதல் தூண்டல் வீதம் ஒப்பீட்டளவில் சிறிய வேறுபாடாகும். சராசரியாக ஆண்டுக்கு 3,500 மிமீ மழைவீழ்ச்சி நிலவும் பகுதிகளில் மட்டுமே பாம் எண்ணெய் தாவரங்கள் பயிரிடப்படுகின்றன, மேலும் பயிர் மூலமான ஆவியாதல் தூண்டுதல் ஆண்டுக்கு 1,300 மிமீ வரையாக மாத்திரமே காணப்படுகின்றது.

PALM OIL INDUSTRY ASSOCIATION

## கட்டுக்கதை #3:

### பாம் எண்ணெய் ஆரோக்கியமற்றது! இதில் செறிவுள்ள கொழுப்பு நிரம்பியுள்ளது! - இல்லை இது உண்மை கிடையாது.

ஆம், பாம் எண்ணெயில் 50மூ நிறை கொழுப்பு உள்ளது, இருப்பினும் தேங்காய் எண்ணெய் உட்பட பொதுவாக பயன்படுத்தப்படும் ஏனைய சமையல் எண்ணெய் வகைகளுடன் ஒப்பிடும்போது இது குறைந்த அளவாகும். உண்மை என்னவென்றால், பாம் எண்ணெய் பொதுவாக **கொழுப்பின் ஆரோக்கியமான ஒரு மூலமாகும்,** இது ஏராளமான ஒற்றை-செறிவிலா கொழுப்புகள் மற்றும் சில பல்செறிவிலா கொழுப்புகள் (“நல்ல” கொழுப்பு), அதிக செறிவுள்ள **கரோட்டின் வகையினங்கள் மற்றும் விட்டமின் ஈ** ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இப்போது பிரபலமான ஒரு தீய பேசுபொருளாக மாறிவிட்ட பூசண நச்சு (அ.ஃப்லாடொக்சின்) இனால் மாசுபாட்டிற்கு உள்ளாக்கப்பட முடியாதது. கூடுதலாக, இது அதிக வெப்பநிலையில் அதன் வேதியியல் கட்டமைப்பை நிலைகுலையாமல் பேணுவதால், **சமையல், பேக்கிங் மற்றும் பொரிக்கவும் ஏற்றதாக** அமைகிறது.

பாம் எண்ணெய்க்கான உலக சந்தை பல ஆண்டுகளாக சீரான வேகத்தில் வளர்ச்சி கண்டு வருகிறது, இது தற்போதைய உலகளாவிய சமையல் எண்ணெய்கள் சந்தையில் 65மூ சந்தைப் பங்கினைக் கொண்டுள்ளது. பாம் எண்ணெய் எதிர்மறையான உடல்நல பாதிப்புகளைக் கொண்டிருந்தால், இந்த அளவுக்கு பயன்பாடு அதிகமாக இருக்காது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## கட்டுக்கதை #4:

### கட்டுக்கதை சூ 4: இலங்கையில் பாம் எண்ணெய் பேண்தகமை கொண்டதல்ல! - இது உண்மை கிடையாது. உண்மையில், இதற்கு நேர்மாறானது!

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இலங்கையில் பாம் எண்ணெய் தாவரம் **பொருளாதார ரீதியாக மிகவும் சாத்தியமான** ஒரு பயிர் ஆகும், மற்ற பயிர்களுடன் ஒப்பிடும்போது **தலாவீத ஹெக்டேயருக்கு முதலீட்டிற்கான மிகவும் கூடுதலான** வருமானம் கிடைக்கும். பாம் எண்ணெய் தாவரம் **செல்வத்தையும், மதிப்புச் சங்கிலிகளையும், சமூகங்களையும் வறுமையிலிருந்து கைதூக்கி விடும்** ஆற்றலையும் கொண்டுள்ளது. உள்நாட்டு சமையல் எண்ணெய்களுக்கான தேவை இரண்டு பிரிவுகளிலிருந்து வெளிவருகிறது: வீடுகள் மற்றும் தொழிற்துறைகள் என இரு பிரிவுகளாகும். ஆண்டு நுகர்வோர் தேவை சுமார் 96,249 மெட்ரிக் தொன் மற்றும் தொழிற்துறையின் தேவை சுமார் 167,372 மெட்ரிக் தொன் என மதிப்பிடலாம். தேங்காய் மண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் ஆகியன ஒன்றாக 156,108 மெட்ரிக் தொன் சமையல் எண்ணெயை வழங்கும் என்று எதிர்பார்க்கலாம், இதனால் 107,513 மெட்ரிக் தொன் எண்ணெய்க்கான பற்றாக்குறை உள்ளது, அவை இறக்குமதி செய்யப்பட வேண்டும் அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, பாம் எண்ணெயின் உலகளாவிய நுகர்வு 75.45 மில்லியன் மெட்ரிக் தொன் ஆக காணப்படுவதுடன், இது தொடர்ந்து அதிகரித்து வருகின்ற நிலையில், சமையல் எண்ணெய் வகைகளில் மிக உயர்ந்த வீதமாகவும் காணப்படுகின்றது. இதற்கு அடுத்த ஸ்தானங்களிலுள்ள எண்ணெய் வகைகளுக்கும் இதற்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுவதுடன்,





சோயா அவரை எண்ணெய் 60 மில்லியன் மெட்ரிக் தொன்னுக்கும் குறைந்த அளவில் 2 ஆவது ஸ்தானத்திலும், மற்றும் தேங்காய் எண்ணெய் வெறும் 3.67 மில்லியன் மெட்ரிக் தொன் அளவில் அதற்கு அடுத்த ஸ்தானத்திலும் காணப்படுகின்றன. எனவே, உலகளாவிய சந்தை தேவைப்பாடும் உள்ளது.

## கட்டுக்கதை #5:

### பாம் எண்ணெய் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கிறது - நிச்சயமாக இல்லை. இது அவர்களை மேம்படுத்த உதவும் வாய்ப்பினைக் கொண்டுள்ளது.

பாம் எண்ணெய் தாவர விவசாயிகள் மாதத்திற்கு சராசரியாக ஷரூபா 65,000 தொகையை சம்பாதிக்கின்றனர். தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில், சராசரியாக அந்த தொகை ஷரூபா 30,000 முதல் ஷரூபா 35,000 வரையில் காணப்படுகின்றது. இது விவசாயிகளின் வாழ்க்கையை எவ்வாறு அழிக்கும்? இலங்கையில் **கூலித் தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க** பாம் எண்ணெய் தாவரச் செய்கை ஒரு தீர்வாகும்.

பாம் எண்ணெய் தாவர தோட்டங்கள் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்துகின்றன என்றும் சிலர் குற்றம் சாட்டுகின்றனர். இது பாம் எண்ணெய் தாவர தோட்டங்களுக்கு மட்டுமல்ல, இலங்கையில் உள்ள அனைத்து தோட்டங்களைப் பொறுத்தவரையில் பொய்யானது என்பதை திட்டவட்டமாகக் கூறலாம்.

பாம் எண்ணெய் பற்றிய உண்மைத் தரவுகளை இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம் இலங்கையில் பாம் எண்ணெய் ஆனது சமையல் எண்ணெயைப் பொறுத்தவரை தன்னிறைவு காண்பதற்கு மிகவும் பேண்தகமை கொண்ட, உயர் மட்டத்தில் சிக்கனமான வழிமுறையாகக் காணப்படும் அதே நேரத்தில் கிராமப்புற சமூகங்களுக்கு சமூக மற்றும் பொருளாதாரரீதியான முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

# விடுதலையானாலும் போராட்டம் தொடரும்!

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பேட்டி

**உரையாடல்: யோ.தர்மராஜ்**

### மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டமைக்கு அரசே முழுப்பொறுப்பேற்க வேண்டும்

### சுகாதாரத்துறையைப் பயன்படுத்தி பொலிஸார் அதிகாரத்தை செலுத்துகின்றனர்.

### 40 வீதமான மாணவர்களுக்கே ஒன்லைன் கல்வி

### கொத்தலாவல சட்டத்தால் இலவசக் கல்விக்கு ஆபத்து, நிறைவேற்ற இடமளியோம்



**ஆசிரியர்கள் ஒன்லைன் கல்வியை நிறுத்தியுள்ளமை, எங்களை விடுவிப்பதற்கான போராட்டம் மட்டுமல்ல. அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்குமாறு கோரியுமே இந்தக் கற்றல் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. நாங்கள் விடுதலை செய்யப்பட்டாலும், ஆசிரியர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் வரை இந்தப் போராட்டம் தொடருமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.**

**'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.**

**கே: கொத்தலாவல பாதுகாப்பு சட்டமூலத்திற்கு எதிராகப் போராடிய உங்களை பலவந்தமாகவா தனிமைப்படுத்தியுள்ளனர்?**

ஆம். கைதுசெய்யப்பட்ட நாம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும், 14 நாட்கள் சிறைப்படுத்தவும், 14 நாட்கள் தனிமைப்படுத்தவும் பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் நீதிமன்றம் நிராகரித்தே எங்களை விடுவித்தது.

விடுதலை செய்யப்பட்ட எங்களை நீதிமன்ற வளாகத்தில் வைத்து பலவந்தமாக இழுத்து பஸ்ஸில் ஏற்றி முல்லைத்தீவிலுள்ள விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தியுள்ளனர். இங்கு வரும் வரை எங்களை எங்கு அழைத்துச் செல்கின்றார்கள் என்றே தெரியாது. இவ்வாறு பலவந்தமாக அழைத்துச் சென்று தனிமைப்படுத்துவதற்கு எவ்வித சட்ட ரீதியான விதிமுறையும் இல்லை. இது அநீதியான செயற்பாடாகும்.

குறிப்பாக, தனிமைப்படுத்தல் சட்டத்தை பயன்படுத்தியே அரசாங்கம் இவ்வாறான அடக்குமுறை செயற்பாடுகளுக்குச் சென்றுள்ளது.

**கே : உங்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைக்கு அமையவே தனிமைப்படுத்தியதாக அமைச்சரவைப் பேச்சாளர்கள் தெரிவித்தனரே?**

அது அப்பட்டமான பொய். நாங்கள் நீதிமன்றத்திலிருந்து வெளியில் வந்த போது எந்தவொரு சுகாதார பரிசோதகரும் அங்கு இருக்கவில்லை. மாறாக, பலவந்தமாகவே எங்களை தனிமைப்படுத்தலுக்கு அழைத்துவந்தனர். இங்கு நாங்கள் 8 நாட்களுக்கு மேலாக இருக்கின்றோம். எனினும், இதுவரை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட எந்தவொரு சுகாதார தரப்பினரும் எங்களை வந்து பார்க்கவே இல்லை.

**கே : ஆசிரியர்கள் உங்களை விடுதலை செய்யுமாறு கோரி, ஒன்லைன் கல்வியை முன்னெடுக்காதிருப்பது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

ஆசிரியர்கள் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டம் என்னை விடுவிப்பதற்கான கோரிக்கை மாத்திரமல்ல. மாறாக, நாட்டில் ஜனநாயக அடக்குமுறைக்கு எதிரான போராட்டமாகவே இது அமைந்துள்ளது. மேலும், பேச்சு சுதந்திரத்தை நசுக்கும் அரசின் செயற்பாடுகளுக்கு எதிராகவும் அதிபர்கள், ஆசிரியர்களின் தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாப்பதற்கான போராட்டமாகவே இதனை முன்னெடுக்கின்றனர். மாறாக, எங்களை விடுவிக்கக் கோரி மாத்திரம் ஒன்லைன் கல்வி நிறுத்தப்படவில்லை.

மேலும், கொரோனா தொற்று ஏற்பட்டது தொடக்கம் ஒரு வருடமும் 3 மாதங்களும் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

குறிப்பாக, அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட இந்த ஒன்லைன் கல்வி முறைமையிலும் கூட 40 வீதமானவருக்கே கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது. ஏனைய 60 வீதமானவருக்கு கற்றல் செயற்பாடுகளிலும் ஈடுபட முடியாதிருந்தது. ஏனைய 40 வீதமானோரிலும் முறையான இணைய வசதிகளின்றி அரைகுறை கற்றலே முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஒன்லைன் கல்வியையும் ஆசிரியர்களின் சொந்தப் பணத்தைக் கொண்டே முன்னெடுக்கின்றனர். இதற்கு அரசாங்கம் எவ்வித வசதிகளையும் வழங்கவில்லை. மாணவர்களின் கல்விக்காக அரசாங்கத்தினால் எதுவும் செய்யாதிருந்த போது, ஆசிரியர்களின் சுய விருப்பத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒன்லைன் கல்வி செயற்பாடு குறித்து அரசாங்கம் எவ்வித குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாது.

**கே : ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தால் அரசாங்கத்திற்கு நஷ்டமில்லை. மாறாக மாணவர்களுக்கே நஷ்டம் என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

60 வீதமான மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் எவ்வித கல்வியையும் வழங்க முடியாத நிலையில், ஆசிரியர்களின் சொந்த விருப்பத்திலேயே இந்த ஒன்லைன் கல்வி செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் ஆசிரியர்கள் ஒன்லைன் கற்றலை நிறுத்திய போது, சமூகத்திற்குள் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்குமாக இருந்தால் அரசாங்கம் மாணவர்களின் கல்விக்காக எதனையும் செய்யவில்லை என்பதே தெளிவாகியுள்ளது.

ஆசிரியர்கள் முன்னெடுத்துள்ளமை வேலைநிறுத்தமல்ல. சுயமாக முன்வந்து எடுத்த கற்றல் நடவடிக்கையை நிறுத்தியுள்ளோம். எங்களுக்குப் பணம் கொடுத்து, ஏனைய வசதிகளையும் வழங்கியிருந்தால் நாங்கள் முன்னெடுத்தது ஒரு கடமையாக இருந்திருக்கும். ஆனால், இது எங்களுடைய கடமையுமில்லை. நாங்கள் விரும்பி முன்னெடுத்த ஒன்றை நாங்களாகவே நிறுத்தியுள்ளோம்.

நாங்கள் ஒன்லைன் கல்வியை நிறுத்தியும் அரசாங்கம் எங்களுடைய கோரிக்கைகளுக்கு எவ்வித பதிலையும் வழங்கவில்லையென்றால், மாணவர்களின் பாதிப்புக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

**கே: சுயமாக முன்வந்து நீங்களாக முன்னெடுத்த கற்றல் நடவடிக்கையை திடீரென நிறுத்தியுள்ளமையால் மாணவர்கள் இன்று வீதியிலிறங்கிப் போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனரே?**

மாணவர்களின் கல்விக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்குமாக இருந்தால் அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். மாணவர்களின் கல்வி குறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்பதே இதிலிருந்து தெளிவாகின்றது.

மாணவர்களின் கல்விக்கு தற்போது மாத்திரம் பாதிப்பு ஏற்படவில்லை. ஆரம்பத்திருந்தே மாணவர்களின் கல்விக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறைந்தது எங்களால் மாணவர்களுக்கு இயன்ற கல்வியை வழங்க முடிந்தது. இந்த நிலையில், மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்காத நிலையில், ஆசிரியர்கள், மாணவர்களின் கல்வியை நாசமாக்கியவர்கள் என ஊடக பேச்சாளர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.



ஆனால், மாணவர்களின் கல்விக்கு எதனையும் செய்யாத இந்த அரசாங்கத்திடம் நாங்கள் ஏன் இவ்வாறு தூற்றல்களை வாங்க வேண்டும்? முடிந்தால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்விக்கு அரசாங்கம் உரிய தீர்வை வழங்க வேண்டும்.

**கே : தனிமைப்படுத்தப்பட்டுள்ள உங்களை விடுவிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா?**

எங்களை கடந்த 9 ஆம் திகதி இங்கு அழைத்துவந்தனர். 11 ஆம் திகதி எங்களுக்கான பி.சி.ஆர். முடிவுகள் வெளிவந்ததில் எங்களில் யாருக்கும் கொரோனா தொற்றிருப்பதாக உறுதி செய்யப்படவில்லை. அவ்வாறிருந்தும் எங்களை இதுவரை விடுவிக்காதிருப்பது ஏன்? இது தனிமைப்படுத்த அல்ல. பலவந்தமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளோம். எங்களில் யாருக்கேனும் கொரோனா தொற்றிருந்து தனிமைப்படுத்தி வைத்திருப்பார்களாயின் அதனை ஏற்றுக்கொள்ள முடியும். மாறாக, நீதிமன்றமே எங்களை விடுக்குமாறு கோரியும் பொலிஸாரே எங்களை பலவந்தமாக தடுத்துவைத்துள்ளனர்.

**கே : நீங்கள் வெளியில் வரும் வரை மாணவர்கான கல்வி கற்றல் நிறுத்தப்படுமா?**

எங்களை விடுவிப்பதற்கான போராட்டமல்ல. அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையையும் தீர்க்குமாறு கோரியுமே இக்கற்றல் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இது எங்களுடைய விடுதலைக்கும் அப்பாலான போராட்டாகும். நாங்கள் விடுதலை செய்யப்பட்டாலும் ஆசிரியர்களின் பிரச்சினையைத் தீர்க்கும்வரை இந்தப் போராட்டம் தொடரும்.

**கே : சில தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள்ஒன்லைன் கற்கைநெறிகளை முன்னெடுக்கின் றனரே? அவர்கள் உங்களுடன் இணையாமைக்குக் காரணமென்ன?**

எந்தவொரு போராட்டத்தின் போதும் சில சில காட்டிக்கொடுப்புகள் இருக்கத்தான் செய்யும். நாங்கள் சமூகத்திற்காகவே குரல் கொடுக்கின்றோம். இந்தக் குரலில் நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு வீதமானவர்களே இவ்வாறு போராட்டத்தில் இணையாதுள்ளனர். எனினும், அவர்களும் சில நாட்களில் எங்களோடு இணைவார்கள்.

**கே : கொத்தலாவல பாதுகாப்பு சட்டத்தில் அப்படி என்னதான் இருக்கிறது?**

ஒரு பக்கத்தில் கல்வி இராணுவமயமாக்கப்படுவதுடன், மறுபக்கத்தில் கல்வியைத் தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சியாக இது காணப்படுகின்றது. இந்த கொத்தலாவல சட்டத்தால் இலவசக் கல்விக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதாலேயே ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர்கள் சங்கம் என்பன ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுத்துள்ளன. இது இலவசக் கல்வியை பாதுகாப்பதற்கான போராட்டமாகும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை வலுவிழக்கச் செய்து, பாதுகாப்புச் செயலாளர் அல்லது முப்படைத் தளபதிகளில் யாரேனும் ஒருவரை பல்கலைக்கழகத்திற்னான தலைவராக ஜனாதிபதியால் நியமிக்க முடியும். அத்துடன், இந்த சட்டமூலத்தினால் கல்வி நிர்வாகம் முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும்.

அதன்படி, எவ்வாறான பட்டப் படிப்புகளை முன்னெடுக்க வேண்டும், என்பதை இராணுவமே தீர்மானிக்கும். மேலும், இந்த சட்டமூலத்தினால் மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்தை (பட்டிக்லோ கம்பஸ்) கூட இதன் ஒரு கிளையாக மாற்ற முடியும். இதனூடாக இராணுவத்தின் கீழ் கல்வியைக் கொண்டு செல்ல முடியும். குறிப்பாக, இந்த சட்டமூலம் இராணுவத்தினருக்கு கல்வி வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட நிலையில், தற்போது ஏனையோரையும் இணைப்பதனூடாக கல்வியை இராணுவமயமாக்குவதுடன், தனியார் மயமாக்குவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் இனி பணத்துக்காகவே பட்டப்படிப்புகளை வழங்க முடியும்.

**கே: அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருக்கும்போது கொத்தலாவல சட்டத்தை நிறைவேற்ற முடியாதவாறு உங்களால் தடுக்க முடியுமா?**

அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருக்கின்றது என்பதற்பாக மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை அதனால் முன்னெடுக்க முடியாது. மக்களுக்கு என்ன தேவை என்பதை மக்களாலேயே தீர்மானிக்க முடியும்.

**கே : ஒருவேளை கொத்தலாவல சட்டம் நிறைவேற்றப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**

நிச்சயமாக நிறைவேற்ற இடமளிக்கமாட்டோம். இதற்கு முன்னர் ஆறில் ஐந்து பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கத்தால் வட கொழும்பு மருத்துவ பீடம் ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதுவும் மக்கள் போராட்டதால் இல்லாதொழிக்கப்பட்டது. அதன் பின்னர் சைட்டம் கொண்டுவரப்பட்டது. அதுவும் மக்கள் போராட்டத்தினாலேயே கைவிடப்பட்டது. தற்போதும் அதேபோன்றதொரு செயற்பாடே முன்னெடுக்கப்படுகின்றது. அரசாங்கம் எவ்வாறான தீர்மானங்களைக் கொண்டுவந்தாலும் மக்களுக்கான இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்கு நாங்கள் தொடர்ந்து போராடுவோம். குறிப்பாக, நாங்கள் வெல்லும் வரை இந்த போராட்டத்தை முன்னெடுப்போம்.

**கே : உங்களது போராட்டத்துக்குப் பின்புலத்தில் அரசியல் சக்தி இருப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணி உங்களை இயக்குவதாக குற்றஞ்சாட்டப்படுவது குறித்து?**

நாங்கள் சுதந்திரமானதொரு தொழிற்சங்கம். வடக்கில் போராட்டத்தை முன்னெடுத்தால் அங்குள்ள தமிழ் கட்சிகளின் முத்திரையை குத்துவார்கள். அல்லது டயஸ்போராக்கள் எனப் பெயர் சூட்டுவார்கள். தெற்கில் போராட்டத்தை முன்னெடுத்தால் ஜே.வி.பி. அல்லது ஏனைய சோஷலிசக் கட்சிகளின் பெயர்களை சொல்வார்கள். எனினும், அரசாங்கம் எவ்வாறான முத்திரைகளை எங்களுக்குக் குத்தினாலும் நாங்கள் யார் என்பது மக்களுக்கு தெரியும்.

**கே : தனிமைப்படுத்தல் கைதுகளில் பொலிஸார் மீது குற்றம் சாட்டுவது பொருத்தமற்றது என பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளாரே?**

சுகாதாரத்துறையைப் பயன்படுத்தி பொலிஸார் அதிகாரத்தை செலுத்துகின்றனர். ஆகவே, அமைச்சர் சரத் வீரசேகர கூறுவதை யாரும் நம்ப மாட்டார்கள். அவர் எப்போதும் பச்சைப் பொய்யை மாத்திரமே கூறுவார். நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, அவர் பொய்யானதையே கூறுவார். எங்களை பொலிஸாரே இங்கு அழைத்துவந்தனர். அழைத்து வந்ததற்கான பட்டியல் கூட பொலிஸாரிடமில்லை. அப்படியாயின் இது எவ்வாறு தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு அமை முன்னெடுக்கப்பட்ட கைது எனக் கூற முடியும்?

**(ஜோசப் ஸ்டாலினுடனான இந்தப் பேட்டி அவர் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்த போது எடுக்கப்பட்டதாகும்.)**

# கொரோனா நோய்ப்பரவல் காலத்தில் வைத்தியசாலை செல்லும் சாதாரண நோயாளிகளின் நிலை

**வைத்திய கலாநிதி மு.சக்திலேந்திரன்**



**மத்திய கொழும்பு மாவட்ட வைத்தியசாலை மாளிகாவத்தை கொழும்பு – 10**

கொரோனா நோய்ப்பரவல் காலத்தில் வைத்தியசாலைகளுக்கு மாதாந்த சிகிச்சை நிலையத்திற்கு வருவோர், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோர் மற்றும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுவோர் பரம்பலில் பாரிய வேறுபாடு ஏற்பட்டுள்ளமை, இக்காலத்தில் பெரிய சவாலுக்கு முகங்கொடுக்குமளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நோயாளிகள் வைத்தியசாலைக்கு வருவதை குறைத்துக்கொள்வதால், வீட்டில் பல்வேறு நோய் உபாதைகளும், தொற்றா நோய்களான நீரிழிவு, உயர்குருதியமுக்கம், சிறுநீரகக் கோளாறு, இதயநோய் என்பவற்றின் தீவிர சிக்கல் நிலைகளுக்கு முகங்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நோய்ப்பரவல் காலத்தில் முறையாக சிகிச்சை நிலையங்களுக்கு செல்பவர்கள் கூட இரத்தம் சோதிக்காமல், உடல்நிலை கணித்தறியும் குருதியமுக்கம், நிறை மற்றும் ஏனைய காரணிகளை அளவிடாமல் மருந்துகளைத் தொடர்ந்தும் வெறுமனே குடிப்பதால் பாரதூரமான விளைவுகளான மாரடைப்பு, சீறுநீரகக் கோளாறு, சுவாசக் கோளாறு, கோமா, நுரையீரல் அழற்சி போன்றவற்றுக்கு உள்ளாவதுடன், முறையான நேரத்தில் வைத்தியசாலைக்கு செல்லாததால் வீட்டிலேயே மரணம் ஏற்படும் துர்ப்பாக்கியமான சூழ்நிலைகளும் கடந்த ஒன்றரை வருடத்தில் ஏராளமாக இடம்பெற்றன. மற்றைய சாராரின் பிரதான பயம் பி.சி.ஆர். சோதிப்பது. வைத்திய விடுதியில் அனுதித்துவிடுவார்களோ, பி.சி.ஆர். செய்துவிடுவார்களோ, பி.சி.ஆர். பொசிட்டிவ் என்று பெறுபேறு வந்துவிடுமோ என்று அச்சம் கொள்கின்றனர்.

இதனாலேயே நேரத்துக்கு மருத்துவமனைக்கு விரைந்து சிகிச்சை பெறுவதில் தாமதமேற்படுவதுடன், நோய் முற்றிய நிலையில் (நிறைய நாட்களுக்குப் பிறகு) வைத்தியசேவையை நாடும்போது, நோயைக் குணமாக்குவதில் சுகாதாரப் பிரிவினருக்கு பல சவால்களும், இதன் நிமித்தமான சுகாதாரத்துக்கான பொருளாதார செலவும் மறைமுகமாக அதிகரிக்கின்றன.

சிலர் வைத்தியசாலைகளுக்கு (இந்த நோய்ப்பரவல் காலத்தில்) சிறு சிறு உபாதைகளுக்காக வந்து தேவையற்ற விதத்தில் அதிகமாக வைத்திய சேவை பெற முனைகின்றனர். வைத்தியசாலைகளுக்கு தேவையற்ற விதத்தில் வருவதனை இயலுமானவரை குறைத்துக்கொள்ளுங்கள். தேவையானபோது வைத்தியசாலைகளுக்கு செல்வதில் தயக்கம் காட்டவேண்டாம். உங்களுக்கு தீராத உடல் உபாதை, காய்ச்சல், தலைவலி, உடல்வலி, உணவில் நாட்டமின்மை, சோர்வு, வாந்தி, வயிற்றோட்டம் என்ற அறிகுறிகள் வந்தாலோ, கொவிட் என உறுதிப்படுத்தப்பட்ட நோயாளியொருவருடன் 15 நிமிடங்களுக்கு மேல் ஒரு மீற்றர் இடைவெளிக்குக் குறைவாக முகக்கவசமின்றி தொடர்பில் இருந்தாலோ அல்லது குடும்ப உறுப்பினர்களில் யாராவது ஒருவருக்கு பி.சி.ஆர். பொசிட்டிவ் என முடிவு வந்தாலோ நிச்சயமாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று பி.சி.ஆர். பரிசோதனை செய்துகொள்ளுங்கள்.


பலர் பி.சி.ஆர். பரிசோதனைகளைத் தவிர்க்க காரணம், தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பிவிடுவார்களென்ற அச்சமேயாகும். இதனால் நோய்ப்பரவல் அதிகரிப்பதுடன், உண்மையை நீங்கள் மறைத்து வாழ்ந்தால் உங்கள் கண்ணுக்குத் தெரியாமலேயே உங்கள் நோய்த் தீவிரம் அதிகரித்து நுரையீரல் அழற்சி, நுரையீரல் செயற்படாமை போன்ற ஆபத்துகள் ஏற்பட இடமுண்டு.

நோய்க் குணங்குறிகளை பி.சி.ஆர். செய்துவிடுவார்களென்ற பயத்தின் காரணமாக மறைக்க வேண்டாம்.

கொரோனா நோய்த்தடுப்பூசியை முறையாகப் போட்டுக்கொள்ளுங்கள். அது நோய் ஏற்பட்டால் கூட நோய் தீவிர நிலையடைவதையும், மற்றோரிடையே நோய்ப்பரவலையும் தடுக்கும். தடுப்பூசி தொடர்பான தவறான செய்திகளையும், ஏனையோர் சொல்லும் வதந்திகளையும் நம்பாமல் தகுந்த வைத்தியரிடம் முறையான ஆலோசனைகளையும், சரியான தகவல்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

நாம் ஒவ்வொருவரும் முறையான பொறுப்பான பிரஜையாக சிந்தித்து செயற்படுவது இக்காலத்தின் கட்டாயமாக இருப்பதுடன், கண்மூடித்தனமான போலியான தகவல்களை நம்பாமல் ஆராய்ந்து சிந்தித்து செயற்படுதலும் எமது கடப்பாடு மற்றும் விழுமியமாக வைத்துக் கொள்வோம்.

0774593569





# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம்






விலைவாசி உயர்வைக் கண்டித்தும், எரிபொருட்களின் விலையேற்றம் மற்றும் மக்களின் உரிமைக்காக போராடுபவர்களை கைதுசெய்வது உட்பட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து புதிய ஜனநாயக மார்க்ஸிச லெனினிச கட்சியினரால் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (17) முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்த போது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மக்கள் விரோத செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டிருப்பதனை அண்மைக் காலங்களாக அவதானிக்கமுடிந்துள்ளது.

குறிப்பாக உணவுப்பொருட்கள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் சடுதியான விலை அதிகரிப்பானது நாட்டு மக்களை, குறிப்பாக உழைக்கும் மக்களை வாட்டி வதைத்து வருகின்றது. மக்களின் நலனை முன்னிறுத்துவோம் என்று ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் மக்கள் மீது சுமைகளையும், துன்பங்களையும் ஏற்படுத்திய நிலையில், மக்கள் வீதியில் இறங்கிப் போராடவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை நாட்டின் சொத்துகளையும், இறைமையும் தாரைவார்க்கும் அரசின் செயற்பாடுகளை கண்டிக்கும் அரசியல், சமூக செயற்பாட்டாளர்களை பொலிஸ் அராஜகத்தை கட்டவிழ்த்து கைதுசெய்து தனிமைப்படுத்தும் செயலை இந்த அரசு முன்னெடுத்துவருகின்றது.

விவசாயத்தினை நம்பி வாழும் மக்கள் உரத்தினை பெற்றுக்கொள்ள முடியாமல் அவதிப்பட்டுவருகின்றனர். அதற்கான மாற்றுக் கொள்கை அரசினால் முன்னெடுக்கப்படவில்லை. இவற்றுக்கு வன்மையான கண்டனம் தெரிவிப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் போராடும் மக்கள் மீது பொலிஸாரை ஏவாதே, இலவச கல்வியை இராணுவமயப்படுத்தாதே, பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு கொரோனா நிவாரணம் வழங்கு, அரசியல் கைதிகளை விடுதலை செய் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பினர், இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், தேசியகலை இலக்கிய பேரவையினர், புதிய சிந்தனை பெண்கள் அமைப்பு உட்பட பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.







**'ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் - மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்போம்' என்னும் தொனிப்பொருளில் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவின் தலைமையில் நேற்று (17) களுத்துறை நகரில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.**

# கிளிநொச்சியில் மேலும் 20 கொரோனா நோயாளர்கள்

(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் (16) கொரோனா தொற்றுக்குள்ளான 20 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மாவட்ட தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மைய நாட்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில், நேற்று முன்தினம் மாத்திரம் 20 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, அவர்களில் 15 பேர் வட்டக்கச்சி, கட்சன் வீதியைச் சேர்ந்தவர்கள் என்றும், இருவர் ஜெயபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஏனையவர்கள் உருத்திரபுரம், சிவபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நேற்று முதல் வட்டக்கச்சி, கட்சன் வீதி தனிமைப்படுத்தலுக்குள் உள்ளாக்கப்பட்டுள்ளது. கடந்த ஒருசில நாட்களில் மாத்திரம் 48 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# மக்கள் விடுதலை முன்னணி தலவாக்கலையில் ஆர்ப்பாட்டம்

## கொத்தலாவல சட்டத்தை மீளப்பெறுமாறு வலியுறுத்து









(க.கிஷாந்தன்)

சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்தை மீளப் பெறுமாறு வலியுறுத்தியும், அரசாங்கத்தின் ஒடுக்குமுறைச் செயற்பாடுகளுக்கு எதிராகவும் மக்கள் விடுதலை முன்னணியினர் தலவாக்கலை நகரில் நேற்று (17) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னணியின் அரசியல் செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர்கள் எனப்பலர் இதில் பங்கேற்றிருந்தனர்.

இலவசக் கல்வி பெறும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் கோஷமெழுப்பினர்.

அத்துடன், நாட்டில் நிலவும் உரத்தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுக்கு உரம் விநியோகிக்கப்பட வேண்டுமென குரல் எழுப்பிய ஜே.வி.பி.யினர், அத்தியாவசியப் பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களின் விலையை உடன் குறைக்குமாறும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தனர்.

அதேவேளை, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு உரிய வகையில் இடம்பெற வேண்டும். அவர்களின் தொழில்சார் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் அறிவித்தனர்.

# சட்டவிரோதமாக 410 மூடைகளில் சிப்பிகளை ஏற்றிச்சென்ற மூவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனையிலிருந்து குருநாகலுக்கு சட்டவிரோதமாக கொள்கலனூடாக 410 மூடைகளில் ஒரு தொகை சிப்பிகளை கடத்திச் சென்ற 3 பேர் நேற்று (17) வாழைச்சேனை - நாவலப்பிட்டி சந்தியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கொழும்பு-திருகோணமலை பிரதான வீதி சந்தியான நாவலடிச் சந்தியில், சம்பவ தினமான நேற்று அதிகாலை 3 மணியளவில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையில், வீதிச்சோதனை நடவடிக்கை இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

இதன்போது வாழைச்சேனையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கொள்கலன் ரக வாகனத்தை நிறுத்திச் சோதனையிட்டபோது சட்டவிரோதமாக தலா 50 கிலோ கொண்ட 410 மூடை சிப்பிகளை குருநாகலுக்கு கடத்திச் செல்வதாக கண்டறிந்ததையடுத்து, அதனைக் கடத்திச் சென்ற 3 பேரை கைதுசெய்ததுடன், சிப்பியுடன் கொள்கலன் வாகனத்தை மீட்டு வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# டயலொக் 'மனுசத் தெரண' உடன் இணைந்து 100,000 பாடசாலை மாணவர்களுக்கு டேட்டா புலமைப்பரிசில்களை வழங்குகிறது



இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான டயலொக் ஆனது, TV தெரண உடன் இணைந்து, நனதிரிடேட்டா புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ்100,000 பாடசாலை மாணவர்களுக்கு வீட்டிலிருந்தவாறே அவர்களின் நிகழ்நிலை கற்றலை எளிதாக்கும் வகையில் டேட்டா புலமைப் பரிசிலை வழங்கவுள்ளது.

'மனுசத் தெரண' உடன் டயலொக் இணைந்து வழங்கும் முன்னெடுப்பின் கீழ் ஒரு பகுதியாக இருக்கும் நனதிரி டேட்டா புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம், ஒவ்வொரு மாணவருக்கும் 3 மாதங்களுக்கு ஒன்லைன் கற்றல் மற்றும் கல்வி நோக்கங்களுக்காக 10 GB டேட்டா வழங்கப்படும். இந்த முன்னெடுப்பின் கீழ், கல்வியமைச்சின் அதிகாரிகள் மற்றும் டயலொக் பிரதிநிதிகளின் பங்களிப்புடன், ஜூன் 14 ஆம் திகதி காலியில் உள்ள அங்குலுகஹ மகா வித்தியாலயத்திலுள்ள மாணவர்களுக்கு நனதிரி டேட்டா உதவித் தொகை வழங்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் "எங்கள் குழந்தைகளின் கல்வி மற்றும் வளர்ச்சியை இந்த பெருந்தொற்று பறித்தெடுக்க நாங்கள் அனுமதிக்க முடியாது" என தொடர்ந்து வலியுறுத்தினார். "இந்த கொந்தளிப்பான காலங்களில் தாமாக முன்வந்து, இந்த பாடசாலைக் குழந்தைகளுக்கு நிகழ்நிலை கற்றலைத் தொடர வாய்ப்பு அளித்ததற்காகவும், பெற்றோருக்கு ஒருவித நிதி நிவாரணத்தையும் வழங்குவதற்காகவும் டயலொக் மற்றும் மனுசத் தெரண ஆகியோருக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

தேவைகள் மிகுந்த குழந்தைகளுக்கு பிரகாசமான எதிர்காலத்திற்கான வாய்ப்பை வழங்குவதற்கான கூட்டு நோக்கத்தால் இயக்கப்படும் இந்த திட்டத்தை முன்னிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்று அவர் மேலும் கூறினார்.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா கூறுகையில், "பல நிதி சிக்கல்களை எதிர்கொண்டுள்ள மற்றும் நிகழ்நிலையின் ஊடாக கற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் இல்லாத இந்த மாணவர்களின் கல்வியைத் தொடர ஆதரவளித்ததற்காக டயலொக் மற்றும் மனுசத் தெரண குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புற பாடசாலைகளைச் சேர்ந்த இந்த மாணவர்கள் இப்போது உலகளாவிய ரீதியான வாய்ப்புகள் மற்றும் அதனால் ஏற்படும் வளர்ச்சியுடன் கல்விக்கு சமமான அணுகலைக் கொண்டுள்ளனர். இந்த முயற்சியின் ஒரு பகுதியாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது பெருந்தொற்றால் கடுமையாக பாதிக்கப்படுபவர்களுக்குத் தேவையான ஆதரவைப் பெற உதவுகிறது. அதே நேரத்தில் இந்த நாட்டின் எதிர்காலமாக இருக்கும் எங்கள் மாணவர்களுக்கு தேவையான ஆதாரங்களைக் கொடுத்து உதவுகிறது" என்றார்.

இந்த நிகழ்வில் பேசிய டயலொக் நிறுவனத்தின் குழும தலைமை நிர்வாகஅதிகாரி சுபுன் வீரசிங்ஹ, "பெருந்தொற்றையடுத்து, உலகம் முழுவதும் நிகழ்நிலைக்கு மாறும்போது நாடு முழுவதும் உள்ள இந்த சடுதியான மாற்றத்திற்கு ஈடு கொடுக்க முடியாத மாணவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதே எங்கள் முதன்மை நோக்கங்களில் ஒன்றாகும். இந்த பிளவுக்கு தீர்வு காண, இந்த அவசர தேவைக்கு மற்றொரு செயலூக்கமான தீர்வாக 'நனதிரி டேட்டா புலமைப் பரிசில் திட்டத்தை' முன்வைப்பதில் டயலொக் மகிழ்ச்சியடைகிறது. ஊரடங்கு காரணமாக கல்வி மீது ஏற்பட்ட பாதிப்பைக் குறைக்க உதவுவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம், மேலும் பெருந்தொற்றின் போது சிறந்து விளங்க எங்கள் பாடசாலை மாணவர்களுக்கு ஆதரவளிக்கிறோம்" என்றார்.

நாடு முழுவதுமுள்ள மாணவர்களை அவர்களின் கல்வி முயற்சிகளுடன் ஆதரிக்கும் தொடர் முயற்சிகளில் இது டயலொக்கின் மற்றொரு முயற்சியாகும். இந்த முயற்சிக்கு மேலதிகமாக, நெனச முன்னெடுப்பின் கீழ் பலவிதமான கல்வித் தளங்களை டயலொக் வழங்குகிறது. Nenasa TV, Nenasa Smart School, Nenasa App மற்றும் கட்டணமில்லா Nenasa 1916 தொலைதூர உதவிஅழைப்பு சேவை ஆகியன இதிலடங்கும். டயலொக் தனது கல்விக்கொத்தான நெனச சிங்களம், நெனச தமிழ் மற்றும் குரு டிவி அலைவரிசைகளுக்கு Dialog Television மற்றும் ViU App மூலம் இலவச அணுகலை நீட்டித்தது. மேலும், இ-தக்ஸலாவா, தேசிய கற்றல் உள்ளடக்க மேலாண்மை அமைப்பு (LCMS)/ கற்றல் மேலாண்மை அமைப்பு (LMS) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையத்தின் அதிகாரத்திற்குப்பட்ட தேசிய பல்கலைக்கழகங்களின் அனைத்து உத்தியோகபூர்வ மின்-கற்றல் தளங்களுக்கும் எந்தவொரு தரவுக் கட்டணமுமின்றி நிறுவனம் இலவச அணுகலை நீடித்தது.

## வெடிமணியம்...

(தொடர்ச்சி)

அதனாலேயே ஒரு அரசியல் படுதோல்வியை ராஜபக்ஷ தரப்பு ஒரு கட்டத்தில் சந்தித்தது.

அந்த "அடிதான்" அவர்களை சீனாவின் பக்கம் போகச் செய்தது.

அதன் பிறகு வந்த "நல்லாட்சியை" ராஜபக்ஷ வாரிசுகள் எப்படிக் கவுத்து அரியணையேறினார்கள் என்பதை ஊரும், உலகமும் அறியும்.

சீனாவுடனான தொடர்பு என்பது வெறுமனே ஆட்சியைப் பிடிப்பதற்கான "முன்னேற்பாடு" எண்டு மட்டும் சொல்லமுடியாது.

சீனாவைப் போன்ற ஒரு தனிப்பெரும் பேரினவாதக் கட்சியை வளர்த்துவிடவேண்டும் என்பதில்தான் அவர்கள் அதிக கவனம் எடுத்தார்கள்.

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால்தான் எங்களின் இராணுவ வீரர்களை போர்க்குற்ற தூக்குமேடையிலிருந்து காப்பாற்றமுடியும்" என்று தெற்கில் மக்களை நம்பவைத்தார்கள்.

அதேபோன்று;

"எங்கள் ஆட்சியில்தான் சிறிலங்காவில் பௌத்த மதம் எழுச்சிபெறும். காக்கப்படும்" என்று ஒரு பெரிய பிம்பத்தைக் கட்டமைத்தார்கள்.

"விடுதலைப்புலிகளின் பயங்கரவாத போராட்டத்தை விட முஸ்லிம் பயங்கரவாதம் மிக ஆபத்தானது" என்ற ஒரு அச்ச சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

"ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலின்" பின்னர் சிங்கள மக்கள் அச்சத்தோடும், கோபத்தோடும் கொந்தளித்துப்போய் இருந்தார்கள்.

இந்தக் "கொடிய குண்டுத் தாக்குதலின்" பின்னணிகளைக் கிண்டினால் பல "பூதங்கள்" வெளியில் வரலாம்.

அதனாலேயே அந்த "மர்மங்களை" கிண்டாமல் கொடூரமாக கொல்லப்பட்ட அந்த அப்பாவி மக்களோடு சேர்த்து ஆழமாக புதைத்துவிட்டார்கள்.

"ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலின்" மர்ம முடிச்சுகளை அவிழ்ப்பதற்காக விசாரணை நடப்பதாக ஆரும் நினைச்சியள் எண்டால்;

அது உங்கட "பேத்தனம்"!

காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிக்க அமைக்கப்பட்ட ஆணைக்குழுவும்;

ஈஸ்ரர் படுகொலை விசாரணைக்குழுவும் "மோதகமும், கொழுக்கட்டையும் போல்" எண்டுதான் சொல்லவேணும்.

இந்த இரண்டு விசாரணையாளர்களும் செய்யப்போவது ஒரே காரியம்தான்.

மிக ஆழமாக "உண்மைகளை" குழி தோண்டிப் புதைத்துவிடுவார்கள்.

சீனாவைப் பற்றி கதைச்சு கடைசியில ஈஸ்ரர் படுகொலைக்கு வந்து நிக்கிறன்.

வர வர மணியத்தாருக்கு வாக்குமாறி என்னத்தை கதைக்குறது எண்டே தெரியுதில்லை, எண்டு புறுபுறுக்கிறது எனக்கு காதில கேக்குது.

என்னை மட்டும் வக்கணையா கேள்வி கேக்கத்தெரிஞ்ச உங்களுக்கு;

வாக்குமாறி நடக்க ஏலாமல் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் இண்டைக்கும் உங்கட தலையில மிளகாய் அரைக்கினமே அதை எப்ப கேப்பியள்?

உதைக்கதைச்சால் எனக்கு "மூலக்கொதி" வந்திடும்.

ஆ...!

எதில விட்டனான்?

சீனாவின் ஆட்சிக்கட்டில் பல தசாப்தகாலமாக இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாடுகளை ராஜபக்ஷ வாரிசுகள் தத்தெடுத்து, அதை தங்களுக்கு ஏற்றமாதிரி வளைச்சு வெற்றிகரமாக முன் நகர்ந்து போகினம்.

தங்களின் ஆட்சியைத் தக்கவைக்க மக்கள் ஆதரவுக்கு அப்பால்;

இராணுவத்தின் முழு ஆதரவும் தேவை என்பதை உணர்ந்த அவர்கள்...

இப்போது இராணுவத்தை தங்களின் வசம் வைத்திருப்பதற்காக அத்தனை "திருகுதாளங்களையும்" ஆரம்பித்துவிட்டார்கள்.

கொரோனாவுக்கு ஊசி போடுவதில் இருந்து அரச நிர்வாக சேவைகள், சிவில் நிர்வாக சேவைகளில் இராணுவ பிரசன்னம் அதிகரித்தே செல்கிறது.

போரின் பின்னர் சிறிலங்கா இராணுவத்தில் சுமார் ஒரு இலட்சம் பேர் புதிதாக இணைக்கப்பட்டார்கள் எண்டு எதிர்க்கட்சி சொல்லுது.

அதுகும் ராஜபக்ஷ வாரிசுகளின் ஆட்சியில்தான் அதிகம் பேர் இணைக்கப்பட்டார்கள் எண்டும் சொல்லுகினம்.

இன்று முப்படைகளிலுள்ள இராணுவ உயர் அதிகாரிகள் அனைவரும் ராஜபக்ஷ விசுவாசிகளே!

சுமார் எண்பதுக்கும் அதிகமான முக்கிய அரச நிறுவனங்களின் நிர்வாக பொறுப்பு ராஜபக்ஷ வாரிசுகளின் கைகளில்தான் இருக்கிறது.

இராணுவத்துக்கு ஒரு பல்கலைக்கழகம். அவர்களுக்கு பட்டங்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு.

இது பிழையில்லாத மாதிரிதான் தெரியும்.

ஆனால்;

பல ஆயிரம் இராணுவத்தினர் பட்டங்களைப் பெற்று சிவில் நிர்வாகத்துக்குள் நுழைவார்கள்.

அவர்களுக்கு சம்பளமும், படிப்பும் கொடுத்த ராஜபக்ஷ வாரிசுகளின் "வாழ்நாள் விசுவாசிகளாக" அவர்கள் இருப்பார்கள்.

இராணுவ பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று சிவில் நிர்வாகத்தில் நுழையும் இராணுவத்தினரோடு ஏற்கனவே இந்தத் துறைகளில் இருக்கும் சிவில் பட்டதாரிகள் "அனுசரித்தே" போகவேண்டும்.

ராஜபக்ஷ வாரிசு ஆட்சிக்கு இரு பெரிய தூண்கள் முட்டுக்கொடுக்கின்றன.

போர்க்குற்றத்திலிருந்து காப்பாற்றப்பட்ட இராணுவத்தினரும், அவர்களின் குடும்பத்தினரும், உறவினர்களும் ஒரு பெரிய தூண்!

மற்றது;

சிறிலங்காவில் "பௌத்த பேரினவாத" கொள்கையை உயர்த்திப் பிடிக்கும் கடும்போக்கு புத்தபிக்குகள்.

தெற்கில் இப்போது ராஜபக்ஷ வாரிசுகளின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்டு சலசலக்கும் புத்தபிக்குகளின் "பொய்க்கோபம்" தங்களை ஒண்டும் செய்துவிடாது என்பது;

கோட்டாவுக்கும், மகிந்தவுக்கும் மிகத்தெளிவாகத் தெரியும்.

பேரினவாத கடும் போக்காளர்களாக இருக்கும் புத்தபிக்குகளை எக்காலத்திலும் தங்கள் பக்கம் வைத்திருக்கும் "சூட்சுமத்தை" அவர்கள் நன்றாகவே கற்று வைத்திருக்கிறார்கள்.

சீனா கொடுக்கும் "சில்லறைகளை" விட்டெறிந்து வடக்கிலும், கிழக்கிலும் மூலைமுடுக்கெல்லாம் புத்தவிகாரைகளை கட்டி;

திறப்புவிழா வைச்சால் இப்ப "சலசலக்கும்" புத்த பிக்குகளில் பலர் முன்வரிசையிலிருந்து பல்லிளிப்பார்கள்.

"ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை எதிர்க்க தமிழர்களும், முஸ்லிம்களும் எங்களோடு சேரவேணும்" எண்டு தெற்கிலிருந்து ஒரு சில புத்த பிக்குகள் அழைப்பு விடுத்ததாக செய்திகள் வெளியாயின.

மழைக்கால அமாவாசைக் காலங்களில் ஊளையிடும் ஓநாய்களின் குரல்களில் மயங்கி ஆடுகள் போனால் என்ன நடக்கும் எண்டு உலகமறியும்.

இண்டைக்கு எங்களைக் கூப்பிடும் புத்தபிக்குகள் நாளை ஒரு தேர்தல் வந்தால்;

மகிந்தவுக்கு ஒரு குத்து!
கோட்டாவுக்கு ஒரு குத்து!
பெசிலுக்கு ஒரு குத்து!
சமலுக்கு ஒரு குத்து!
நாமலுக்கு ஒரு குத்து!

எங்களுக்கு முதுகில ஒரு குத்து குத்துவார்கள்.

எது என்னவோ;

தெற்கின் அரசியல் சலசலப்புகளுக்கு வடக்கு, கிழக்கு என்றும் எதிர்வினை ஆற்றியதில்லை. ஆற்றப்போவதும் இல்லை.

மாறி மாறி வரும் சிங்களப்பேரினவாத ஆட்சியாளர்களை ஆட்சிக்கட்டில் ஏற்றி சிறுபான்மை மக்களின் முதுகில் ஏறி சன்னதம் ஆடும்;

புத்தபிக்குகளின் போலியான முதலைக்கண்ணீரை நம்பி ஆத்தில் ஒருபோதும் நாங்கள் இறங்கத் தயார் இல்லை.

அதுபோன்று ராஜபக்ஷ வாரிசுகளுக்கு முட்டுக் கொடுத்துவிட்டு இப்போது "குத்துது, குடையுது" எண்டு திரியும் ஜே.வி.பி. போன்ற பேரினவாதக் கட்சிகளின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கிவிடுவதற்கு எங்கட சனம் தயாரில்லை.

ஆனால்;

இதுதான் சந்தர்ப்பம் எண்டு எங்கட ஆக்கள் ஒரு சிலர் இந்த ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி;

எங்கட சனத்தின் எதிர்காலத்தை தங்கட சுயநலன்களுக்காக "அடைவு" வைச்சாலும் வைப்பார்கள்.

நாங்கள்தான் கவனமா விழிப்பா இருக்கவேணும்.

கடைசியாக ஒரு விசயத்தை ஞாபகப்படுத்திப்போட்டு போறன்.

"போருக்குப் பிறகு சிறிலங்காவை சிங்கப்பூராக மாத்துவம்" எண்டு சொன்னாங்கள்.

இப்ப "சீனாவாக" மாத்தி வைச்சிருக்கிறாங்கள்.

சீனாவில் பல தசாப்தகாலமாக இருக்கும் "சீன மொமினீஸிய" இராணுவ ஆட்சி போன்றுதான் இனிமேல் சிறிலங்காவிலும் ஒரு "வாரிசு ஆட்சி" இருக்கும்.

ஆராலும் "அவர்களை" கொஞ்சக்காலத்துக்கு அசைக்கவோ, எதிர்த்து கேள்வி கேட்கவோ முடியாது.

தெற்கில் கொந்தளிக்கும் புத்தபிக்குகளால் மட்டுமல்ல, அவர்கள் கும்பிடும் புத்தனால் கூட முடியாது ராசா!

## வெலிகமவில் நபரொருவர் கொலை

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பரதொட்ட, சாரிகேவத்த பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் (16) பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கப்பரத்தொட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் மேலுமொரு நபர் காயமடைந்துள்ளதுடன், அவர் சிகிச்சைக்காக மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடம் கையளிப்பு



(இக்பால் அலி)

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி பழைய மாணவிகளால் கண்டி மாவட்டத்தில் உடத்தலவின்னை பிரதேசத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வீடொன்று, கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் அதிபர் சிஹானா ரஹீமினால் திறந்து வைக்கப்பட்டது.

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி பழைய மாணவிகளின் பங்களிப்புடன் கல்வியில் திறன்மிக்க மாணவிகள் தங்களது கற்றல் செயற்பாட்டை தங்குதடையின்றி மேற்கொள்வதற்கு வீட்டுச் சூழலை வளமாக்கும் நோக்குடன் முன்னெடுக்கும் செயற்றிட்டத்தின் கீழ் 06 இலட்சம் ரூபா செலவில் உடத்தலவின்னை பிரதேசத்தில் திறன்மிக்க மாணவியொருவரின் வீட்டின் மேல் மாடியினை சகல வசதிகளும் கொண்டதாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கையளிக்கும் நிகழ்வு கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் அதிபர் சிஹானா ரஹீம் தலைமையில் இடம்பெற்றது.

கல்வியில் திறன்மிக்க மாணவிகளாக இருந்த போதிலும் கற்றலுக்கான சூழல் வளமுள்ளதாக அமைவதில்லை. சீரான கற்றுக்கு உகந்த வீடுகள் அமைவதில்லை. வீடு என்று இருந்த போதிலும் அதற்கான அறை வசதிகள் இருக்காது. மழை பெய்தால் வீடு முழுக்க நனைந்து வெள்ளப்பெருக்கு நிலை ஏற்படும்.

காற்றடித்தால் கூரையின் தகரம் பறக்கும். ஒழுங்கான மலசலகூட வசதிகளில்லை. கொரோனா இடர் காலத்தில் இணையவழி கற்றலை மேற்கொள்ள கணனி வசதிகளில்லை. இவை போன்ற பல்வேறு சவால்களுடன் சில மாணவிகள் கற்றலை மேற்கொண்டு வருகின்றனர். இப்படிப்பட்ட மாணவிகள் தங்களது கற்றல் செயற்பாட்டை தடையின்றி மேற்கொள்வதற்கு கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகளின் பங்களிப்புடன் ஒரு மாணவியின் வீட்டின் மேல் மாடியினை சகல வசதிகளும் கொண்டதாக மாற்றியமைத்து அம்மாணவிகளது கல்வி மேம்பாட்டுக்காக காருண்ய உதவி புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி பழைய மாணவிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.


Mega POWER

சீட்டிழுப்பு இலக்கம்: 0855

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 16.07.2021

NLB

ஆங்கில எழுத்து: A | சுப்பர் இலக்கம்: 26 | வெற்றி இலக்கங்கள்: 09 22 34 42

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 72 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 201 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4705 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2973 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 75969 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 13954 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.137,142,346.80

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,860,380.00

NATIONAL LOTTERIES BOARD

தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

ஆங்கில எழுத்து: V

திகதி: 16.07.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0537

வெற்றி இலக்கங்கள்: 09 12 21 23

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 4 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 82 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 183 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 4360 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2949 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 74050 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 13808 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,199,100.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 95,436

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை ரூ. 99,170,469.60

NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம்: 4507

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

மஹஜன சம்பத

திகதி: 16.07.2021

வெற்றி எழுத்து: L | வெற்றி இலக்கங்கள்: 1 5 0 7 2 7

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L 1 5 0 7 2 7 | ரூபா 18,268,962/- | 1 |
| 1ஆம் பரிசு | ■ 1 5 0 7 2 7 | ரூபா 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | ■ ■ 5 0 7 2 7 | ரூபா 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | ■ ■ ■ 0 7 2 7 | ரூபா 10,000/- | 100 |
| 4ஆம் பரிசு | ■ ■ ■ ■ 7 2 7 | ரூபா 1,000/- | 996 |
| 5ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ 2 7 | ரூபா 100/- | 9935 |
| 6ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ ■ 7 | ரூபா 20/- | 98142 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ 1 5 0 7 2 ■ | ரூபா 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | ■ 1 5 0 7 ■ ■ | ரூபா 1,000/- | 99 |
| 9ஆம் பரிசு | ■ 1 5 0 ■ ■ ■ | ரூபா 100/- | 1016 |
| 10ஆம் பரிசு | ■ 1 5 ■ ■ ■ ■ | ரூபா 50/- | 9807 |
| 11ஆம் பரிசு | L ■ ■ ■ ■ ■ ■ | ரூபா 20/- | 39294 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ.27,698,132.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை

www.nlb.lk

கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 2802 | சீட்டிழுப்பு திகதி: 16.07.2021

ஆங்கில எழுத்து: Z | வெற்றி இலக்கங்கள்: 01 28 51 62

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 7 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 153 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 355 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8721 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5742 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 143572 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 26144 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 184,695

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை ரூ. 6,857,100.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.78,931,746.80

NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk



# அரசுடன் இணையத் தயார்

## ஆனால் எமது மக்களை சமத்துவமாக ஏற்றால் மாத்திரமே

### ரணில் ரொம்பப் பழைய ஆணி. பெசில் கொஞ்சம் பழைய ஆணி

### அதிகாரத்தில் இருக்கும் இ.தொ.கா. மக்களின் பிரச்சினைகளை தெரியாததுபோல அமைதியாக இருக்கிறது

### தொழிலாளர்களுக்கு 50 ரூபா பெற்றுக்கொடுக்க முடியாமற்போனமை எமக்குப் பெரும் பின்னடைவு

சொல்லாடல்

**தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வி**



**நேர்காணல்:- நிர்ஷன் இராமானுஜம்**

அரசாங்கத்துடன் இணையத் தயார். நாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு நன்மை நடக்க வேண்டும், நியாயம் கிடைக்க வேண்டும். அதற்கு உத்தரவாதம் தருவார்களேயானால் யாராயிருந்தாலும் எமக்குப் பிரச்சினையில்லை. இங்கே இனவாதம் என்பது ஆன்மாவில் ஊடுறுவியிருக்கிறது. சிறுபான்மை மக்களை சமத்துவ இலங்கையர்களாக ஏற்றுக்கொள்ளும் வகையில் உத்தரவாதம் தருகின்ற எந்த அரசாங்கத்துடனும் இணையத் தயாராக இருக்கிறோம் - என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பிருமான மனோ கணேசன் 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போது தெரிவித்தார்.

செவ்வியின் முழுமையான விபரம் வருமாறு,

**கேள்வி:- தற்போதைய அரசியல் சூழ்நிலையில் நீங்கள் அரசாங்கத்தை வெளிப்படையாக விமர்சித்து வருகிறீர்கள். நாட்டின் நிலைவரம் எவ்வாறிருக்கிறது?**

**பதில்:-** சூடாகவும் இருக்கிறது. கேடாகவும் இருக்கிறது. உண்மையிலேயே இன்று வரலாறு காணாத வகையில் நாடு படுவீழ்ச்சியடைந்திருக்கிறது. அரசியல், சமூகம், பொருளாதாரம், கலாசாரம் என அனைத்திலும் வீழ்ச்சி காணப்படுகிறது. இவை அனைத்திற்கும் கொவிட் என்ற கொரோனா பேயை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காரணம் காட்ட முடியாது.

பாருங்கள். நடுக்கடலில் எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை யார் இலங்கை கடல் எல்லைக்குள் வரச்சொன்னது? தேவையில்லை. இந்தியா வேண்டாம் என்றது. கட்டார் வேண்டாம் என்றது. நம்மவர்கள் வரவழைத்தார்கள். அதற்குப் பின்னாலுள்ள காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அடுத்து உரப் பிரச்சினையை பாருங்கள். இயற்கை உரம் இருப்பது நல்லதுதான். நாங்கள் ஏற்றுக்கொண்ட விடயம்தான். விஷமில்லாமல் உணவிருக்க வேண்டும் என்பது நல்ல விடயம். ஆனால், அதை நாங்கள் படிப்படியாகச் செய்யவேண்டும்.

ஓவர்நைட் ஓர்கனிக் என்ற திட்டம் கிடையாது. அப்படியொரு திட்டம் உலகத்தில் எங்கேயுமே கிடையாது. ஆனால், திடீரென்று அந்தக் கொள்கையை கொண்டுவந்தார்கள்.

இன்று மீனவர்கள் நடுத்தெருவில் இருக்கிறார்கள். விவசாயிகள் நடுத்தெருவில் இருக்கிறார்கள். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் தருகிறேன் என முன்னரேயே தேர்தல் பிரசாரத்தில் சொன்னார். கிடைத்திருக்கிறதுதான். ஆனால், அது முறையாக வழங்கப்படுவதில்லை. ஆகவே, தோட்டத் தொழிலாளர்களும் நடுத்தெருவில் இருக்கிறார்கள்.

அதேபோல் வர்த்தகர்களைப் பாருங்கள். இன்று வங்கிகள் பெரும் வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றன. இறக்குமதி இல்லை. இறக்குமதி செய்வதற்குரிய எல்.சி.யை ஆரம்பிக்க முடியாமல் இருக்கிறது. அந்தளவுக்கு வழியில்லாமல் இருக்கிறது. டொலர்கள் இல்லை. வெளிநாட்டுச் செலாவணிகள் இல்லை. நாடு வீழ்ந்திருக்கிறது.

இதற்கெல்லாம் பதில்சொல்ல வேண்டியவர் கோட்டாபய ராஜபக்ஷவே.

**கேள்வி:- ரணில் விக்ரமசிங்க, பெசில் ராஜபக்ஷ ஆகிய இருவரும் நாடாளுமன்றம் வருகைதந்த பின்னர் மாற்றங்கள் பல நிகழும் என அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது. நீங்கள் இதனை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**பதில்:-** ரணில் ரொம்பப் பழைய ஆணி. பெசில் கொஞ்சம் பழைய ஆணி. அதற்காக அந்த இரண்டு ஆணிகளையும் பிடுங்கிவிடவேண்டுமென சொல்வேன் என எதிர்பார்க்காதீர்கள். அவர்கள் புதிய ஆணியென்று சொல்லிக்கொள்ளும்படி இல்லை.

ரணில் நிறைய நல்லது செய்திருக்கிறார். ரொம்ப கெட்டதும் செய்திருக்கிறார். நிறைய பட்டறிவு வேறு இருக்கிறது. பட்டறிவைப் பயன்படுத்தி அவர் ஆட்சிமாற்றத்துக்கு உதவிசெய்ய வேண்டும் என நினைக்கின்றேன். அதற்காக அவர் ஜனாதிபதியாக நினைக்கக்கூடாது.

**கேள்வி:- கெட்டது செய்திருப்பதாக சொல்கிறீர்கள். தனிப்பட்ட ரீதியிலா?**

**பதில்:-** இல்லை. தனிப்பட்ட ரீதியில் அல்ல. அரசியல் ரீதியாக.

பெசிலை பொறுத்தவரையில் அவர் கொஞ்சம் பழைய ஆணி. அவர் நேற்றுதான் அமெரிக்காவிலிருந்து வந்ததுபோல் காட்டிக்கொள்ள முயல்கிறார். கட்சியினரும் அவ்வாறு காட்ட முயற்சிக்கிறார்கள்.

அப்படியல்ல. அவர் ஆரம்பத்தில் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்தார். அதன்பின்னர் மஹிந்தவின் ஆட்சியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்தார். இப்பொழுதும் பாருங்கள், பிரதான கட்சியொன்றை அமைத்தவர் அவர்தான். அத்தோடு ஜனாதிபதி செயலணிகள் பலவற்றுக்கு தலைமைதாங்கியவர் அவர்தான்.

இப்போது அமெரிக்காவுக்குச் சென்று வந்தபின்னர் புதியவர் போன்று காட்டப்பார்க்கிறார். பரவாயில்லை. அவர் நாடாளுமன்றத்துக்கு வந்தபோது, அவரது கையில் அலாவுதீனின் அற்புத விளக்கு இருக்கிறதா என்று பார்த்தேன். இல்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி:- ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்துக்கு வந்தபின்னர் பிரதான எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் சிலர் அவரோடு இணையப்போவதாக அரசாங்க தரப்பில் சொல்லப்பட்டது. அதன் உண்மைத்தன்மை என்ன? அவ்வாறு ஏதாவது பேசப்பட்டதா? நீங்கள் பேசினீர்களா?**

**பதில்:-** நான் பேசியிருக்கிறேன். நாங்கள் தமிழ் முற்போக்குக் கூட்டணி. நாம் தனியொரு கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியல்ல. நாங்கள் யாருடனும் பேசுவோம். மஹிந்தவுடனும் பேசுவோம், கோட்டாவுடனும் பேசுவோம், பெசிலுடனும் நாமலுடனும் பேசுவோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒரு வீடு என்றால், அந்த வீட்டின் கதவுகளை, ஜன்னல்களையெல்லாம் திறந்துவைத்திருக்கிறோம். எல்லா திசைகளிலிருந்தும் நல்ல காற்று வரும். அதை சுவாசிப்போம். ஆனால், எங்கள் கால்கள், நாங்கள் எங்கே இருக்கிறோமோ அங்கே ஆழப் பதிந்திருக்கும். எந்தச் சூறாவளியும் சுழற்காற்றும் எங்களைத் தூக்கி வீசிவிட முடியாது. நாங்களாக விரும்பித்தான் முடிவெடுப்போம்.

**கேள்வி:- கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டதாக குற்றஞ்சுமத்தியிருந்தீர்கள். இனி அவ்வாறான சம்பவம் இடம்பெறாதென என்ன உத்தரவாதம்?**

**பதில்:-** அது ஒருபுறத்தில் பார்த்தால் சின்ன பிரச்சினை. மறுபுறத்தில் பார்த்தால் அது யோசிக்க வேண்டிய பிரச்சினையும் கூட. அன்று அந்தப் பிரச்சினையை வெளியில் கொண்டுவந்ததே நான்தானே? அங்கு பலர் இருந்தார்கள். அவர்களைபோல் பதாகையை ஏந்திவிட்டுப் போயிருக்கலாமே? அப்படியில்லையே? எனக்கு ஒரு தமிழ் திமிர் இருக்கிறது. அந்தத் திமிர் சரியான நேரத்தில் வெளிப்படும். நான் முன்வரிசையில் இருந்து அரசாங்கத்துக்கு எதிராக குரல்கொடுத்தேன், ஆனாலும் சிங்களமொழியிலான பதாகையை ஏந்த மறுத்தேன். அவ்வாறு மறுத்துவிட்டு அங்கேயே இருந்தேன். எங்கேயும் சென்று ஒளியவில்லை.

**கேள்வி:- நாடாளுமன்றத்துக்கு முன்பாக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் நீங்கள் சிங்கள மொழியிலான பதாகையைதானே ஏந்தியிருந்தீர்கள்?**

**பதில்:-** ஆமாம். உண்மைதான். எனக்கு மாணவப் பருவத்திலிருந்து தமிழ்த் திமிர் இருந்ததுபோல் இத்தனை வருட அனுபவம் நிதானத்தையும் தந்திருக்கிறது. எடுத்தேன், கவிழ்த்தேன் என்று செய்வதில்லை நான். எதை, எங்கே, எப்போது, எப்படிச் செய்யவேண்டும் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

அவர்களுக்கு அன்றே சொன்னேன். இதோ பாருங்கள். சிங்களம் மாத்திரமே இருக்கிறது, இதனை மாற்றிக்கொள்ளுங்கள், எனது மொழி அவசியம் எனச் சொன்னேன். கேட்டுக்கொண்டார்கள்.

உடனடியாக எடுத்த எடுப்பில் சண்டைபோட நான் தயாராக இல்லை. அது பிழையானது. ஏனென்றால், நாங்கள் தென்னிலங்கையில் வாழ்கிறோம். சிங்கள மக்களோடு சேர்ந்து வாழ்கிறோம். ஆகவே, எடுத்ததெற்கெல்லாம் சண்டைபோட முடியாது. அன்று சொன்னேன். மறுநாள் நான் ஓடி ஒளியவில்லை. அங்கேயே இருந்து எதிர்ப்புத் தெரிவித்தேன்.

இப்பொழுது அவர்கள் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். உடனடியாக அன்றிரவே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தொலைபேசியில் அழைத்து வருத்தம் தெரிவித்தார். அந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடுசெய்த நாடாளுமன்ற உறுப்பினர், நண்பர் ஹர்ஷன ராஜகருணாவும் வருத்தம் தெரிவித்தார்.

அதற்குப் பிறகு ஏற்பாடுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்கு பதாகைகள் தமிழில் எழுதப்பட்டு என்னிடம் காட்டப்பட்டு கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றன. அப்படித்தான் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

**கேள்வி:- மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுகின்றபோதும் அது முறையாக பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை. இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு காத்திரமான திட்டமொன்றை முன்வைக்கலாமல்லவா?**

**பதில்:-** உண்மையில் நிலைமை ரொம்ப கொடூரமானது, கஷ்டமானது. ஆயிரம் ரூபா என்ற விடயம் வெறும் எழுத்தில் தரப்பட்டது அவ்வளவுதான். ஆயிரம் ரூபா சம்பள அறிவிப்பு வெளியானதும் ஆரவாரம் செய்தார்கள், பட்டாசு கொளுத்தினார்கள், எல்லாம் முடிந்துவிட்டது. ஆனால், ஆயிரம் ரூபா சம்பளம் என்பது எத்தனை நாளைக்கு என்பது தெரிவிக்கப்படவில்லை.

தேயிலைத் தொழிலாளர்கள் என்றால் கொழுந்தின் நிறை என்ன என்பதும் இறப்பர் தொழிலாளர்கள் என்றால் பாலின் நிறை என்ன என்பதும் தீர்மானிக்கப்படவில்லை.

அவை அனைத்தும் அப்படியே நிறுவனங்களின் கைகளுக்கு கொடுக்கப்பட்டுவிட்டன.

நான் தொழில் அமைச்சரிடம் கேட்டேன். அவரே சிரித்துக்கொண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸை குறைசொல்கிறார். கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியே வரவேண்டாம். சம்பள நிர்ணய சபைக்கு வந்தால் அங்கே சம்பளத் தொகையை மட்டுந்தான் பேசமுடியும் என இ.தொ.கா.விடம் கூறியதாக அவரே சொன்னார்.

சம்பள நிர்ணய சபையிலே தொழிலாளர்களின் சம்பளத் தொகையை மாத்திரம் பேசலாமே தவிர, வேலைநாட்கள் எத்தனை, நிறை சம்பந்தமாகவோ, வரப்பிரசாதங்கள் பற்றியோ அங்கு பேச முடியாது என அமைச்சரே சொல்லிவிட்டார்.

அப்படிச் சொல்லவேண்டாம். அரசாங்கத்துக்கு ஒரு கடப்பாடு உண்டு. தொழிலாளர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என நான் அவரிடம் கூறினேன். அதற்குப் பதிலில்லை. சிரித்துக்கொண்டே போய்விட்டார்.

**கேள்வி:- அமைச்சருடன் எவ்வாறான பேச்சுவார்த்தையை நடத்தினீர்கள்?**

**பதில்:-** நாடாளுமன்றத்தில் அவரைச் சந்தித்து தனிப்பட்ட முறையில் பேசினேன்.

கூட்டு ஒப்பந்தத்திலே இலங்கை தொழிலாளர் காங்கிரஸை தவிர, ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் வடிவேல் சுரேஷின் தொழிற்சங்கமும் உண்டு. அவர்கள் துணைப்பாத்திரம்தான்.

எவ்வளவு சொல்லியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தன்னுடைய ஆலோசனையை கேட்கவில்லையென அவர் என்னிடம் சொன்னார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் அரசாங்கத்துக்கும் நாங்கள் காலஅவகாசம் கொடுத்துவிட்டோம். இனி பொறுமையாக இருப்பது பொருத்தமில்லை, போராட்டம்தான்.

**கேள்வி:- இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு மக்களின் பிரதிநிதியாக நீங்கள் ஏன் ஒரு திட்டத்தை முன்வைக்கவில்லை?**

**பதில்:-** நாங்கள் திட்டத்தை முன்வைத்திருக்கிறோம். அதேவேளை, நாங்கள் இந்த விடயத்தில் தலையிட்டிருந்தால் எங்களால்தான் சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்கமுடியவில்லை என சொல்லியிருப்பார்கள். தொழிலாளர்களுக்கு தோட்டக் காணிகள் பிரித்துக்கொடுக்கப்பட்டு அவர்களை சிறுமுதலாளிகளாக மாற்றவேண்டும் என்பதே எமது நீண்டகாலத் திட்டம். இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் உடன்பாடு கண்டிருக்கிறோம். இன்னும் ஒருமாதத்தில் சஜித் பிரேமதாஸவுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையிலே அதிகாரபூர்வமான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. மலையக தொழிலாளர்கள் சம்பந்தமாகவும் மலையகத்தில் வாழ்கின்ற மக்கள் தொடர்பாகவும் ஒரு பட்டய ஒப்பந்தமாக இதனை நாம் கைச்சாத்திடவுள்ளோம்.

இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் சம்பள நிர்ணய சபைக்கு அப்பால் அரசாங்கமும் தொழிற்சங்கங்களும் கம்பனிகளும் ஒரு ஒப்பந்தத்துக்கு வரவேண்டும் என்ற யோசனை எங்களிடம் உள்ளது. ஆயிரம் ரூபா என்பது ஐந்து வருடங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட கோரிக்கை. இப்போதைய சூழ்நிலையில் ஆயிரம் ரூபா போதாது. தேயிலை ஏற்றுமதிமூலம் அதிகளவான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்கம் வரிச்சலுகையூடாக, அந்தத் தொகையை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**கேள்வி:- அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயற்பாடுகள் உங்களுக்கு திருப்தியளிக்கின்றனவா?**

**பதில்:-** நிச்சயமாக இல்லை. அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். ஆரவாரமின்றி ஒதுங்கியிருக்கிறார்கள். அதிகாரத்தில் இருந்தும் மக்களின் பிரச்சினையை தெரியாததுபோல் இருக்கிறார்கள். மனசாட்சியைத் தொட்டுச்சொல்லுங்கள், நாங்கள் தமிழ் முற்போக்குக் கூட்டணியாக அதிகாரத்தில் இருந்தபோது ஆள்கின்ற கட்சியில் எதிர்க்கட்சியாகத்தான் இருந்தோம். ஒவ்வொரு நாளும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சண்டை, அமைச்சரவையில் சண்டை, நாம் சண்டை போட்டு பல காரியங்களைச் செய்திருக்கிறோம். ஐம்பது ரூபா பெற்றுக்கொடுப்பதற்கு நவீன் திசாநாயக்க தடையாக இருந்தார். அதனைப் பெற்றுக்கொடுக்க முடியாமற்போனமை எமக்குப் பெரும் பின்னடைவு. அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், அது தவிர பல காரியங்களைச் செய்திருக்கிறோம். தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டம், சொந்தக் காணி, சொந்த வீடு ஆகியவற்றுடன் தனிவீடுகளை ஒன்றிணைத்து தனி கிராமங்களை உருவாக்கும் திட்டத்தை நாம் ஆரம்பித்திருந்தோம்.

மலையகத்திலே பிறந்துவளர்ந்த பழனி திகாம்பரத்துக்கு மலைநாட்டு அமைச்சைக் கொடுத்து நல்லதொரு ஆரம்பத்தை நாம் ஏற்படுத்திக் கொடுத்தோம். எல்லா தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் ஒரே நாளில் முடிக்க முடியாது. ஆனால், ஆரம்பித்தோம். நாம் ஆரம்பித்த அந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லவேண்டிய கடப்பாடு ஆளுங்கட்சியோடு இருக்கின்ற அந்த மலையகக் கட்சிக்கு இருக்கிறது. ஆனால், அவர்கள் அதனைச் செய்யவில்லை.

**கேள்வி:- முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மறைந்தபோது, நீங்கள் இருவரும் இரட்டைக்குழல் துப்பாக்கி எனச் சொல்லியிருந்தீர்கள். ஒரு குழல் மறைந்துவிட்டது. ஆயினும் மறுகுழலும் அமைதியாகத்தானே இருக்கிறது?**

**பதில்:-** இல்லை, தவறு. நாங்கள் ஆரவாரமாகத்தான் இருக்கிறோம், ஆர்ப்பாட்டமாகத்தான் இருக்கிறோம். துப்பாக்கியின் இந்தக் குழல் சுடுகிறது. சுட்டுக்கொண்டுதான் இருக்கிறது. அமைதி அங்கேதான் இருக்கிறது. ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பிறகு அந்தப் பக்கத்திலுள்ள குழல்தான் சுடாமல் அப்படியே இருக்கிறது. அவர்கள் சும்மா இருக்கிறார்கள். மக்களின் பிரச்சினைகளைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். நாடாளுமன்றத்துக்குக் கூட வருவதில்லை. அங்கு உரையாற்றுவதுகூட இல்லை. மறைந்த தொண்டமானும் அப்படித்தான் நாடாளுமன்றத்துக்கு வரமாட்டார். ஆனால், வெளியில் ஏதாவதொன்றைச் செய்வார்.

இன்று வெளியேயுமில்லை, உள்ளேயுமில்லை என்ற நிலை காணப்படுகிறது. ஆகவே, இந்தக் குழல் சுடுகிறது. அந்தக் குழல்தான் அமைதியாக இருக்கிறது.

**கேள்வி:- சமீபத்தில் இந்தியத் தூதுவருடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்தியிருந்தீர்கள். அரசியலமைப்பு விவகாரத்துக்கு மேலதிகமாக தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பிலும் பேசியிருந்தீர்கள். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையை இந்தியா தீர்க்கும் என நம்புகிறீர்களா?**

**பதில்:-** இல்லை, நாங்கள் எல்லா இடத்தை நோக்கியும் கல்லெறிவோம். மா, பாக்கு அல்லது எந்த மரமாக இருந்தாலும் பழம் விழவேண்டும் அவ்வளவுதான். இந்தியா, 13ஆம் திருத்தச்சட்டத்தை மாத்திரம் பேசிவிட்டு தப்ப முடியாது.

இந்தியாவுக்கு பாரிய கடப்பாடு இருக்கிறது. 13ஆவது திருத்தச்சட்ட விடயத்திலும் அப்படித்தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திரம் பேசிவிட்டு இருக்க முடியாது. மாகாண சபை அங்கே மட்டுமா இருக்கிறது, மேல், மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களிலும் நாங்கள் இருக்கிறோமல்லவா? இனிவரும் காலங்களில் மாகாண ஆட்சியை கைப்பற்றி அதில் அமைச்சர்களாகவும் நாங்கள் இருப்போம். அதனால் எங்களோடும் அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும் என நாங்கள் கேட்டிருந்தோம். தூதுவரும் அதனை ஏற்றுக்கொண்டார்.

அதைத்தவிர, 1964ஆம் ஆண்டுமுதல் இந்தியாவுக்கு பாரிய கடப்பாடு இருக்கிறது. சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தந்தின் ஊடாக எமது மக்கள் நாடு கடத்தப்பட்டார்கள். அவ்வாறில்லாவிட்டால் இப்போது நாடாளுமன்றத்திலே மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய 30 உறுப்பினர்கள் இருந்திருப்பார்கள்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு 13ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக தீர்வு வழங்கப்பட வேண்டும். அதேபோல் மலையக மக்கள் தொடர்பில் இந்தியாவுக்கு மிகப்பெரிய கடப்பாடு உண்டு என்பதை இந்தியாவிடம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். அதில் ஒன்றுதான் சம்பளப் பிரச்சினையும். இராஜாங்க முறையிலே அரசாங்கத்துக்குச் சொல்லவேண்டிய முறை அவர்களுக்குத் தெரியும். அதை அவர்கள் சொல்லுவார்கள்.

**கேள்வி:- மலையக அபிவிருத்திக்கான அதிகாரசபை தமிழ் முற்போக்குக் கூட்டணியால் ஆரம்பிக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறியிருக்கிறதா?**

**பதில்:-** துக்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன், துன்பப்படுகிறேன், கவலையடைகிறேன். அந்த அதிகாரசபை தூங்குகிறது. நாங்கள் வெறுமனே சபையொன்றை உருவாக்கவில்லை. அது, அமைச்சரவையில், நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதொரு அரச இயந்திரம். அதனை இல்லாதொழிக்க முடியாது. அந்த அரச இயந்திரம் இருக்கிறது, அதற்குரிய அதிகாரம் இருக்கிறது, நோக்கங்கள் இருக்கின்றன. ஆனால், இன்று அந்தச் சபையை பயன்படுத்தத் தெரியாமல் அமைதியாக இருக்கிறார்கள்.

தேர்தல் மறுசீரமைப்பு குறித்து அண்மையில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் ரிஷாட் பதியுதீன் எம்.பி.யின் கட்சி புறக்கணிக்கப்பட்டது ஏன்? இதன் உண்மைத்தன்மையை வெளிப்படையாகச் சொல்லுங்கள்.

புறக்கணிக்கப்படவில்லை. அந்தப் பேச்சுவார்த்தை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவினால் ஏற்பாடுசெய்யப்பட்டது. அவசரமாக கூட்டப்பட்ட கூட்டம் என்பதால் அவர்களுக்கு அழைப்பு கொடுக்கமுடியவில்லை. அவ்வளவுதான்.

ரிஷாட்டைத் தவிர்த்துவிட்டு நாம் இதனை எப்படி முன்னெடுப்பது? எதிரணியினர் ஒன்றாக சேரவேண்டுமல்லவா? இப்போது நாம் ஒன்றாக இணைந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துவருகிறோம்.

**கேள்வி:- நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு குழுவாக செயற்படவேண்டும் என அதற்குரிய திட்டத்தை நீண்டகாலமாக முன்னெடுத்து வருகிறீர்கள். அதன் முன்னேற்றம், நிலைமை எப்படியிருக்கிறது?**

**பதில்:-** கேள்விக்கு நன்றி. மனோ கணேசன் இதனை நீண்டகாலமாக முன்னெடுத்துவருகிறார் என்பது பதிவாக வேண்டும். நான் கடந்த 5-6 வருடங்களுக்கு முன்பிருந்தே இதனைச் சொல்லிவருகிறேன். அது நடந்தபாடில்லை. ஒரு கையினால் சத்தம் வராது. இரு கைகளும் சேரவேண்டும். அடுத்த கை என்பது ஏனைய கட்சிகள். அவர்களிடமிருந்து உத்தரவாதமான பதில் கிடைக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஆதரவு தெரிவித்திருந்தார்கள். எனினும், அது நடக்கவில்லை.

**கேள்வி:- தற்போதைய சூழ்நிலையில், அரசாங்கத்தில் இணைந்துகொள்ளுமாறு ஆளுந்தரப்பிலிருந்து அழைப்பு வந்தால் இணைந்துகொள்வீர்களா?**

**பதில்:-** நிச்சயமாக இணைவோம். எங்கள் அரசாங்கமாக இருக்கவேண்டும் அவ்வளவுதான். எங்கள் அரசாங்கம் என்றால், நாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு நன்மை நடக்க வேண்டும், நியாயம் கிடைக்க வேண்டும். அதற்கு உத்தரவாதம் தருவார்களேயானால் யாராயிருந்தாலும் எமக்குப் பிரச்சினையில்லை. இவர் தலைவர் என்பது முக்கியமல்ல, இவர் ஜனாதிபதி என்பது முக்கியமல்ல. எந்த நிறம், எந்த மதம், எந்த இனம், எந்தக் கட்சி என்பது முக்கியமல்ல. ஏனென்றால், இந்த நாட்டில் நாங்கள் சிறுபான்மை மக்களாக இருக்கிறோம்.

நான் ஒருபோதும் இந்த நாட்டில் ஜனாதிபதியாகப்போவதில்லை. தகைமையில்லாமலில்லை. இருக்கும் ஜனாதிபதி, இருந்த ஜனாதிபதி, இனி ஆகப்போகிறேன் என கனவு கண்டுகொண்டிருப்போரை விட எனக்கு தகுதியிருக்கிறது என நான் நினைக்கிறேன். ஆனால், தமிழன் என்பதால் அதற்கான அவகாசம் கிடையாது.

இங்கே இனவாதம் என்பது ஆன்மாவில் ஊடுருவியிருக்கிறது. எங்கள் மக்களை சமத்துவ இலங்கையர்களாக ஏற்றுக்கொள்ளும் வகையில் உத்தரவாதம் தருகின்ற எந்த அரசாங்கத்துடனும் இணையத் தயாராக இருக்கிறோம். ஆனால், இந்த அரசாங்கம் அப்படியொரு உத்தரவாதத்தைத் தரட்டும்.

**கேள்வி:- துமிந்த சில்வாவின் விடுதலைக்கு ஏதோவொரு வகையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி அழுத்தம் கொடுத்திருக்கிறதுதானே?**

**பதில்:-** இல்லை. அது முடிந்த விடயம். அதை நாங்கள் எழுதி வாபஸ் வாங்கிவிட்டோம். தவறெனத் தெரிந்து மாற்றிக்கொள்ளும் மனோதிடம் மனோவிடம் உண்டு.

**கேள்வி:- நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த பின்னர் கூட்டணிக்குள் முரண்பாடு ஏற்பட்டதல்லவா? அந்த உள்வீட்டுப் பிரச்சினை தீர்ந்துவிட்டதா?**

**பதில்:-** ஆமாம். தீர்ந்துவிட்டது. எந்தவொரு கூட்டணிக்குள்ளும் கட்சிக்குள்ளும் முரண்பாடுகள் இருக்கத்தான்செய்யும். நாங்கள் நாகரிகமாக, பண்புடன் பேசி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டோம். அது ஜனநாயகத்தின் அடையாளம் என நான் நினைக்கிறேன்.

## தகவல் ஏடு:



| | |
|---|---|
| பெயர்: | அகிலன் மனோ ஹரன் கணேசன் |
| பிறப்பு: | 17.12.1959 |
| தலைவர்: | ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி |
| 1999-2001: | மேல்மாகாண சபை உறுப்பினர் |
| 2001- 2010: | நாடாளுமன்ற உறுப்பினர் |
| 2011: | கொழும்பு மாநகர சபை உறுப்பினர் (ஒருநாள்) |
| 2013-2015: | மேல்மாகாண சபை உறுப்பினர் |
| 2015-2020: | அமைச்சர் - தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய அலுவல்கள் |
| 2020 முதல்: | நாடாளுமன்ற உறுப்பினர் |
| 10.12.2007: | அமெரிக்க சுதந்திர காப்பாளர் (மனித உரிமைகள்) விருது |
| 2020- 2021: | நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த நாட்கள் 61 |
| 2020- 2021: | நாடாளுமன்றத்துக்கு வருகை தராத நாட்கள் 23 |
| நாடாளுமன்ற தரவரிசை: | 158 |
| கட்சி தரவரிசை (சபையில்): | 48 |
| சபையில் பங்கேற்றுள்ள குழுக்கள்: | நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் திருத்தங்களை பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழு |

# இலங்கை – இந்திய அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்!

## இந்திய அணியுடன் ஒருநாள்

## தொடரை வென்று 24 வருடங்கள்
## போட்டியில் வெற்றிபெற்று 4 வருடங்கள்

**ஏ. அகீல் சிஹாப்**



ஷிகர் தவான் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியானது இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் விளையாடுகிறது. விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியானது 5 போட்டிகள்கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் (2023) டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியுடன் விளையாடுவதற்காக தற்போது இங்கிலாந்து மண்ணில் இருக்கும் நிலையில், இந்திய கிரிக்கெட் வரலாற்றில் முதல் தடவையாக இரு வெவ்வேறு நாடுகளுடன் இந்திய அணி விளையாடுகிறது.

அந்த அடிப்படையில்தான் ஷிகர் தவான் தலைமையிலான இளம் வீரர்களைக்கொண்ட இந்திய அணிக்கும், தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணிக்கும் இடையிலான இருதரப்பு கிரிக்கெட் தொடரின் முதல் தொடரான 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் இன்று கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் ஆரம்பமாகிறது.

ஆரம்பத்தில் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமாகுவதாக திட்டமிடப்பட்டிருந்த குறித்த தொடரானது, இலங்கை அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர், கணினி தரவாளர் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டதன் பின்னர் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு, அதன் பின்னர் மீண்டும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மேலும் வழமையாக பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகின்ற தொடரானது 3.00 மணிக்கே ஆரம்பமாகிறது.



### ஒருநாள் சர்வதேச போட்டிகள்

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் இதுவரையில் நடைபெற்ற ஒருநாள் சர்வதேச போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது, கடந்த 1979ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில்தான் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் முதல் முறையாக ஒருநாள் சர்வதேச போட்டி நடைபெற்றிருந்தது. இந்தப் போட்டியில் இலங்கை அணி 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

அன்றிலிருந்து இன்றுவரையில் இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையில் 165 ஒருநாள் சர்வதேச போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் 91 போட்டிகளில் இந்திய அணி வெற்றிபெற்றிருக்கின்ற அதேவேளை, இலங்கை அணி 56 போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்றிருக்கிறது. 11 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைய, 7 போட்டிகள் கைவிடப்பட்டுள்ளன.

### இறுதி 5 ஒருநாள் போட்டிகள்

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின்போது இலங்கை - இந்திய அணிகள் இறுதியாக ஒருநாள் போட்டியில் மோதின. இதில் இந்திய அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இறுதியாக நடைபெற்ற 5 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இந்திய அணி 4 போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கின்ற அதேவேளை, இலங்கை அணி கடந்த 2017ஆம் ஆண்டு ஒருநாள் வெற்றியை பதிவுசெய்ததன் பின்னர், கடந்த 4 வருடங்களாக இந்திய அணியுடன் ஒருநாள் சர்வதேச வெற்றியை பதிவு செய்யவில்லை.

### ஒருநாள் சர்வதேச தொடர்கள்

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் இதுவரையில் நடைபெற்றுள்ள ஒருநாள் சர்வதேச தொடர்கள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது, இதுவரையில் 18 தொடர்கள் நடைபெற்றுள்ள நிலையில் இந்திய அணி அதிகபட்சமாக 13 தொடர்களை கைப்பற்றியுள்ளது. இலங்கை அணி வெறும் 2 தொடர்களை மாத்திரம் கைப்பற்றியிருக்கும் நிலையில் 3 தொடர்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

### இறுதி 5 ஒருநாள் தொடர்கள்

இறுதியாக நடைபெற்றுள்ள ஐந்து தொடர்களையும் இந்திய அணிதான் கைப்பற்றியிருக்கிறது. இலங்கை அணி கடந்த 1997ஆம் ஆண்டு நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியதன் பின்னர் 24 வருடங்களாக இந்திய அணியுடன் ஒருநாள் சர்வதேச தொடரை கைப்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக்

இரு அணிகளுக்கும் இடையில் இன்று ஆரம்பமாகின்ற ஒருநாள் சர்வதேச தொடரானது ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் ஒரு தொடராக நடைபெறுகிறது. 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கிண்ணத் தொடருக்கு 8 அணிகளை நேரடியாக தெரிவுசெய்வதற்காக நடத்தப்படுகின்ற குறித்த உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் புள்ளிப்பட்டியலில் இந்திய அணி 29 புள்ளிகளுடன் 8ஆவது இடத்தில் காணப்படுகின்ற அதேவேளை, இலங்கை அணி 13 புள்ளிகளுடன் 11ஆவது இடத்தில் காணப்படுகிறது.



2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடரானது இந்தியாவில் நடைபெறவுள்ளதன் அடிப்படையில் தொடரை நடத்துகின்ற இந்தியா நேரடியாக தகுதிபெற்றுள்ளது. எனவே, எஞ்சிய 7 அணிகளை நேரடியாக தெரிவுசெய்வதற்காகத்தான் தற்போது ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடர் நடைபெற்று வருகிறது.

### 2023 உலகக்கிண்ணமும், இலங்கை அணியும்

மொத்தமாக 13 அணிகள் பங்கேற்கும் ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரில் ஒரு அணி ஏனைய 8 அணிகளுடன் தலா 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் விளையாடுகிறது. இலங்கை அணி இதுவரையில் 3 தொடர்களில் 9 போட்டிகளில் விளையாடியுள்ளது. இந்திய அணியுடன் நடைபெறவுள்ள தொடரையும் சேர்த்து இன்னும் ஐந்து தொடர்களில் மொத்தமாக 15 போட்டிகள் எஞ்சியிருக்கின்றன.



எனவே எஞ்சியிருக்கும் போட்டிகளில் இலங்கை அணி வெற்றிபெற்று புள்ளிப்பட்டியலில் முதல் 8 இடங்களுக்குள் வருகின்ற பட்சத்தில் மாத்திரம்தான் இலங்கை அணியால் 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேரடியாக பங்கேற்க முடியும். இலங்கை அணி, இந்திய அணியுடனான உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரை நிறைவு செய்துகொண்டு அடுத்ததாக தென்னாபிரிக்க அணியுடன் ஒருநாள் சர்வதேச தொடரில் விளையாடுகிறது.

இலங்கை அணி இறுதியாக இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அதில் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 0-2 என்ற அடிப்படையில் இழந்திருந்தது. இங்கிலாந்து தொடருக்கு முன்னதாக பங்களாதேஷ் அணியுடனான தொடரையும் 1-2 என்ற அடிப்படையில் இழந்த இலங்கை அணி, அதற்கு முன்பாக மேற்கிந்திய தீவுகள் அணியுடன் நடைபெற்ற ஒருநாள் தொடரை 0-3 என்ற அடிப்படையில் இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**போட்டி அட்டவணை (அனைத்து போட்டிகளும் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளன.)**

18 ஜூலை – முதலாவது ஒருநாள் போட்டி, பிற்பகல் 3.00 மணி

20 ஜூலை - இரண்டாவது ஒருநாள் போட்டி, பிற்பகல் 3.00 மணி

23 ஜூலை - இரண்டாவது ஒருநாள் போட்டி, பிற்பகல் 3.00 மணி

25 ஜூலை – முதலாவது இருபதுக்கு 20 போட்டி, இரவு 8.00 மணி

27 ஜூலை – இரண்டாவது இருபதுக்கு 20 போட்டி, இரவு 8.00 மணி

29 ஜூலை – மூன்றாவது இருபதுக்கு 20 போட்டி, இரவு 8.00 மணி

---

# பிரிட்டனின் ஒலிம்பிக் அணியில் மூன்று இரட்டையர்கள் பதினாறு சகோதர, சகோதரிகள்

**ரமணி**

டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் அநேகமான வீரர்கள் தமது நாடுகளிலிருந்து ஜப்பானுக்குப் புறப்பட்டுவிட்டனர். தகப்பனைத் தொடர்ந்து மகன், தாயைப் பின்பற்றி மகள் பங்குபற்றிய வரலாறுகள் உள்ளன. ஒரே போட்டியில் சகோதரர்கள் பங்குபற்றியமையையும் நாம் பார்த்திருக்கிறோம்.

பிரிட்டனின் ஒலிம்பிக் குழுவில் மூன்று இரட்டையர்கள் உட்பட 16 சகோதர, சகோதரிகள் இடம்பிடித்துள்ளனர். மேலும் ஜப்பானுக்கு செல்லும் விமானத்தில் ஒன்பது உடன்பிறப்புகளும் இருப்பார்கள். பெண்கள் ஹொக்கி வீராங்கனை ஹன்னா



மார்ட்டினின் சகோதரர் ஹாரி மார்ட்டின் ஆண்கள் அணியில் மேலதிக வீரராக இடம் பிடித்துள்ளார்.

தடகளம், படகு ஓட்டம், குத்துச்சண்டை, நீச்சல், ஜிம்னாஸ்டிக், சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகளில் பதக்கம் பெற இவர்கள் காத்திருக்கிறார்கள். முன்னதாக ஏழு உடன் பிறப்புகள் பிரிட்டனுக்காக பதக்கங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

இரட்டையர்களான பாட், லூக் மெக்கார்மேக் ஆகியோர் குத்துச்சண்டை போட்டியில் பங்குபற்றுகின்றனர்.

டிஃப்பனி போர்ட்டர், அவரது இளைய சகோதரி சிண்டி செம்பர், (வயது 26) ஹேடில்ஸில் பங்குபற்றுகின்றனர். இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்துப் போட்டியிடும் நிலை உள்ளது. 2016 ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்கிலும் இவர்கள் கலந்துகொண்டார்கள்.







படகு ஓட்டத்தில் அலிஸ்டர், ஜானி பிரவுன்லீ ஆகியோர் பல சாதனைகளைச் செய்துள்ளனர். 2012 ஆம் ஆண்டும், 2016ஆம் ஆண்டும் இரண்டு தங்கப் பதக்கங்களை அலிஸ்டெய்ர் பெற்றுள்ளார், அதே நேரத்தில் அவரது தம்பி அதே விளையாட்டில் வெண்கலமும், வெள்ளியும் பெற்றார்.

26 வயதான இரட்டையர் களான மெக்கார் மேக், லூக் ஆகியோர் பிரிட்டனின் அணியில் உள்ளனர். ரியோ ஒலிம்பிக்கில் லூக் பங்குபற்றவில்லை. இந்த முறை அணியை உருவாக்கிய பிறகு ஒன்றாக ஒலிம்பிக்கிற்கு பயணம் செய்வார்கள்.

அமெரிக்காவை பிறப்பிடமாகக் கொண்ட உடன்பிறப்பு சகோதரிகள் டிஃப்பனி போர்ட்டர், சிண்டி செம்பர் ஆகியோர் 100 மீற்றர் தடை ஓட்டத்தில் ஒன்றாக பங்குபற்றுகின்றனர். 2016ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்கிலும் இவர்கள் போட்டியிட்டனர்.

**ஜிம்னாஸ்ரிக்:** டோக்கியோவிலுள்ள ஜிம்னாஸ்டிக்கில் அய்லெஸ்பரி நகரைச் சேர்ந்த 16 வயது இரட்டையர்களான ஜெசிகா, ஜெனிபர் கதிரோவா ஆகியோர் சாதிக்கக் காத்திருக்கின்றனர். 2019ஆம் ஆண்டில் பாசலில் நடந்த ஐரோப்பிய சம்பியன்ஷிப் போட்டிகளில் பிரிட்டனின் முதல் தங்கத்தை ஜெசிகா பெற்றுக்கொடுத்தார். தனது நாட்டுக்காக அறிமுகமான போட்டியில் மூன்று பதக்கங்களை வென்றார். இவர்கள் டப்ளினில் பிறந்தவர்கள், ஆனால், அஜர்பைஜான் பாரம்பரியம் கொண்டவர்கள். குழந்தைகளாக இருந்தபோது இங்கிலாந்து சென்றனர்.





**தடகளம்:** டோக்கியோவில் 200, 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் சகோதரிகளான ஹன்னா, ஜோடி வில்லியம்ஸ் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். பிரிட்டனின் 200 மீற்றர் சம்பியனான ஹன்னா, சகோதரியுடன் ஜப்பான் செல்வதால் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்.

**நீச்சல்:** மேக்ஸ், ஜோ லிட்ச்பீல்ட் நீச்சல் போட்டிகளில் பங்கேற்கும் மூன்றாவது ஜோடி உடன்பிறப்புகள். பிரிட்டனில் பல பதக்கங்களைப் பெற்ற இவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை காணப்படுகிறது.

**சைக்கிள் ஓட்டம்:** டோக்கியோ விளையாட்டுப் போட்டிகளில் சைக்கிள் ஓட்டுதலில் இரட்டையர்கள் சைமன், அடம் யேட்ஸ் ஆகியோர் பிரிட்டனைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள். இவர்கள் சாலை மற்றும் தட சைக்கிள் ஓட்டுதலில் சிறந்து விளங்குகிறார்கள். இவர்களின் தகப்பன் ஜானல் சைக்கிள் ஓட்ட வீரராக வலம் வந்தவர்.

விபத்தில் காயமடைந்த பின்னர் தனது இரட்டைப் புதல்வர்களை அந்த வழியில் பயிற்சியளித்தார். சைக்கிள் ஓட்டப் போட்டியின்போது இருவரும் மகிழ்ச்சியாகக் கதைப்பதும், ஒருவருக்கொருவர் உணவூட்டுவதும் ரசிகர்களைக் கவர்ந்த அம்சமாகும்.

**படகு ஓட்டம்**: சகோதரிகள் மதில்டா, சார்லோட் ஹோட்கின்ஸ்-பைர்ன் ஆகிய இருவரும் படகு ஓட்டப் போட்டியில் பங்குபற்றுகிறார்கள். இளைய சகோதரி சார்லோட் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இத்தாலியில் நடந்த ஐரோப்பியப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார். இந்த ஜோடி முதன் முதலில் 2011ஆம் ஆண்டு பயிற்சி பெற ஆரம்பித்தது.






29 வயதான ஒலிம்பிக் டாம், அவரது சகோதரி 26 வயதான எமிலி ஃபோர்டு ஆகியோர் பிரிட்டனின் சார்பில் படகு ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் இன்னொரு ஜோடியாகும். 13 வயதில் பயிற்சியை ஆரம்பித்த இந்த ஜோடியின் மீது பெரும் எதிர்பார்ப்பு உள்ளது.

# தமிழன் சிறுவர் உலா

## வாரம் ஒரு சாதனையாளர்



## ஹெலன் கெல்லர்

**இளம் வயதில் ஏற்பட்ட மர்மக் காய்ச்சலால் பார்வை, பேச்சு, கேட்கும் திறன் அனைத்தையும் இழந்தவர் ஹெலன் கெல்லர். ஆனி சுலிவன் என்பவரால் சைகை மொழி கற்பிக்கப்பட்டு பிறரோடு தொடர்புகொள்ளத் தொடங்கினார்.**

**பேச்சு மற்றும் கேட்கும் திறனை இழந்தவர்களில் முதன்முதலில் இளங்கலை பட்டம் பெற்றவர் இவர்தான். சுமார் 40 நாடுகளுக்குப் பயணம் செய்து மாற்றுத் திறன் கொண்டவர்கள், தங்கள் நம்பிக்கையை இழக்காமல் இருக்க பல சொற்பொழிவுகள் ஆற்றினார்.**

**பல்வேறு புத்தகங்களை எழுதியுள்ள இவர், பல இடங்களில் தொழிலாளர் நலனுக்காகவும், பெண்கள் உரிமைக்காகவும் குரல் கொடுத்துள்ளார். உலகிலுள்ள மாற்றுத் திறன் கொண்ட மக்களுக்கான போராளியாகக் கருதப்பட்டார் ஹெலன். இவரது வாழ்க்கையைத் தழுவி 'தி மிராக்கிள் உமன்' என்ற பெயரில் நாடகங்களும் திரைப்படமும் வெளியாகி, பெரும் வரவேற்பைப் பெற்றன. இவர் பிறந்த தினமான ஜூன் 27, அமெரிக்காவில் ஹெலன் கெல்லர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.**



# அழிவுக்குள்ளாகும் தமிழர் பண்பாடு

நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கூறுகள் ஒவ்வொன்றும் நமது சமுதாய பண்பாட்டின் அடையாளச் சின்னங்களாகும். பண்பாடு என்பது வாழும் முறையை விளக்குவது. இது உணவுமுறை, ஆடை, மொழி, விளையாட்டு என இன்னும் பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. தமிழ்ச் சமூகம் உலகளவில் உச்சத்தை தொட்டதற்கு தமிழ் பண்பாட்டின், கலாசாரத்தின் அடிப்படை ஆணிவேராக இருந்தவை தமிழரின் கலைகளாகும். வாழ்வியலின் ஒவ்வொரு நிலையிலும் கலைகளை பயன்படுத்தினர். தம்மையும், தம்மைச் சார்ந்தவரையும், தாம் வணங்கும் தெய்வத்தையும் மகிழ்ச்சிப்படுத்த கலைகள் உருவாக்கப்பட்டன.

இவ்வாறாக வாழ்வியலுக்கும், வழிபாட்டுக்கும் வழிகாட்டிய நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள், இன்று மெல்ல மெல்ல அழிந்து வருகின்றமை வேதனைக்குரியது. அவ்வாறு நம் முன்னோர்களால் கடைப்பிடிக்கப்பட்ட தமிழரின் வாழ்வியலை சொல்லும், அழிந்துவரும் தமிழர் பண்பாட்டு விடயங்கள் குறித்து ஆராயவுள்ளோம்.

**தெருக்கூத்து**

தெருக்கூத்து தமிழ் பேசும் பகுதிகளிலுள்ள ஒரு தமிழ்த் தெரு நாடக வடிவமாகும். 'தெருக்கூத்து' என்ற சொல் தெரு மற்றும் கூத்து ('ஒருவகை நாடகக்கலை') ஆகிய தமிழ்ச் சொற்களிலிருந்து பெறப்பட்டது. தெருக்கூத்து என்பது ஒருவகையான பொழுதுபோக்கு, ஒரு சடங்கு மற்றும் சமூக நிலையைக் கூறும் ஊடகம். தெருக்கூத்து



பல்வேறு கருப்பொருட்களை கொண்டுள்ளது. தெருக்கூத்து மற்றும் கட்டைக்கூத்து என்ற சொற்கள் நவீன காலங்களில் பெரும்பாலும் மாறி மாறி பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், வரலாற்று ரீதியாக இரண்டு சொற்களும் இரண்டு வெவ்வேறு வகையான செயல் திறன்களுக்கிடையில் வேறுபடுகின்றன. தெருக்கூத்து ஓர் ஊர்வலத்தில் இடம்பெறும் வகையிலான நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகையில், கட்டைக்கூத்து ஓர் இரவில், ஒரு நிலையான இடத்தில் நடைபெறும் கதை நிகழ்ச்சிகளைக் குறிக்கிறது. புத்திசாலித்தனமான மேடை தந்திரங்களுடன் பாடல், இசை, நடனம் மற்றும் நாடகம் ஆகியவற்றின் கலவையாக தெருக்கூத்து நாடகங்கள் உள்ளன. நடிகர்கள் வண்ணமயமான ஆடைகளை அணிவார்கள். தெருக்கூத்து இசைக்கலைஞர்கள் ஆர்மோனியம், தப்பு (பறை), டோலாக்கு, றபான் ஆகிய இசைக்கருவிகளை அதிகமாக பயன்படுத்துவர்.

ஒரு கோவில், திறந்த மைதானம் அல்லது வேறு ஏதேனும் வசதியான தளத்தின் முற்றத்தில் ஒரு நடிப்பு அரங்கம் அமைக்கப்பட்டு கூத்து அரங்கேற்றப்படும். தெருக்கூத்து நாடகத்தின் உரை ஒரு கருப்பொருளால் தொடர்புடைய பாடல்களின் தொடராகும். ஒவ்வொரு பாடலும் ஒரு ராகத்தில் வழங்கப்படுகிறது, இது ஒரு பாரம்பரிய பாடலின் வடிவத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

# மலைப்பாம்பும் மான்குட்டியும்



குறட்டி என்ற பெயர் கேட்டால் மஞ்சளாறு காட்டில் சிறுத்தைகளும், புலிகளும் கூட பயப்படும். இருபது அடிக்கும் நீளமாக மரங்களின் கிளைகளில் படர்ந்திருக்கும் தனது அழகிய உடம்பும், கரும்புள்ளிகளும் அதற்கு பெருமையாக இருந்தன.

கரும்பழுப்பு, பழுப்பு என்று பல நிறங்களில் மலைப்பாம்புகள் இருக்குமே தவிர, இப்படி இலட்சணமான கரும்புள்ளிகளுடன் பார்ப்பது ரொம்பவும் அரிது. மலைப்பாம்புகள் பொதுவாக பறவைகள், முயல் போன்ற சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணும். சிலசமயம் மான் போன்ற சற்றுப் பெரிய விலங்குகளைக்கூடத் தாக்கும்.

ஆனால், குறட்டி சற்று வித்தியாசமானது. காட்டெருமைக்கன்று, சிறுத்தை போன்றவற்றைக் கூட தனது குறட்டிப்பிடியில் நொறுக்கி எடுத்துவிடும். அதனால் அதற்கு 'குறட்டி' என்று பெயர் வழங்கிவந்தது.

குறட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக்கொண்டு இருந்தது. மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் மிளா மான்குட்டி அதன் கண்ணில் பட்டது. நீண்டு கிடந்த தனது உடலை வேகமாக தன்னை நோக்கி இழுத்தது. அநேகமாக அந்த மான்குட்டி மிகவும் குறுகலாக ஓடும், அந்த ஆற்றைக் கடந்து வரலாம். அப்படிக் கடந்து வந்தால் குறட்டி இருக்கும் வழியாகத்தான் வரவேண்டும். அந்த மிளா மான் ஆற்றில் இறங்கியது. குறட்டியில் வாயில் நீர் சுரந்தது.

மீதமுள்ள குறட்டி தனது உடலை கிளையில் சுற்றி தனது தலையை மட்டும் தொங்க வைத்தபடி அசையாமல் இருந்தது. பார்வை மட்டும் ஆற்றில் இறங்கிய மான் மீது இருந்தது. ஆற்றில் மான் நீந்தியது. இதே மரத்திலிருந்துதான் குறட்டி ஒரு நாள் ஒரு சிறுத்தையை மடக்கிப் பிடித்தது. இறப்பர் போன்ற தனது உடம்பை கயிறுபோல் பாவித்து இறுக்கிய வேகத்தில் சிறுத்தையின் எலும்புகள் மடமடவென்று முறிந்தன.

மான் கரையேறிவிட்டது. குறட்டி அசையாமல் இருந்தது. அந்த மரத்திற்கு அருகாமையில் வந்த பாதையில் சுற்றிப் பார்த்தபடி நடந்துவந்தது அந்த மான். சொல்லி வைத்ததுபோல் அந்த மரத்தடியில் வந்து நின்றது. குறட்டி மான்குட்டியின் கழுத்தில் மாலையாய் விழுந்தது.

"அம்மா" என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்துபோனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது.

குறட்டிக்குக் கூட ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. குறட்டி அதன் முகத்தைப் பார்த்ததும் பாவமாக இருந்தது. அதற்குள் குறட்டி இறப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றியது. மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது. குறட்டி இப்படி திடீர் தாக்குதல் நடத்தும்போது எந்தவொரு மிருகமும் இதனிடம் தப்பிக்க போராட்டம் நடத்துமே தவிர, இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது.

"ஆமாம். ஏன் அழுகிறாய்" என்றது குறட்டி.

மான் தனது அழுகையை நிறுத்திவிட்டு உறுதியான குரலில் சொன்னது.

"இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்" என்றது.

"நான் எப்படி உதவ முடியும்?" என்றது.

"மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்று நாவல் பழங்களை எடுத்து என் அம்மாவிற்கு கொடுத்துவிட்டு மீண்டும் இங்கு வந்து சேருகிறேன். பின்னர் உன் இஷ்டப்படி என்னைக் கொன்று சாப்பிடு" என்றது மான்.

"நீ மீண்டும் என்னிடம் திரும்பி வருவாய் என்பதற்கு என்ன உத்தரவாதம்?"

"நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லையென்றால் நீ என் கூடவே வா. நாவல் பழங்களை என் தாயிடம் சேர்த்ததும் நீ என்னைக் கொன்று சாப்பிடு."

"உன்னை விட்டால் என்னால் பிடிக்கமுடியாது? உன் வேகம் என்ன, என் வேகம் என்ன?" என்றது குறட்டி.

"என் மீது நம்பிக்கை இல்லையென்றால் நீ என்ன சொல்கிறாயே அதற்கு நான் கட்டுப்படுகிறேன்"

"நான் உன் உடலை சுற்றியபடியே இருப்பேன். என்னை சுமந்தபடியே செல்லவேண்டும்" என்று சொன்னது குறட்டி. அது அதற்கு ஒத்துக்கொண்டது. குறட்டியை சுமந்தபடியே சென்றது மான். மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்றது. நாவல் பழங்களை சேகரித்துக்கொண்டது. மலைப்பாம்பு தன் உடலைச் சுற்றியிருக்க உற்சாகத்துடன் நடந்தது. தனது அம்மாவுக்காக தன்னுடைய உயிரைக் கொடுக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது அதற்கு சந்தோஷமாக இருந்தது. மான் தன் இருப்பிடத்திற்கு அருகாமையில் வந்தது. தன் இருப்பிடத்தையும் படுத்துக்கிடக்கும் அம்மாவையும் காட்டியது. குறட்டி அதன் உடம்பிலிருந்து மெல்ல இறங்கியது.

"நாவல் பழங்களைக் கொடுத்துவிட்டு தப்பிக்கலாம் என்று நினைத்தால். அப்புறம் நோய் வாய்ப்பட்டிருக்கும் உனது அம்மா எனக்கு உணவாக நேரிடும்" என்றது குறட்டி.

"நீ செய்த உதவியை ஒரு நாளும் மறக்கமாட்டேன். என் வார்த்தையை மீறமாட்டேன்" என்று சொல்லிவிட்டு துள்ளி ஓடியது மான்குட்டி.

குறட்டி மெல்ல ஊர்ந்து மரங்களின் ஊடே மறைந்துகொண்டது. அங்கு அதற்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு பதினைந்து இருபது மான்கள் உடல் நலம் விசாரித்தபடி இருந்தன. அதில் இரண்டு மூன்று மான்கள் ஒன்றுசேர்ந்தால் கூட அவற்றின் கொம்புகளால் தனது தலையைக் குத்திக் கிழித்து விடமுடியும்.

இப்படித்தான் சென்ற வாரம் ஒரு மலைப்பாம்பை இரண்டு பெரிய மிளா மான்கள் கொம்பினால் நசுக்கி எடுத்துவிட்டன. அந்த மலைப்பாம்பு அங்கேயே உயிரைவிட்டது. பயம் என்றால் என்னவென்று தெரியாத குறட்டிக்குக் கூட கொஞ்சம் நடுக்கமாக இருந்தது.

"கையில் கிடைத்ததை விட்டுவிட்டோமோ?" என்று கூட ஆதங்கமாக இருந்தது.

எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. குறட்டி பெரிய தனது உடலை வளைத்து நெளிந்தபடி மறைவிடம் நோக்கி நகர, ஏதோ அரவம் கேட்டது. அதே மான்குட்டி தனியாக வந்தது.

"என் கடமை முடிந்தது எனது வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன். உனக்கு எனது நன்றி" என்று சொன்னவாறு குறட்டியின் முன்னால் வந்து நின்றது மான்குட்டி. குறட்டியின் முரட்டுத் தோலையும் மீறி அதன் உடல் புல்லரித்தது.

"என்னைப் பற்றியா சொன்னாய்" என்றது குறட்டி.

"இல்லை எனக்கு உதவி செய்த உன்னை காட்டிக்கொடுக்க மாட்டேன்."

"உன்னை கொன்று தின்னப்போகும் நான் எப்படி உனக்கு உதவியவனாவேன்?"

"நீ சொன்னது சரிதான். ஆனால் நீ உதவாவிட்டால் என் அம்மாவைக் காப்பாற்ற முடியாது போயிருக்கும். பெற்றோருக்காக தனது உயிரைத் தருவதைவிட பெருமை தரக்கூடிய விஷயம் உலகத்தில் வேறு என்ன இருக்கமுடியும்?"

குறட்டி தனது தலையை மெல்ல உயர்த்தி மான்குட்டியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தது. "தாய்க்காக தனது உயிரை தரத்துணிந்த உன்னை வணங்கினாலே எனக்குப் பெருமை" என்று சொல்லியபடி குறட்டி அதனை உயிரோடு விட்டுச் சென்றது. மான்குட்டி குறட்டியை ஆச்சரியமாகப் பார்த்தது. மரக்கிளைகளில் தவழ அதன் உடம்பின் கரும்புள்ளிகள் வைரமாக மின்னின.

## ஆ அப்படியா?

# புள்ளப்பூச்சி என்றால் என்ன?

புள்ளப்பூச்சி என்றால் தோண்டும் பூச்சி என்று பொருள்.

அகராதியின் விளக்கப்படி இப்பூச்சி 'கிரில்லோடால்பிடே' என்ற குடும்பத்தைச் சார்ந்த பூச்சி இனங்களுள் ஒன்று.

**பிள்ளைப்பூச்சி என்றழைக்கப்படும் பூச்சி**

இப்பூச்சி பேச்சு வழக்கில் புள்ளப்பூச்சி என்று அழைக்கப்படுகிறது. (ஆங்கிலத்தில் Gryllotalpa brachyptera)

புள் - என்றால் தோண்டுதல், துளையிடுதல் என்று பொருள்.

இப்பூச்சிகள் மண்ணை வலுவுடன் தோண்டி (துளையிட்டு) உட்செல்லும் ஆற்றல் கொண்டதனால் நம் முன்னோர்கள் இட்ட காரணப் பெயரே புள்ளப்பூச்சி.

பிள்ளைப்பூச்சி என்பதே புள்ளப்பூச்சியாக மருவியது என்ற அகராதிகளின் கருத்து தவறு என்பதை மேற்சொன்ன வேர்ச்சொல்லின் விளக்கம் நமக்கு உணர்த்துகிறது.

புள்ளப்பூச்சி என்பதே சரியான பொருள் பொதிந்த பெயர்.

புள் - என்ற அடிச்சொல் துளைப் பொருள் குறித்ததாகும்.

புள் - துளை, தோண்டு.


புள்ளுதல் - துளைத்தல், குத்துதல், தோண்டுதல்.

புள் - புல் - உள் துளையுள்ள தாவர வகை.

புள் - புள்ளாங்குழல் - புல்லாங்குழல்.

(புள் - பறவை அலகால் கொத்தி/குத்தித் தின்னும் பறவைக்கு புள் - எனவும் பெயர் உண்டு - புள்ளினம்)





காரிகை களம்

# குழந்தைகளின் கற்பனைத்திறனை வளர்க்கும் கதைகள்



குழந்தைகளின் உலகம் முற்றிலும் மாறுபட்டது. பார்க்கும் விடயங்களையும் கேள்விப்படும் செய்திகளையும் அவர்களது கற்பனைத்திறனுக்கேற்பவே புரிந்துகொள்வார்கள். அதனால்தான் தாத்தா, பாட்டிகள் வாழ்வியல் நெறிகளை கதைகளின் வடிவில் குழந்தைகளுக்கு சொல்வார்கள். தினமும் கதைகளை கேட்கும் குழந்தைகளின் கற்பனைத்திறன் நன்றாக வளர்ச்சி பெறுவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. கதைகளின் மூலம் வாழ்வியலுக்கான நீதிநெறிகளையும் சரியான அணுகுமுறைகள் பற்றியும் அறிந்துகொள்வதால் சிக்கலான சூழ்நிலைகளில் கூட எளிதாக சமாளிக்கும் திறமை குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.

### ஆழமாக மனதில் பதியும்

எந்த விடயத்தையும் கதைகளின் வடிவில் குழந்தைகளுக்குச் சொல்லும்போது எளிதாக நினைவில் நிற்கும். நீதிநெறிகள், பாடசாலை பாடங்கள், பொது அறிவு சார்ந்த விடயங்கள் போன்றவற்றை சுவாரஸ்யமான கதைகளாக கூறினால் ஆழ்மனதில் அழியாமல் பதியும்.

### ஒழுக்கநெறிகளை வளர்க்கலாம்

தங்களுடைய சுதந்திரமான போக்கில் பெரியவர்கள் தலையிட்டு அறிவுரை வழங்குவதை குழந்தைகள் பெரும்பாலும் விரும்புவதில்லை. அதனால் அறிவுரைகளையும், ஒழுக்கநெறிகளையும் ஆர்வமூட்டும் வகையில் நன்னெறிக் கதைகளாக சொல்லவேண்டும். அவர்களது இயல்புக்குப் பொருத்தமான கதாபாத்திரங்களை அறிந்து அதன்மூலம் நன்னெறிகளை வலியுறுத்தும் கதைகளைக் கூறுவது குழந்தைகளுக்கு பிடித்தமானதாக அமையும்.

### கதை வடிவில் பாடங்கள்

பாடநூல்களிலுள்ள வரலாற்றுச் சம்பவங்களை மதிப்பெண் அடிப்படையில் குழந்தைகள் படிக்கும்போது அவை அவர்களது மனதில் பதிவதில்லை. பாடங்கள் கதைகளாக உருவகம் செய்து சொல்லும்போது அதன் உட்பொருள் அவர்களது மனக்கண்ணில் காட்சிகளாக விரியும். அதனால் பாடங்களிலுள்ள பெயர்கள் உள்ளிட்ட இதர குறிப்புகள் மனதில் எளிதாக பதிந்துவிடும்.

### கதைகளால் ஏற்படும் நன்மைகள்

அன்போடு கதைகளைச் சொல்லும் பெற்றோரிடம் பிள்ளைகளுக்கு பாசப்பிணைப்பு அதிகரிக்கும். கதையில் சொல்லப்பட்ட காட்சிகளை கற்பனை செய்துகொள்வதால் குழந்தைகளின் சிந்தனைத்திறன் வளரும். அதனால் வளர்ந்த பிறகு எதையும் கூர்ந்து கவனித்து ஆராய்ந்து செயற்படுவார்கள். கதை கேட்கும் பழக்கம் காரணமாக கைபேசி விளையாட்டுகளுக்கு அடிமையாகி உடல் மற்றும் மனஆரோக்கியம் பாதிக்கப்படுவதை தவிர்க்க முடியும்.

### கதை சொல்லும் முறை

இரவுநேரத்தில் குழந்தைகள் தூங்குவதற்கு முன்னர் கதை சொல்லலாம். அவர்களது வயதுக்கேற்ற கதைகளை தெரிவுசெய்து சொல்லி அவற்றிலிருந்து கேள்வி கேட்பது குழந்தைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்த உதவும். கதை சொல்லி முடித்த பின் அதன் சாராம்சத்தை அவர்கள் புரிந்துகொண்ட விதத்தில் திரும்பவும் சொல்ல வைத்து பாராட்டலாம். திகிலூட்டும் பேய்க் கதைகள், மற்றவர்களை தந்திரமாக ஏமாற்றும் கதைகள், மூடநம்பிக்கைகளை வளர்க்கும் கதைகளை குழந்தைகளுக்கு சொல்வதை தவிர்க்க வேண்டும்.

# வேர்க்கடலை வெஜிடபிள் சாலட்

### தேவையான பொருட்கள்

ஊறவைத்து வேகவைத்த வேர்க்கடலை - ஒரு கப்
பொடியாக நறுக்கிய வாழைத்தண்டு - கால் கப்
வெள்ளரித் துண்டுகள் - கால் கப்
கேரட் துண்டுகள் - கால் கப்
தக்காளி துண்டுகள் - 2 டேபிள் ஸ்பூன்
பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் - 1
எலுமிச்சைச் சாறு - ஒரு டீஸ்பூன்
கடுகு - ஒரு டீஸ்பூன்
எண்ணெய் - அரை டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
பொடியாக நறுக்கிய கொத்தமல்லி - 2 டீஸ்பூன்



### செய்முறை

ஒரு பாத்திரத்தில் வேகவைத்த வேர்க்கடலையை போட்டு அதனுடன் நறுக்கிய வாழைத்தண்டு, வெள்ளரிக்காய், கேரட், தக்காளி, ப.மிளகாய் போட்டு நன்றாக கலக்கவும்.

அடுத்து அதில் எலுமிச்சை சாறு, உப்பு சேர்த்து நன்றாக கலந்துகொள்ளவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு போட்டு தாளித்து சலாட் கலவையில் கொட்டி கொத்தமல்லி தூவி பரிமாறவும்.

சத்தான சுவையான சாலட் ரெடி.

# மன அழுத்தமும் திசைத் திருப்பும் பயிற்சியும்

இன்றைய காலகட்டத்தில் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு மனச்சோர்வுக்கு ஆளாகுபவர்கள் அதிகரித்து வருவதாக உலகின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தற்போது 45 முதல் 60 வயதுக்குட்பட்டவர்களிடம் மனஅழுத்த பாதிப்பு உயர்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது. பலர் மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், மிகச்சிலரே அதுபற்றி வெளிப்படையாக பேசுகிறார்கள்.

விறுவிறுப்பான நடைப்பயிற்சி அல்லது தவறாமல் உடற்பயிற்சி செய்வது மனச்சோர்வை போக்கும் மிகச்சிறந்த வழிமுறையாகும். ஒருவர் மனச்சோர்வடையும்போது உடல் இயக்க செயற்பாடுகளும் பாதிப்புக்குள்ளாகும். அந்த சமயத்தில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவது மனநிலையை மேம்படுத்த உதவும். உடற்பயிற்சி தவிர யோகாசனமும் செய்யலாம். ஆன்மிக வழிகாட்டுதலையும் பின்தொடரலாம்.

மனதை பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து மனம் திறந்து பேசுவது முக்கியம். நம்பகமான நண்பர்களிடம் சிக்கலான பிரச்சினைகள், மனதை வாட்டும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கலாம். அப்படி விவாதிப்பது மனதை காயப்படுத்தும் எண்ணங்களிலிருந்து விடுபட உதவும். மனஆரோக்கியத்தை பாதுகாக்கவும் வழிவகை செய்யும். நெருங்கிய நண்பர்கள் இல்லாதபட்சத்தில் மனநல ஆலோசகர்களை நாடலாம்.

பசிக்கும், மனநிலைக்கும் இடையே விசித்திரமான தொடர்பு இருக்கிறது. மனச்சோர்வுக்குள்ளாகும்போது சிலர் சாப்பிடமாட்டார்கள். சிலர் வழக்கத்தைவிட அதிகமாக சாப்பிடுவார்கள். அதேவேளை, உடலுக்குப் போதுமான ஊட்டச்சத்துகள் கிடைப்பதில் கவனமாக இருக்கவேண்டும். பழங்கள், காய்கறிகள் சாப்பிடுவது நல்லது. பசி எடுக்காவிட்டாலும் தேவைக்கு சாப்பிடுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

மனச்சோர்வுக்குள்ளாகும்போது மனதை திசை திருப்பும் செயற்பாடுகளில் ஈடுபடலாம். குடும்ப உறுப்பினர்கள், நண்பர்களுடன் ஆரோக்கியமான விவாதங்களில் ஈடுபடலாம். அது உள்ளுணர்வுகளை கட்டுப்படுத்த துணைபுரியும். மனதை வருத்திக்கொண்டிருக்கும் பிரச்சினையின் வீரியத்தைக் குறைக்கவும் வழிவகை செய்யும்.

முக்கியமான செயல்களை செய்துமுடிக்க முடியாமல் போகும்போது மனம் சோர்வுக் குள்ளாகும். அப்படிப்பட்ட வர்கள் 'என்னால் இதை செய்ய இயலாது' என்ற எண்ணத்துடன் களமிறங்குவத ற்குப் பதிலாக 'அதிலிருந்து நான் பல





விடயங்களை கற்றுக்கொள்ள முடியும்' என்ற எண்ணத்துடன் செயற்பட்டால் மனச்சோர்வு ஏற்படாது.

# நகப்பூச்சுகளை சில நிமிடங்களில் நீக்க...



விரல் நகங்களில் அழகுக்காக பூசப்படும் நகப்பூச்சுகள் சில நாட்களில் பொலிவை இழக்கத் தொடங்கிவிடும். நகங்களிலிருந்து உதிர்ந்து விழுந்துகொண்டிருக்கும். அதனை பலரும் கண்டுகொள்ள மாட்டார்கள். ஆனால், அவசரமாக வெளியே செல்லவேண்டியிருந்தால் விரல் அழகை கெடுக்கும் நகப்பூச்சை நீக்குவதற்கு மெனக்கெடுவார்கள். சில எளிமையான வழிமுறைகளை பயன்படுத்தியே நகப்பூச்சை சில நிமிடங்களில் நீக்கிவிடலாம்.

### பற்பசை

நகப்பூச்சை நீக்குவதற்கு பற்பசையை கூட பயன்படுத்தலாம். பொதுவாக பற்பசையில் எத்தில் அசிடேட் கலந்திருக்கும். இது நகப்பூச்சை நீக்குவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்களில் சேர்க்கப்படும் மூலப்பொருளாகும். பல் துலக்கப் பயன்படுத்தப்பட்ட பழைய பிரஷில் சிறிதளவு பற்பசையை எடுத்து நகங்களில் படர்ந்திருக்கும் நகப்பூச்சுமீது தேய்க்க வேண்டும். இரண்டு, மூன்று முறை நன்றாக அழுத்தி தேய்த்தால் நகப்பூச்சு உதிர்ந்து வந்துவிடும். நகமும் பிரகாசத்துடன் காட்சியளிக்கும்.

### வாசனை திரவியம்

நகப்பூச்சை நீக்குவதற்கு வாசனைத் திரவியத்தையும் உபயோகிக்கலாம். டிஸ்யூ பேப்பரில் சில துளிகள் வாசனைத் திரவியங்களை தெளித்துவிட்டு அது ஆவியாகும் முன்பு நகங்களில் நன்றாக அழுத்தி தேய்க்க வேண்டும். ஓரிரு முறை அவ்வாறு தேய்த்தால் நகப்பூச்சு நீங்கிவிடும்.

### ஹேர் ஸ்பிரே

பெரும்பாலான ஸ்பிரேக்களில் ஒல்கஹால் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது நகப்பூச்சை நீர்த்துப்போக செய்ய உதவும். நகங்களில் சிறிதளவு ஸ்பிரே தெளித்து காட்டன் பஞ்சு அல்லது டிஸ்யூ பேப்பரை கொண்டு அழுத்தி தேய்க்க வேண்டும். நகங்களில் தெளிக்கும் ஸ்பிரே ஆவியாவதற்கு முன்பு ஓரிருமுறை தேய்த்துவிட்டால் போதும். நகப்பூச்சு நீங்கிவிடும்.

### சானிடைசர்

கொரோனா வைரஸ் தொற்றிடமிருந்து தற்காத்துக்கொள்வதற்கு கைகளில் உபயோகப் படுத்தும் சானிடைசரையும் பயன்படுத்தலாம். காட்டன் பஞ்சுவில் சிறிதளவு சானிடைசரை ஒற்றி எடுத்து நகப்பூச்சு மீது அழுத்தி தேய்க்க வேண்டும். இரண்டு, மூன்று முறை அவ்வாறு செய்தால் நகப்பூச்சு நீங்கிவிடும்.



# சனிடைசர் ஆபத்து!

கொரோனா வைரஸிடமிந்து தற்காத்துக்கொள்வதில் முகக்கவசமும், சனிடைசரும் முக்கிய பங்கு வகிக்கின்றன. வைரஸ்களை கொல்வதற்கு சனிடைசர் உதவினாலும் அதனை சற்று கவனமாக கையாளவேண்டும். தொடர்ந்து பயன்படுத்தும்போது சில தொல்லைகள் ஏற்படக்கூடும். சனிடைசரில் 60 சதவீதத்திற்கும் அதிகமாக ஒல்கஹால் கலந்திருப்பதால் வைரஸ்களை திறம்படக் கொல்லும். ஆனால், சில சனிடைசர்களில் ஒல்கஹாலுக்கு பதிலாக டிரைக்ளோசான் என்ற வேதிப்பொருள் கலக்கப்படுவதால் கவனமாக பார்த்து வாங்கவேண்டும்.

டிரைக்ளோசான் என்ற வேதிப்பொருள் பூச்சிக்கொல்லி மருந்துகளில் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. அதனால் அதில் விஷத்தன்மையும் கலந்திருக்கிறது. அது மக்களின் பொதுவான பயன்பாட்டிற்கு ஏற்றதல்ல.

அத்தகைய சனிடைசர்களை அடிக்கடி பயன்படுத்தும்போது அவை உடலில் உறிஞ்சப்பட்டால் தைராய்டு சுரப்பியின் செயற்பாடுகள் பாதிப்புக்குள்ளாகும். தசைகள் மற்றும் ஈரலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். சாப்பிடுவதற்கு முன்பு சனிடைசர் பயன்படுத்தி கை கழுவுவதை கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

அதிலுள்ள வேதிப்பொருட்கள் உடலுக்குள் சென்று, செரிமான மண்டலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும். குழந்தைகளின் நோய் எதிர்ப்பு மண்டலத்தையும் பாதிக்கவைத்துவிடும். சிலர் சனிடைசரை கொண்டு முகக்கவசத்தை கழுவும் வழக்கத்தையும் பின்பற்றுகிறார்கள். அது ஆபத்தானது.

அதிலிருக்கும் வேதிப்பொருட்கள் முகக்கவசத்தில் கலந்துவிடும். அதனை மறுபடியும் உபயோகிக்கும்போது சுவாசம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படலாம். வெளியிடங்களுக்கு செல்லும்போது தவிர்க்க முடியாத பட்சத்தில் மட்டும் சனிடைசரை பயன்படுத்துங்கள்.

# ஹைக்கூ கவிதைகள்

கால்கள் மாறியதால்
வீடு மாறிப் போகிறது
“திருடிய செருப்பு”

பழைய பாத்திரம்
பிடிக்க வைத்திருக்கிறார்கள்
“பரண்மேல் ஒட்டடை”


நாணயம் இல்லை
செல்லாக் காசாகிறது
“பழைய உண்டியல்”

முடங்கிய இடம்
நீண்டுகொண்டே போகிறது
“பட்டினிச் சாவு”

கொடுத்த வாக்குகள்
சரிபார்த்து எண்ணப்படுகின்றன
“குறைந்த சம்பளம்”

ரோஷான் ஏ.ஜிப்ரி
கட்டார்

# மனைவி



மனைவி ஆணின் மறு உருவம்
அவளேதான் நமக்கு
நல்லதொரு மறுதாய்
அவளேதான் நம் வெற்றி
நாம் உயர்ந்திட
ஆணின் வெற்றிக்குப் பின்னால்
ஏணியாக நிற்பவள்

ஒரு மனிதனின்
திருமண வாழ்வின் பின்
அவன் வாழ்வு நாசமாகுவதும்
நல்லதாகுவதும் அவளின் கைகளில்
வாலிபத்தில் சுகம் தருபவளும்
வயோதிபத்தில் துணை தருபவளும்
அவளேதான்

அவள் ஓர் இயந்திரம் போலவே
காலையில் பாடசாலை செல்லும்
பிள்ளைகளின் பணிக்காக
பின் காரியாலயம் செல்லும்
கணவனின் பணிக்காக
தேநீரில் வெற்றுத் தேயிலை
கூடுதல் என்று குழம்பும்
கணவனின் வீரவசனத்தை
தாங்கிக் கொண்டு

அவனின் புகைத்தல்
பிள்ளைகளுக்கு அங்குல புழுவின்
அவஸ்தையை ஏற்படுத்தும்
என்ற கவலையற்ற கணவர்களும்
உள்ள உலகத்தில்
தாய் மனசு தங்கம்
மனைவி மனசு மாணிக்கம்
கணவனின் நடத்தையிலே

மு.கா.முகம்மது அஸ்வர்
திருகோணமலை

# மௌன வித்தை



எங்கிருந்து கற்றுக்கொண்டாய்
என் மனதை நோகடிக்கும்
இந்த மௌன வித்தையை

என் வலிகளை ஆயிரம் கவி வரிகளால்
உனக்காய் கிறுக்கினேன்
என் கிறுக்கலெல்லாம்
வெறும் கிறுக்கல் என்று
கடந்து விடுகிறாயா

உன்னிடம் இருந்து எந்த பதிலும்
எனக்கு கிடைக்கப் போவதில்லை
என்பதை அறிந்தும்
ஒரு பைத்தியக்காரியாய்
உன்னிடமே என் புலம்பல்களெல்லாம்
புலம்பி விட்டுச் செல்கிறேன்

அன்பே உன்னோடு பேசும்
ஆசையை தவிர இப்போது
எனக்கு எந்த பேராசையும் இல்லை

என்னை விட்டு நகர்ந்து செல்லும்
இந்த மௌன வித்தையை
எனக்கும் கற்றுக்கொடு
உன்னைப்போல் மௌன
மாய் வாழ

மஜினா
மாவடிப்பள்ளி

# சுதைஸ் எனும் சொர்க்க தேசி



இது நோய்கள் விற்று
மருந்து, மாத்திரைகள்
வாங்கும் உலகம்
இறந்து போகிறவனை
விற்றுத்தான் இருப்பவன்
கஞ்சி குடிக்கிறான்

இந்த பிணக்காடு அவனுக்கு
பிடிக்கவில்லை
எங்கும் வெயில்... நிழல் இல்லை
நெருப்பை உண்டு
மனங்களை எரிக்கும்
பட்ட மரங்களில்
கனி தேடி எந்தக் கிளையில்
அமர்வது இனி இப் பட்சி

மேலும்
அவனொரு சொர்க்கத்து பறவை
இந்த வனமும் வானம் போதாது
அவன் வசிக்க
மரணக் குளத்தில்
மகிழ்வுடன் நீந்தி களைத்து
நீத்து தன் இருப்பை நிறைவு செய்து
பலிக்கு பயந்த உயிர்களுக்கு
சிரிப்பும் சிறப்புமாய் பாடம் புகட்டி
படியென்று சிந்திக்க வைத்து
வெற்றுடல் விட்டு
படியேறியது அப்பட்சி
இப்போதது நிரந்தரத்திற்குள் நிரந்தரமாகிவிட்டது
இறை அழைப்பை ஏற்ற சுதேசி ....
இனி இலங்கும் சுவர்க்க தேசி!

ரோஷான் ஏ.ஜிப்ரி
கட்டாரிலிருந்து

தூறல்கள்

# ஒரு நாள் ராசாக்கள்



அவர்கள் வாயால் சுட்ட வடைகள்
ஊரெங்கும் நிறைந்தே கிடக்கின்றன.

அவனுக்கான கால நேரங்கள்
வாய்ப்பாய் அமைவதும்
அவனது வலையில் வந்து
வீழ்வதற்கென்றே சில
ஏமாந்த அப்பாவிகள்
அணியணியாய் நிற்பதுவும்
அவனை மேலும் மேலும்
களிப்படையச் செய்கின்றது.

அவன் வழங்கும்
வாக்குமூலங்களும்
நம்பிக்கையூட்டும்
உத்தரவாதங்களும்
இற்றைவரை நிறைவேற்றப்பட்டதான
வரலாறுகளைக்
காணவும் முடியவில்லை.


அரச தொழில் பெற்றுத்தருவதாய் சுட்ட வடை
நாறிப்போய் கிடக்கிறது
வெளிநாடு அனுப்புவதாய்
சுட்ட வடை கிடப்பில் கிடக்கிறது

இவற்றுக்காய் ஈடுவைத்த
காணிகள் நகைநட்டு
காலாவதியாகி கைவிட்டுப்
போனது மட்டுமல்ல
வருடக்கணக்காய்
தொழிலின்றி உழைப்பதற்கும்
மனமின்றி உருக்குலைந்து
சீரழிந்த அப்பாவி இளைஞர்கள் ஏராளம்.

தேர்தல் காலத்தில்
பிரசார மேடைகளில்
பலரும் தம் வாயால்
சுட்ட வடைகள் எல்லாம்
ஊரெங்கும் பரவிக் கிடக்கின்றன
மேலும் மேலும் பல வடைகள்
சுடப்படவும் இருக்கின்றன
ஐயோ பரிதாபம்
மகாஜனங்கள்தான்
மறதியென்ற தூக்கத்தில்
ஆழ்ந்து கிடக்கின்றனர்.

ஏ.ஆர்.ஏ.சத்தார்
மருதமுனை

# உனை நினையாமல் நானில்லை



என் உயிரே நீ எங்கே கூடுவிட்டுக்
கூடு தாவிச் சென்றாயோ
உயிரில்லா வெறும் உடல் கொண்டு
உனைத் தேடுகிறேன் என் தேவதையே
தேகமெல்லாம் இளைத்துப்போய்
என் கல்லறையின் கதவினை
நானே திறந்து உறங்கிவிடும் நேரமிது.

உனைத்தேடி அலைந்து
தோற்றுப்போன என் கால்களை
உடைத்து நெஞ்சாங் கட்டையாக்க
மாற்றி என்னுடலை தீயிட்டு எரிக்கட்டும்
இல்லையேல் இறந்து
எரிந்துகொண்டிருக்கும் என் உடலும்
எழுந்து உனைத்தேடி அலையும்.

அழகே என் காதலை உன்னிடம்
நாவின் உதவியில் உதடுகளால்
கூறவில்லை
உருவம் முளைக்கும் முன்
கருவிலே உருவான மனதாலே
எடுத்துரைத்தேன்
புரிந்துகொள்ள இது புதிரல்ல
புனிதத்தின் மறு விம்பமடி என் காதல்.

என் விழிகள் மூடவில்லை
ஆனாலும் கனவுகளாய் ஆனாயே


அழுது புலம்பி கண்ணீர் வடித்து
துடித்து துவண்டு போறேன்
என்னவளே நீ என்னாலே
ஏதும் இழந்துவிட வேண்டாம்.

உன் பிரிவினால் இல்லையடி
எனக்கிந்த வேதனைகள்
நான் கொண்ட நம்பிக்கை
சிதைவுண்டு போனதாலே
புன்னகைக்கும் உதடுகள்
நடுக்கமும் கொண்டதடி
காலத்தின் மாற்றத்தால்
நான் வரைந்த சித்திரங்கள்
கிழிந்து காற்றிலே பறக்கிறது.

நான் கொண்ட காதலும்
உயரில்லா சிலைகளுக்கு
ஒப்பாக மாறித்தான் போனதடி
உனை இழந்த துயராலே
என் இதயம் பிளவுண்டு
நிலைகுலைந்து போனதடி
நீள்கின்ற வாழ்க்கையில்
உன் துணையாக நானில்லை
புரிந்துகொள் என்னழகே
உனை நினையாமலும் நானில்லை....

வன்னித் தமிழ் மறவன்
கிளிநொச்சி

# குமுறல்



ஒரு பிடிச்சோறு
பத்தியமாய்ச் சாப்பிட்டு
பல நாட்கள் ஆகிற்று

பெத்த மகன்
என் பெருமையைப் புகழ்பவன்
மருமகள் கதை கேட்டு
மகுடிக்கு மயங்கியவன்
பாம்பாக மாறிற்றான்!

போன மாசம்
கோதரி பிடிச்ச கொரோனா
ஏன் அருமை மனைவியின்
உயிரை பறித்துவிட்டது


அவள் போனத்துக்குப் பிறகு
ஆற்றில் திளைத்த நான்
நீரில்லாத நிலத்தில் காய்கிறேன்

என் ஆண்டவனே...
என்னைக் காப்பாற்றி வாழ வைத்திடு
ஊர் தழைத்து உயரட்டும்

பாண்டிருப்பு - அகரம் செ.துஜியந்தன்

# எரிமலைக்குள் புதையுண்ட புகழ்பெற்ற பொம்பெயி நகரம்





**பொ**ம்பெயி மாநகரமானது இன்றைய இத்தாலி நாட்டின் நேபிள்ஸ் நகரத்திலிருந்து, தென்கிழக்குப் பகுதியில் சுமார் 23 கிலோமீற்றர் தொலைவில் அமைந்த பண்டைய நகரமாகும். இத்தாலியின் உரோம் நகரான பொம்பெயி, கி.பி. 1979 ஆம் ஆண்டு வெடிப்புக்குள்ளான விசுவியஸ் எரிமலையால் முற்றிலும் புதையுண்டு அழிந்தது. இந்த எரிமலை வெடிப்பின்போது சாம்பலும் வாயுக்களும் கற்களும் பாரிய புகை மண்டலமாக 33 கி.மீ. தூரத்திற்கு பரவியிருந்தன.

வெசூவியஸ் எரிமலை வெடிப்பின் காரணமாக வெளியான எரிமலைச் சாம்பல் மற்றும் இறுகிய தீக்குழம்புகளினுள் அகப்பட்டு பொம்பெயி நகரம் 4 முதல் 6 மீற்றர்வரை புதையுண்டு போனது.

வெசூவியஸ் எரிமலை வெடிப்பின்போது பொம்பெயி நகரம் மட்டுமன்றி, ஹெர்க்குலேனியம் (Herculaneum), ஸ்ட்டேபியீ (Stabiae) முதலிய புகழ்பெற்ற நகரங்களும் புதையுண்டு அழிந்தன.

18ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் மூலமாகவே இந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டது. அரைவாசிக்கும் மேற்பட்ட கட்டடங்களும் பொது இடங்களும் குறித்த அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டன. ஹிரோஷிமா – நாகசாகி குண்டுவீச்சின் போது ஏற்பட்ட வெப்பத்தைவிட பல்லாயிரக்கணக்கான மடங்கு அதிகமான வெப்பம் குறித்த வெடிப்பின்போது நிலவியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் நடந்த ஆய்வுகள் உரோமப் பேரரசு மிக உயர்வான நிலையிலிருந்த காலப்பகுதியில் மக்களின் வாழ்க்கை, பண்பாடுகள் எவ்வாறிருந்தன என்பது தொடர்பில் மிகக் கூடிய தகவல்களை எமக்கு அளித்துள்ளன. யுனெஸ்கோ உலக பாரம்பரியக் களமான இது இப்போது ஆண்டுதோறும் கிட்டத்தட்ட இரண்டரை மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஓர் இத்தாலிய சுற்றுலாத் தலமாகக் காணப்படுகிறது.


2020ஆம் ஆண்டு டிசம்பர், பொம்பெயி நகரத்தை அகழ்வாய்வு செய்தபோது, ஃப்ரெஸ்கோஸ் என்றழைக்கப்படும், ஈரமான சுண்ணாம்புக்கல் மீது வரையப்படும் ஒரு வகையான ஓவியங்கள் மற்றும் சுடுமண் பாத்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் இந்நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியத்தில் காணப்படும் படங்கள் மூலம் இந்நகரத்தின் துரித உணவகத்தில் வழங்கப்பட்ட உணவுகளாக பன்றி இறைச்சி, மீன், நத்தை, மாட்டிறைச்சி போன்ற இறைச்சிகள் பயன்படுத்தியதற்கான தடயங்கள் இந்தப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பாத்திரங்களில் காணப்படுகின்றன.

2020 நவம்பர் மாத ஆய்வில் பொம்பெயி தொல்பொருள் ஆய்வில் எரிமலைச் சாம்பலில் கிடைத்த ரோமப் பேரரசின் ஆண்டான் - அடிமை உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எரிமலைச் சாம்பலில் புதைந்து கிடக்கும் பொம்பெயி நகரத்தின் மூன்றில் ஒரு பகுதி, இன்னும் ஆராய்ச்சி செய்யப்படாமல் இருக்கிறது.

விசுவியஸ் எரிமலை வெடிப்பின்போது ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதில் உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.




# ஐரோப்பியர்களின் கல்லடுக்கும் போட்டி



**சி**றிய வயதில் பழைய ரின்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி, கோபுரம் அமைத்து விளையாடியதும், அதைக் குறிவைத்து பந்தால் எறிந்து, யார் அதிகமானவற்றை விழுத்துகிறார்கள் என்று போட்டி போட்டுக்கொண்டதும் ஞாபகத்தில் இருக்கின்றதா? அந்தச் சிறுவயது விளையாட்டை இப்பொழுது பெரிய அளவில் நடத்தி வருகிறார்கள். ஐரோப்பிய நாடுகள் கல்லை அடுக்கும் போட்டியை நடத்திவருகின்றன.

### நெய்ல் அன்ட்ரிவ்ஸ் (Neil Andrews) 37 கற்கள் (2021)

2018 இல் இடம்பெற்ற போட்டி ஏப்ரல் 22 அன்று இடம்பெற்றிருக்கின்றது. இது இரு நாட்கள் தொடர்ந்த போட்டி. இதில் 30இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றியிருக்கின்றார்கள். அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி உட்பட பிரிட்டனின் பல பாகங்களிலிருந்தும் போட்டியாளர்கள் பங்கேற்றுள்ளார்கள். ஸ்கொட்லாந்தின் டன்பார் (Dunbar) என்னும் இடத்திலேயே இந்தப் போட்டி நடைபெற்றிருக்கின்றது. இது தலைநகரான எடின்பரோவுக்கு அண்மையான ஓர் இடமாகும். சிறிய கற்பாறைகள், கற்கள் போன்றவற்றை கலை நுணுக்கத்தோடு அடுக்குவதுதான் இந்தப் போட்டி. பாறைகளைப் புரட்டுவதால் சரித்திரம் அழிக்கப்படுகிறது என்று சில குற்றச்சாட்டுகளும் எழாமல் இல்லை.

என்றாலும் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போட்டி, இரண்டாவது தடவையாக இந்த ஆண்டும் வெற்றிகரமாக நடந்தேறி இருக்கின்றது. இந்த ஆண்டும் ஸ்பெயின் கலைஞர் ஒருவரே வெற்றிவாகை சூடியுள்ளார். பெட்ரோ டுறான் என்ற பெயர்கொண்ட இவர், கடந்த ஆண்டும் முதலிடத்தைப் பிடித்திருந்தார். அடுத்த ஆண்டு அமெரிக்காவின் ரெக்ஸாஸ் மாநிலத்தில் இடம்பெறவுள்ள இன்னொரு உலகளாவிய போட்டியில் இவர் கலந்துகொள்ள நிதியுதவி அளிக்க இருக்கிறார்கள்.


### 40 கற்களை அடுக்கி சாதனை

2019 இல் மீண்டும் அதே இடத்தில் இடம்பெற்ற போட்டிகளில் எஸ்.பி.ரன்ஸா (Ranza) என்ற பிரான்ஸ் நாட்டவரே வெற்றிவாகை சூடியுள்ளார். 30 நிமிடங்களில் அதிக கற்களை அடுக்குபவர் யார் என்ற போட்டியில், இவர் 40 கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி, சாதனையாளராகி இருக்கிறார்.

2021இல் 30 நிமிடங்களில் 37 கற்களை அடுக்கியவர், சாம்பியனாகி உள்ளார்.

### கலை வண்ணம் காணும் கற்கள்

போட்டி நடைபெறும் இரு நாட்களிலும், வெவ்வேறு வகையான 4 போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. 30 நிமிடங்களில் மிக அதிகமான கற்களை அடுக்குவது யார் என்பது ஒரு போட்டி. கலையழகு மிக்கது எது







என்றறியும் இன்னொரு போட்டி, ஜூனியர் சம்பியன்ஷிப், பொதுவான கல்லடுக்கும் சம்பியன் தெரிவுப் போட்டி - இந்த நான்குமே அந்தப் போட்டிகள்!

# உலக சொக்லேட் தினம்

**ஜூ**லை 7 அன்றுதான் சர்வதேச சொக்லேட் தினம். மாயன் இன மக்கள் காலத்திலேயே சொக்லேட்டை கண்டுபிடித்து விட்டார்கள் என்று கூறப்பட்டாலும், 1550 ஜூலை 7 அன்றுதான் ஐரோப்பியர்கள் உலக மக்களுக்கு சொக்லேட்டை அறிமுகப்படுத்தியதாக குறிப்புகள் உள்ளன.

அதனால் இந்தத் தினத்தை சொக்லேட் தினமாக வருடந்தோறும் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். கொக்கோ விதையிலிருந்து உருவாகும் சொக்லேட்டை ஆரம்பகாலத்தில் குடிக்கிற பானமாக தயாரித்து கூழாக்கி குடித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் ராஜாக்களின் விருந்துகளில் முக்கிய உணவாக இருந்திருக்கிறது. சொக்லேட் விதைகள் அவ்வளவு வாசனையாக இருந்தாலும் தனியாக அதைச் சாப்பிட முடியாத காரணத்தினால் தேன், பால், பழம் போன்றவற்றில் சேர்த்துப் பிசைந்து முதலில் சாப்பிட்டுள்ளார்கள்.

இதுவே சொக்லேட்டின் முதல் வடிவம்.




**போலி உறவுகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*ரவிபிரசாத் - கொழும்பு 12*

தேர் என்றாலும் தேவைகள் முடிந்தபின் தெருவில்தான் நிற்கவேண்டும்

**சளித் தொல்லையிலிருந்து விடுபட என்ன செய்யலாம்?**


*நிரோஷன் வசந்தகுமாரி - வட்டவளை*



உலர் திராட்சையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நெஞ்சில், சளி இருப்பவர்களுக்கு நல்ல நிவாரணம் கிடைக்கும். உடலிலுள்ள தேவையற்ற கொழுப்பையும் இரத்த சோகையையும் குணப்படுத்தும்.

**துறைமுக நகர் பற்றி அறியத்தருவீர்களா...?**

*ஹரேந்திர விஜேகுமார் - களுவாஞ்சிக்குடி*



துறைமுக நகரம் (Port City) என அழைக்கப்படும் கொழும்பு சர்வதேச நிதி நகரம் (Colombo International Financial City, CIFC) என்பது இலங்கையின் தலைநகர் கொழும்பில் அமைந்துள்ள ஒரு சிறப்புப் பொருளாதார வலயமும், சர்வதேச நிதி மையமுமாகும். இக்கரையோர நகரம் காலிமுகத்திடலுக்கு அண்மையாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதற்கான நில மீட்புப் பணிகள் 2018 ஜனவரியில் நிறைவடைந்தன. முழுத் திட்டத்திற்குமான செலவு 15 பில்லியன் அமெரிக்க டொலராக 2017ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டம் சீனாவின் பட்டுப்பாதை ஒன்று என்ற முயற்சியின் ஒரு பகுதியாகும். இந்நகரம் கொழும்பு துறைமுக விரிவாக்க செயற்றிட்டத்தின் கட்டுமான வளங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்.

இலங்கை நாடாளுமன்றம் கொழும்பு துறைமுக நகர் ஆணைக்குழு நிறுவுவதற்கான சட்டமூலத்தை 2021 மே 20 அன்று 91 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றியது.

**மனைவியை தலையில் தூக்கிவைத்து கொண்டாடு பவர்களைப் பற்றி குறும்பன் நினைப்பது..?**

*ம.நிசாந்தன் - கொச்சிக்கடை*

மனைவியை மதித்து நடந்தால் நல்லது, அதற்காக அவர்களை தலையில் தூக்கிவைத்து கொண்டாடாதே.

வெளிச்சம் தருகின்ற விளக்குதான் என்றாலும் கூரையில் வைத்தால் வீட்டைச் சாம்பலாக்கிவிடும்

**மூன்று தலைநகரங்களைக்கொண்ட நாடு எது?**

*கனகராஜா தினேஸ் - முல்லைத்தீவு*

தென்னாபிரிக்கா

**உலகின் இரண்டாவது பெரிய சிகரம் என்ன, அதன் உயரம் எவ்வளவு?**

*பா. விந்தியா - பரகடுவை*

மவுண்ட் காட்வின் ஆஸ்வின் - 8,611 மீற்றர்கள்

**கடன் வாங்கி வீடு கட்டாதே!**



★ 30 இலட்சம் கையில் இருந்தால் 10 இலட்சத்தில் வீடு கட்டு.

★ 10 இலட்சம் கையில் இருந்தால் 5 இலட்சத்தில் வீடு கட்டு

★ 5 இலட்சம் கையில் இருந்தால் 5000 ரூபா வாடகை வீட்டில் வாழு.

★ 10 இலட்சத்தை கையில் வைத்துக்கொண்டு 20 இலட்சத்தில் வீடு கட்டுவதென்பது சொந்த பணத்தில் தனக்கே சூனியம் வைத்துக்கொள்வதற்கு சமம்.

★ கடன் வாங்கி வீடு கட்டாதே.

★ வங்கியில் லோன் வாங்கி வீடு கட்டாதே.

★ 20 இலட்சத்தில் பணக்காரன் வீடு கட்டியிருப்பான், அவரிடம் 5000 ரூபா வாடகையில் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழலாம்.

★ மனைவியின் பேச்சைக் கேட்டு தயவுசெய்து கடன் வாங்கி சொந்த வீடு மட்டும் கட்டாதே.

**உங்களுடைய கேள்விகளை குறும்பனிடம் கேளுங்கள்**
**whatsapp - 076 2728213**
**e-mail- kurumpan@yahoo.com**



# தமிழன் தர்பார்

தொகுப்பு:
மணி ஸ்ரீகாந்தன்

இது எங்க ஏரியா

## புலிக்குப் பிறந்தது



அரசியல்வாதியின் மகன் ஒருவன் தான் படிக்கும் பாடசாலைக்கு நிதி திரட்டுவதற்காகச் செல்வர் ஒருவரை அணுகினான்.

அவர் மேசையின் மேல் பத்து ரூபாத்தாள் ஒன்றையும் ஒரு ரூபா நாணயம் ஒன்றையும் வைத்தார். “இவற்றுள் ஏதேனும் ஒன்றை மட்டும் நீ எடுத்துச் செல்” என்றார்.

அவன், “எங்கள் பாடசாலைக்கு இந்த ஒரு ரூபா போதும்” என்று சொல்லிவிட்டு அந்த நாணயத்தை எடுத்துக்கொண்டான்.

பிறகு அவன், “இந்த நாணயத்தை எப்படி எடுத்துச் செல்வேன். இந்தத் தாளில் மடித்து எடுத்துச்செல்கிறேன்” என்று சொல்லிவிட்டுப் பத்து ரூபாத் தாளையும் எடுத்துக்கொண்டான்.

## எத்தனை இலை!



சொல்வளம் நிரம்பிய தமிழில் “இலை” என்பதைக் குறிக்க பல சொற்கள் இருக்கின்றன.

ஆலமரம், அரசமரம், வாழைமரம் முதலியவற்றின் இலையை “இலை” என்கிறோம்.

அறுகு, கோரை முதலிய இலைகளின் பெயர் “புல்”.

நெல், கேழ்வரகு போன்றவற்றின் இலை “தாள்” என்று சொல்லப்படுகிறது.

மலைப்பகுதிகளில் விளைகின்ற இலைகளைத் “தழை” என்று குறிப்பிடுகிறோம்.

தாழை போன்றவற்றின் இலை “மடல்”.

கரும்பு முதலியவற்றின் இலை “தோகை”.

பனை, தென்னை மரங்களின் இலை “ஓலை”.

அகத்தி, பசளை போன்றவற்றின் இலை, “கீரை” என்று பெயர் பெறும்.

## பேஸ்புக்குன்னா சும்மாவா!



எப்ப பாரு பேஸ்புக்குலேயே இருக்கியே
உனக்கு வேற வேலை வெட்டியே
இல்லையா???!!!
(ரகுவரன் குரலில் படிக்கவும்)

தம்பி புள்ளி விபரம் தெரியாம
பேசக்கூடாது...!!!

ஒரே ஒரு நாள் நீ இங்கன வந்து பாரு...!!!

ஒரே ஒரு நாள்...

பேஸ்புக்குல நீ இருந்து பாரு...!!!

அப்ப புரியும் எங்க வலி என்னன்னு...!!!

எவ்வளவு போஸ்ட்டு (அதுல பாதிக்கு மேல
மொக்கை தான்)

எவ்வளவு டென்ஷன்

எத்தனை லைக்

எத்தனை கமெண்ட், நக்கலு

எத்தனை வம்பு தும்பு

எத்தனை சண்டை

எத்தனை பஞ்சாயத்து

ஒரே குரூப்புக்குள்ளாற எத்தனை
குரூப்பிஸம்

எத்தனை போடலா மே.. ஆடலா மே

எத்தனை பொறந்த நாளு, எத்தனை நினைவு
நாளு

எத்தனை பாட்டு எம்பூட்டு தகவலு

என்னமோ.... லேசா சொல்லிட்ட

இதெல்லாம் அனுபவிச்சு பார்த்தா தான்யா
தெரியும்...

கரெக்டா பிறந்தநாள் வாழ்த்து சொல்லனும்...

திருமணநாள் வாழ்த்து சொல்லனும்...
அதுவும் நைட்டு பனிரெண்டு மணிக்கு
சொல்லனும்...
பெண்கள் தினம்...

பேய்கள் தினம்...

பெரியம்மா தினம்னு...

வரிசை... வரிசையா வரும்...

அதுக்கு எல்லாம் ஞாபகமா வாழ்த்து
சொல்லனும்...

இது இல்லாம...

புரஃபைல் பிக்சரை சூழ்நிலைக்கு தகுந்தாப்ல
அடிக்கடி மாத்தி தொலைக்கணும்..

நடு வுல
எத்தனை
குட்மோர்னிங்

எத்தனை
குட்ஆப்டனூன்
எத்தனை
குட் நைட்

அது மட்டுமா...
சாப்ட்டாச்சா...

எங்க வூட்ல தோசை...
உங்க வூட்ல பூரி...

சின்னம்மாவுக்கு இப்ப தேவலையா..
பாட்டு சூப்பர்ர்ர்...
கவிதை சூப்பர்னு..
இப்டில்லாம் அள்ள்ளி விடணும்...

அவங்க
பையன் பொண்ணு .. ஏதாவது திறமையை
காட்டினா
வாவ்!
நைஸ்!
சூப்பர்!
எக்ஸ்சலண்டுன்னு
வாய் கூசாம பொய் சொல்லனும்...

பெண் மக்களுக்கு சோப் போடனும்...

ஆத்திர அவசரத்துக்கு நமக்கு சப்போர்ட்
பண்றதுக்கு ரெண்டு ஜால்ராஸ் செட் அப்
பண்ணனும்...

நெட் பூரா நாயா நடந்து ஷேர் பண்ண
மீம்ஸ்களை பொறுக்கணும்..

மச்சி, அக்கா, தங்கச்சி, அண்ணன், தம்பி,
தங்கச்சி, தோழா, தோழின்னு உறவுமுறை
வைத்து கமெண்ட் போடனும்...இல்லைன்னா
....வம்பிழுக்கணும்...
முக்கியமா அப்ப்ப வீட்டில் தயார் பண்ணாத
நெட் உணவு பதார்த்த படங்களை
போடனும்...
பசியை தூண்டனும்.

எல்லாத்துக்கும் மேல ... எத்தனை நல்ல
போஸ்ட் போட்டாலும்.. பாராட்டவே தெரியாத
பரதேசிகளை கடந்து போகணும்...

எதையும் வந்து பார்த்தா தான்யா தெரியும்
எங்க கஷ்டம் என்னன்னு...

தீக்குள்ள விரலை விட்டால் சுடும்னு
சொல்றேன் உனக்கு புரியல...
பேஸ்புக்குல பல இதயங்கள் மகிழ்கின்றன

பேஸ்புக்குலயே இருக்கிறவனை மட்டமா எடை
போடாதே!

## என்னம்மா இப்படி பண்றீங்களேமா



மனைவி : உங்களைத்தானே. இந்த மாங்காயை கொஞ்சம் தோல் சீவித் தாங்களேன்.

கணவன் : தோல் சீவிட்டேன்.

மனைவி : கொஞ்சம் துண்டுத் துண்டா நறுக்கித் தாங்களேன்.

கணவன் : நறுக்கியாச்சு.

மனைவி : கொஞ்சம் மிக்ஸியிலே போட்டு அரைச்சுக் கொடுங்களேன்.

கணவன் : அரைத்தாயிற்று.

மனைவி : இப்படி வந்து வாணலியில் போட்டு ஒரு வதக்கு வதக்கிடுங்களேன்.


கணவன் : வதக்கிட்டேன்.

மனைவி : ரெண்டு கடுகைத் தாளியுங்களேன்.

கணவன் : தாளிச்சாச்சு.

மனைவி : மாங்காய்த் தொக்கு கிளறினேன். எப்படி இருக்குனு பார்த்துச் சொல்லுங்களேன்.

## குறும்பா ஆசாமி!




“அழகான உடல்வாகு
மின்னும்
அதைக்கூட
மண்தானே தின்னும்
பழகிடுவோம்..
அனுபவிப்போம்

பைங்கிளியே”
என்றவனை,
முறையோடு
வாவென்றாள்..
சென்றவன்தான்
வரவில்லை இன்னும்!



பாலமுனை பாறூக்




“நாய்க்கு கோபம் வந்தால் என்ன செய்யும் ?
“நாய்கிட்டதான் கேக்கணும் “
“அதாண்டா கேட்கிறேன் பதில் சொல்லு!!”



“நேற்று ஒரு கல்யாணத்துக்கு போயிருந்தேன், ஜோடின்னா அப்படி ஒரு ஜோடி, என் லைப்லே பார்த்ததேயில்லை. அப்படி ஒரு அழகு.
“அப்புறம்”
அப்புறம் என்ன........
காலிலே மாட்டிட்டு வந்திட்டேன் !



எதுக்கு ஓட்டைக் குடையை எடுத்துட்டு வந்திருக்கீங்க? இல்லேன்னா மழை நின்னுடுச்சுன்னா எப்படித் தெரியும்?



ஒரு ஆண் அறுவது வயசுல
தான் எல்லா கொடுமையும்
மறந்துட்டு சந்தோசமா
இருப்பான்..




THIS IS WHATSAPP



சமூக வலைத்தளங்களில் நீங்கள் படைக்கும், பகிர்ந்த, படித்துச் சுவைத்த சுவாரஸ்யமான விடயங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். அத்தோடு சிரிப்புத் துணுக்குகள், வித்தியாசமான செல்பிகள், புகைப்படங்கள், நச்சுன்னு நாலு வரியில் எழுதப்படும் ஹைக்கூ உள்ளிட்டவற்றையும் எம்மோடு பகிர்ந்துகொண்டால் சிறப்பானதை தெரிவுசெய்து “தமிழன் தர்பார்” பக்கத்தில் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.

தொலைபேசி இல - 0740107194
அனுப்பவேண்டிய முகவரி : இல.91,
விஜேராம மாவத்தை,
கொழும்பு-07 மின்னஞ்சல் முகவரி:
thamilandharbar@yahoo.com



காரைக்கவி



# சீத்துவக்கேடு 144

உனக்கு ஒரு விசயம் தெரியுமே. விளக்கு எரிக்கிறதுக்கு எங்கட ஆக்கள் விதம் விதமான திரியளைப் பாவிச்சவை எண்ட அப்பு, ஒவ்வொரு விதமான திரியையும் கொளுத்த ஒவ்வொருவிதமான நன்மையள் கிடைக்கும் எண்டு பழைய புத்தகங்களிலை கிடக்கு எண்டார்.

**பருத்தி பஞ்சு திரி**யில எரிச்சால் வீட்டில் மங்களம் நிலைக்கும்,

**தாமரைத்தண்டு திரி**யில எரிச்சால் செல்வம் சேரும், முன் வினை பாவம் நீங்கும்,

**வாழைநாரிலை** எரிச்சால் தெய்வ குற்றம், குடும்ப சாபம் நீங்கும்,

**புதுமஞ்சள் நிறத் துணி**யில திரி செய்து எரிச்சால் திருமண தடை நீங்கும் ,

**புது வெள்ளைத் துணி**யில திரி செய்து எரிச்சால் சுகவாழ்வு, குடும்ப நலம் கிடைக்கும். அதமாதிரி

**வெள்ளெருக்குத் திரி**யில எரிச்சால் தன லாபம் கிடைக்கும் எண்டு புத்தகங்களிலை கிடக்கு எண்டு அப்பு சொன்னார்.

உதமாதிரி உந்த விளக்குகளும் ஒரு முகத்தில இருந்து ஏழு முகம் வரைக்கும் இருக்கும் எண்ட ஆச்சி, நாங்கள் ஏத்திற முகங்களின்ரை எண்ணிக்கைக்கு ஏற்ற மாதிரி வேற வேற நன்மைகள் கிடைக்கும் எண்டு எங்கட பெரிய ஆக்கள் சொல்லி இருக்கினம் எண்டா.

**ஒரு முக விளக்கை** ஏற்றினால் நோய்கள் நீங்கும்.

**இரு முக விளக்கை** ஏற்றினால் குடும்ப ஒற்றுமை ஏற்படும்,

**மூன்று முக விளக்கை** ஏற்றினால் பிள்ளைகள் மேன்மை பெறுவர்,

**நான்கு முக விளக்கை** ஏற்றினால் சொத்து சேரும் எண்டா.

அதமாதிரி

**ஐந்து முக விளக்கை** ஏற்றினால் செல்வ நிலை உயரும்,

**ஆறு முக விளக்கை** ஏற்றினால் சத்ருக்களை வெல்லலாம். நோய்கள் நீங்கும்,

**ஏழு முக விளக்கை** ஏற்றினால் திருமணத்தடை நீங்கும் எண்டு அவை சொல்லி இருக்கினம் எண்டா ஆச்சி.

உப்பிடி அப்புவும் ஆச்சியும் சொல்ல, நான் சும்மா இருக்கேலாமல், அது சரி நீங்கள் சொல்லுற மாதிரி உந்த விதம் விதமான எண்ணை திரி முகங்கள் எல்லாம் பாவிச்சு ஆக்கள் கொளுத்திச்சினம் எண்டால் நீங்கள் சொல்லுற நன்மையள் எல்லாம் அவைக்கு கிடைக்கும் எண்டதுக்கு என்ன ஆதாரம் இருக்கெண்டு கேட்டன்.

உடன அப்புவுக்கு கடுங்கோவம் வந்திட்டுது. நீங்கள் கொஞ்சப்பேர் கொஞ்சம் படிச்சுப் போட்டியள் எண்டதுக்காக எல்லாத்துக்கும் ஆதாரமே கேக்கிறது.

விட்டால் நான் உன்ரை கொப்பு உவள் உன்ரை கோச்சி எண்டதுக்கெல்லாம் என்ன ஆதாரம் எண்டு கேப்பாய் போல கிடக்கு எண்டார்.

தாய் தேப்பனுக்கு ஆதாரம் கேக்கிற மாதிரித்தான் சந்ததி சந்ததியா நாங்கள் பின்பற்றிக்கொண்டு வாற நம்பிக்கைகளுக்கும் ஆதாரம் கேக்கிறது எண்டார்.

அதால எங்கட பழக்க வழக்கங்கள் பண்பாடுகள் எல்லாத்துக்கும் ஆதாரம் கேட்டுக்கொண்டு நிக்கேலாது கண்டியோ.

அதெல்லாம் ஒரு நம்பிக்கையின்ரை அடிப்படையில எங்கட பழைய ஆக்கள் அவையின்ரை அனுபவத்தின்ரை அடிப்படையில உதுகளை எங்களுக்கு சொல்லிப் போட்டுப் போனவை.

உதுக்கு மேலயும் உனக்கு ஆதாரம் வேணும் எண்டால் நான் ஒண்டு சொல்லுவன் கேள் எண்ட அப்பு, எங்கட பழைய ஆக்கள் உதுகளை பின்பற்றி வந்ததால நோய் நொடியில்லாத சந்தோசமான எல்லா சம்பத்துகளும் உள்ள சண்டை சச்சரவில்லாத ஒரு நிம்மதியான வாழ்க்கையை வாழ்ந்திச்சினம் எண்டார்.

எப்ப எங்கட ஆக்கள் எங்கட பழைய பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கையள் எல்லாத்தையும் விட்டுப் போட்டு எப்பிடி வாழவேணுமெண்டு வாழாமல் எப்பிடியும் வாழலாம் எண்டு வாழ வெளிக்கிட்டிச்சினமோ அண்டையில இருந்து வீட்டுக்கு வீடு எவ்வளவு பிரச்சினைகள்.

எத்தினை குடும்பங்கள், எத்தனை பேர் நிம்மதி இல்லாமல் சந்தோஷம் இல்லாமல் நோய் நொடியும் அதுகும் இதுகுமா குறை குற்றங்களோட அரை குறையான வாழ்க்கை வாழுகினம் தெரியுமே எண்டார்.

(தொடரும்)

# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

### மேஷ ராசி அன்பர்களே!

பணவரவுக்கு குறைவிருக்காது. ஆனால், வாரத் தொடக்கத்தில் மனதில் தேவையில்லாமல் தோன்றும் குழப்பங்களால் குடும்ப நிர்வாகத்தில் கவனம் செலுத்தமுடியாது. மூத்த சகோதர வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், அனுசரித்துச் செல்லவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அவருடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கும். பழைய கடன்கள் விடயத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிடவும் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். சக வியாபாரிகள் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சற்று பொறுப்புகள் கூடுவதால் மனதில் சோர்வு உண்டாகும். வாரப் பிற்பகுதியில் சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். பிள்ளைகள் மூலம் சுபச்செய்தி ஒன்று கிடைக்கும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

பணவரவு இருந்தாலும் எதிர்பாராத செலவுகளால் சேமிக்க முடியாத நிலை ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக வாக்குவாதம் ஏற்படக்கூடும். பொறுமையுடன் இருப்பது மிகவும் நல்லது. குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் கடினமாக உழைத்தால் மட்டுமே விற்பனையை அதிகரிக்க முடியும். பணியாளர்களால் வீண்செலவுகள் ஏற்படும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். புகுந்தவீட்டு உறவினர்களுடன் இணக்கமான சூழ்நிலையே காணப்படும். தோழிகள் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

### மிதுன ராசி அன்பர்களே!

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. இளைய சகோதரர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். பிறந்தவீட்டு உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

### கடக ராசி அன்பர்களே!

பணவரவைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை என்றாலும், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படுகிறது. அநாவசிய செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு தந்தைவழியில் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம். அவர்களால் அனுகூலமும் உண்டாகும். விற்பனையை அதிகரிப்பதில் பணியாளர்கள் உற்சாகத்துடன் ஈடுபடுவார்கள். குடும்பநிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு பொறுப்புகள் கூடும். கணவரின் அன்பு ஆறுதலாக இருக்கும். சகோதரர்களிடம் கேட்ட பண உதவி சற்று தாமதமாகக் கிடைக்கும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் போதுமான பணவரவு இருப்பதால் எளிதாகச் சமாளித்துவிடுவீர்கள். நீண்டநாளாக சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். நல்ல இடத்தில் வரன் அமைவதற்கு வாய்ப்புள்ளது. சிலருக்கு வீட்டுக்கு அருகிலுள்ள ஆலயத்தில் சிறப்பு வழிபாடு செய்யும் வாய்ப்பு ஏற்படும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும். வேலை செய்யும் பெண்களுக்கு வீட்டுச் சூழ்நிலையின் காரணமாக பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும்.

### கன்னி ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக் கிடையே ஏற்பட்டிருந்த கசப்பு உணர்வுகள் நீங்கும். அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு மனதில் இலேசான சோர்வை உண்டாக்கும். வழக்குகளில் உங்களுக்குச் சாதகமான போக்கு ஏற்படும். பிள்ளைகள் மூலம் பணவரவு உண்டு. சிலருக்கு தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும். பொறுமையுடன் இருப்பது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக கூடுதலாக உழைக்கவும் வேண்டியிருக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிக் கடனுதவி கிடைக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். வீட்டில் சிறிய அளவில் சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்புள்ளது.

### துலா ராசி அன்பர்களே!

வருமானம் திருப்தி தரும். ஓரளவு சேமிக்கவும் முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். இளைய சகோதரர்களால் செலவுகள் ஏற்படும் என்றாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். சிலருக்கு குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு உள்ளது. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பங்குதாரர்களால் அனுகூலம் உண்டாகும். வியாபார அபிவிருத்திக்குத் தேவையான கடனுதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். கணவர்வழி உறவினர்களிடையே மதிப்பு மரியாதை அதிகரிக்கும்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

பணவரவு தேவையான அளவுக்கு இருந்தாலும், திடீர் செலவுகளால் கடன் வாங்கவேண்டி வரும். கணவன் - மனைவிக்கிடையே வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பெண் அல்லது பிள்ளையின் திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாக முடியும். வியாபார அபிவிருத்திக்காகக் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். சக வியாபாரிகளின் யோசனைகளைப் பொருட்படுத்த வேண்டாம். பணியாளர்கள் முரண்டு பிடித்தாலும் விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. விற்பனை வழக்கம்போலவே இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். புகுந்தவீட்டு உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். கணவரை அனுசரித்துச் செல்வது நல்லது.

### தனுசு ராசி அன்பர்களே!

வார முற்பகுதியில் நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்துசேரும். பேச்சினால் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது மிகவும் கவனமாக இருப்பது அவசியம். செலவுகள் அதிகரித்தாலும்கூட அதற்கேற்ப பணவரவு இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாரப் பிற்பகுதியில் கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். புதிதாக வியாபாரம் தொடங்க நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்க வேண்டி இருக்கும். வாரப் பிற்பகுதியில் கணவரிடம் எதிர்பார்த்த பணம் கிடைக்கும்.

### மகர ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவசரப்பட்டு யாருக்கும் எந்த வாக்குறுதியும் தரவேண்டாம். பொருளாதார நிலை சுமாராகத்தான் இருக்கும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையுடன் இருக்கவும். சகோதரர்களுடன் அனுசரித்துச் செல்லவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றங்களுக்காகச் செலவுசெய்யவேண்டி வரும். விற்பனை சுமாராகத்தான் இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை எதுவும் இருக்காது.

### கும்ப ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வருமானத்தைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். வழக்குகளில் நிதானம் தேவை. சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்ற நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படக்கூடும். புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த கசப்பு உணர்வுகள் நீங்கி உறவு சுமுகமாகும்.

### மீன ராசி அன்பர்களே!

குடும்பத்தில் அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் சரியாகிவிடும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு இருக்காது. பழைய கடன்கள் தீருவதற்கு வாய்ப்புண்டு. நீண்டநாட்களாக சந்திக்காமல் இருந்த உறவினர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு உண்டாகும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், தகுந்தவர்களிடம் ஆலோசனை கேட்டு செய்யவும். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். செலவுகள் குறைவாக இருப்பதால் சிறிது சேமிக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

## தமிழன் தொடர்கதை

# யார் அது?

## அத்தியாயம் -01

**வன்னித் தமிழ் மறவன்**



**யார் அது? என்ற எனது தொடர்கதையை வாசிக்கும் வாசகர்கள் அனைவருக்கும் வணக்கங்கள்.**

**கதை நாயகர்களாக....**

**ராம்**

**தேவ்**

**ரமணா**

**சீனு**

**கயல்**

**ACP எடிஷ்**

**அடுத்ததடுத்த பாகங்களில் இணையும் சில கதாபாத்திரங்களும் இருக்கிறார்கள். தொடரில் பார்க்கலாம்.**

''யார் அது ஆரம்பிக்கிறது..?''

"ராம் வாடா... ராம் ஓடி வாடா."

"என்னடா சீனு நிம்மதியா சரக்கடிக்க விடமாட்டேங்குற."

"இப்போ என்ன நேரம் ஆகுது?"

"பத்து மணிதானேடா.

நானே உன்ன வீட்டுல ட்ராப் பண்ணிடுறேன். யோசிக்காதே."

"அது இல்லடா நான் சொல்ல வாரதே வேற."

"என்னடா... சொல்ல வந்ததை விழுங்காமல் சொல்லுடா."

"டேய்... இப்போ ஏதோ ஒரு உருவம் இந்தப் பக்கம் போனது போல் இருந்துதுடா.

அது கறுப்பா இருந்தது.

அது ஒரு ஆண் உருவம் போல் இருந்தது.''

''இதுதான் சொன்னேன். இன்னைக்கு பார்ட்டி காட்டுக்குள்ள வேணாம்.

பீச் போவலாம்னு. நீ கேட்டியா?

இப்போ வந்து அது தெரியுது,

இது தெரியுதுனு புலம்பிட்டு இருக்கிறது"

"இல்லடா உண்மையா ஏதோ ஒன்று போனதைப் பார்த்தேன்டா"

"டேய் லூசு, அது நம்ம ஆள் தேவ்தான்டா. அவசரத்துக்கு

காட்டுப் பக்கமா ஒதிங்கிட்டான்டா.

நீ நினைக்கிற போல அந்த கறுப்பு உருவம் வேற ஒன்றும் இல்ல.

அவன் போன போது நிலவு நிழலுக்கு

கறுப்பா உனக்கு தெரிஞ்சிருக்கு.

நம்பலன்னா அவனை கூப்பிட்டு பாரு.

அந்தப் புதருக்கு பின்னாடி சத்தம் கேட்கும்."

"தேவ்... மச்சி... தேவ் டேய்"

"என்னடா சீனு கொஞ்சம் சத்தம் போடாம இருடா... போகும் போது கூட ஒரு நிம்மதி இல்ல. இருடா வாறேன்."

"டேய் ரமணா சரக்க முடிச்சிடாதடா.

இரு நானும் வாரேன்."

"போத்தல் எல்லாம் காலி ஆகிட்டு.

தேவ் போத்தல் இருக்கு. அதை அடி மச்சி."

"ஓகேடா, அடிச்ச போதை எல்லாம் இறங்கிட்டுடா.

ஏதோ ஒரு உருவம் போனது போல இருந்துச்சு."

"போடா மாலைக் கண் குடிகாரா...

இங்க நம்மை விட எவனும் இருக்க முடியாது. எவனுக்கும் தைரியம்

கிடையவே கிடையாது"

என்று அடர்ந்த ஆளில்லாத

காட்டிற்குள் மதுபான போத்தல்களுடன் தேவின் தங்கை நிச்சயதார்த்தத்தை முன்னிட்டு பார்ட்டி ஒன்றை ஆயத்தப்படுத்தினார்கள் நான்கு

நண்பர்களாகிய சீனு, ரமணா, ராம், தேவ் ஆகிய நால்வரும். ஊரில் இந்த நால்வரையும் விட நல்ல நண்பர்கள் இல்லை. ஊரில் எந்த பிரச்சினை என்றாலும் முன் நின்று தீர்த்து வைப்பார்கள்.

இப்படி ஏதும் விசேட நாட்களில்

ஊரை விட்டு வெளியே வந்து

பார்ட்டி வைத்து இளமைக்காலத்தை அனுபவித்துப் போவார்கள். அப்படி ஓர் நாளே இது.

எல்லோரையும் மதிக்கும் குணம் கொண்ட இவர்கள் உதவி செய்வதில் வல்லவர்களாக இருந்தார்கள். யாரும் அவர்களைத் தவறாகப் பேச மாட்டார்கள். ஏனெனில்,

அவர்கள் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பண்பு மிக்கவர்களாக இருந்தார்கள்.

இப்படியான அவர்களே இந்த இரவு வேளையில் நடுக்காட்டில் யாருக்கும் எந்தத் தொந்தரவுமின்றி கொஞ்சம் குடித்து போதையில் வீர வசனம் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

அப்போது திடீரென தேவ் சென்ற புதர் பின்னால் ஏதோ ஒரு பெரிய சத்தம் கேட்டது.

பயந்து போன மூவரும்

டோர்ச் லைட்டை எடுத்து அந்தப் புதர் பக்கம் அடித்தார்கள்.

புதர் சற்று ஆடிக்கொண்டிருந்தது.

ஆனால், அந்த நேரத்தில் காற்று

வீசவில்லை என்பதை அறிந்தார்கள்.

"டேய் தேவ், என்னடா சத்தம்..?

தேவ்...

ஏதும் பேசுடா...

விளையாடாத தேவ்...

டேய்..."

என்று ஏனைய மூவரும் தேவை அழைக்க எந்த மறு பதிலும் வரவில்லை.

ஏன் இவன் சத்தம் போடாமல் இருக்கிறான் என்று அந்த புதர் இருக்கும் இடத்திற்கு மூவரும் சென்றார்கள்.

அங்கே சென்று புதர் பின்னால் டோர்ச் லைட்டை

அடித்துப் பார்த்த போது தேவ் சுவாசிப்பதற்கு பெரும் சிரமப்பட்டு கால்களை அடித்தவாறு நிலத்தில் புரண்டு கிடந்தான்.

"என்னடா தேவ்? என்ன ஆச்சு?"

என்று புரண்டு கிடந்த அவனை

முன்பக்கமாக திருப்பிப் பார்த்த போது

அவன் உடல் முழுதும் இரத்த வெள்ளம்

ஓடிக்கொண்டிருந்தது.

அவனால் ஏதும் பேச முடியவில்லை.

மயக்க நிலைக்குப் போய்க்கொண்டு இருந்தான் தேவ்.

எங்கிருந்து இரத்தம் வெளியேறுகிறது என்று தேடியபோது கழுத்து குரல்வளையில் இருந்து இரத்தம் சீறிக் கொண்டிருந்தது.

என்ன நடந்தது என்றே தெரியாத நிலைமையில் தேவ் ஐ உடனே வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றார்கள்.

கொண்டு செல்லும் போது அவன் அசைவுகள் நின்று போவதை அவர்களால் உணர முடியவில்லை.

மிக வேகமாக காரை ஓட்டி வைத்தியசாலையை அடைந்து அங்கே

அவசர சிகிச்சைப் பிரிவில்

உடனடியாக சேர்த்து விட்டார்கள்.

எப்படி இது நடந்தது என்று

எதுவுமே புரியாமல் குழப்ப நிலையில் இருந்தார்கள் மூன்று பேரும்.

அப்போது சீனு

"டேய் நான் சொல்லும்போது யாரும் நம்பலையே...

ஏதோ ஒரு கறுப்பு உருவம் அந்த பக்கம் போனது என்று சொன்னதுக்கு

அது தேவ் நிழல் என்று சொன்னீங்களேடா எனக்கு ஏதோ

அந்த கறுப்பு நிழலில்தான் சந்தேகம் இருக்குடா."

"இப்போ அதைப்பற்றி ஏதும் பேசாதீங்கடா. முதல்ல தேவ் கண் முழிக்கட்டும். அவனுட்டயே என்ன நடந்தது

என்று கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்''

என்று ராம் கூறும் போதே

"அதற்கு வாய்ப்பில்லை ராம்"

என்று கூறிக்கொண்டே அவசரப்பிரிவு டொக்டர் அருகில் வந்தார்.

''சொரி ராம். தேவ் பிழைப்பதற்கு வாய்ப்பிருப்பது போல் தெரியவில்லை.

ரொம்ப மோசமான நிலைமையில் இருக்கிறான்.

அவனை ஹொஸ்பிடல் கொண்டும் வரும் வழியிலேயே அதிக இரத்தம் வெளியேறி விட்டது எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எல்லாம் இறைவன் கையில்தான் இருக்கிறது.

அதிக பிளட் போய்ட்டு எங்களாலும் கட்டுப்படுத்த முடியல. கழுத்து நரம்பு கட் பண்ணுப் பட்டு இருக்கு.

அவன் வேற குடிச்சு போதையில்

இருந்தபடியால்

அவனால் சரியா சுவாசிக்க முடியாமலேயே மயக்க நிலைக்கு போய்ட்டான்.

இனி ஏதும் எங்களால் முடியாது.

சொரி ராம்"

**(தொடரும்)**

---

## தமிழன் சிறுகதை

# வேரை மறந்த மரங்கள்

**- ஸாலிஹ் அஸீம்**



நீண்ட நாளைக்கு பிறகு நான் வேலை செய்த இந்த ஊருக்கு வந்திருந்தேன். எனது சொந்த ஊரிலிருந்து மாற்றலாகி 14 வருடங்கள் இந்த ஊரில் வேலைபார்த்து விட்டு திரும்பவும் எனது ஊருக்கு சென்று இரண்டு வருடங்கள் பணியாற்றிவிட்டு ஓய்வுபெற்று மூன்று வருடங்களும் ஓடிவிட்டன.

அப்போது என்னுடன் வேலைபார்த்த சிராஜ் என்பவன் என்னுடன் மிகவும் நெருக்கமாகப் பழகிய நண்பன். அவனுக்கு ஒரு ஆண், ஒரு பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள். மகனை நன்றாகப் படிக்க வைத்து வைத்தியராக்கினான். மகள் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் அவனுடைய மனைவி புற்றுநோய் காரணமாக திடீரென்று உயிரிழந்தார்.

அதற்குப்பின் ஆறு மாதங்களுக்கு பின் நானும் மாற்றலாகிப் போய்விட்டேன். பிறகு அவனுடன் எந்தவிதமான தொடர்புகளும் இருக்கவில்லை.

என்னுடைய கடைசி மகளுக்குத் திருமணம் நடக்கவிருப்பதால் அவனுடைய நினைவு வந்ததும் அவனையும் திருமணத்திற்கு அழைக்கவேண்டும் என்பதுடன், அவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில்தான் நான் மீண்டும் இங்கு வந்தேன்.

இங்கு வந்து பார்த்தால் எல்லாமும் தலைகீழாக அடையாளமின்றி மாறிப்போயிருந்தது. அதனால் அவனுடைய வீட்டைக் கண்டு பிடிப்பது மிகவும் சிரமமான காரியம் என்றே தோன்றிற்று.

இப்படியே நான் யோசித்துக் கொண்டு வரும்போது சிறிய தேநீர்க்கடையொன்று கண்ணில் பட்டது. உடனே

''இங்குபோய் கேட்டுப்பார்ப்போம்'' என்று மனதிற்குள் சொல்லியபடி உள்ளே நுழைந்த எனக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே என்னுடைய நண்பன் தேநீர் அருந்திக்கொண்டிருந்தான். தேடிப்போன தெய்வம் குறுக்கே வந்ததைப்போலிருந்தது எனக்கு.

அடையாளம் காண்பது கொஞ்சம் சிரமமாக இருந்தாலும் விரையில் என்னால் அவன் எனது நண்பன்தான் என அறிந்துகொள்ள முடிந்தது.

''மச்சான்... என்னைத் தெரியுதா..?" என்றேன். அவனுடைய தோளில் கையை வைத்தபடி.

''ஆமாம், தெரியுது மச்சான்...

எப்போ வந்தே..?

என்ன திடீரென்று இங்காலப் பக்கம் வந்திருக்கே..." என்றவனின் பேச்சில் ஆரவாரம் எதுவும் இருக்கவில்லை. முகம் மிகவும் வாடியே காணப்பட்டது.

''இப்பதான் வந்தேன்....

அதுவும் உன்னை சந்திக்கதான் வந்தேன்...." என்றதும்

''இன்னொரு தேநீர் தாருங்கள்" என்று சொல்லிவிட்டு எனது பக்கம் திரும்பினான். அப்போது

''எப்படி இருக்கிறே?" என்று நான் விசாரித்ததுதான் தாமதம். அவனுடைய கண்கள் கலங்கத் தொடங்கிவிட்டன.

''மகன் வைத்தியராகி வெளிநாட்டிற்கு சென்று அங்கேயே திருமணமும் செய்து கொண்டான். அது எனக்குப் பிறகுதான் தெரிந்தது.

என்னுடைய மகள் வர்த்தகம் படித்துவிட்டு வேறு ஊரில் வங்கியில் வேலைபார்க்கிறாள். என்னால் அதற்குமேல் படிக்கவைக்க முடியவில்லை.

அவள் அந்த வங்கியில் வேலை பார்க்கும் ஒருவரை காதலித்து திருமணமும் செய்து கொண்டாள். அதுவும் அவள் அழைப்பிதழ் கொண்டு வந்தபோதுதான் எனக்குத் தெரியும். பிறகு மூன்றாவது மனுசன் மாதிரி அந்தத் திருமணத்திற்குச் சென்று வந்தேன்.

பிறகு உறவினர்கள் மகளிடம்

''அப்பா தனிமையில்தானே இருக்கிறார் உங்களுடன் கொண்டு சென்று பார்த்துக் கொள்ளுங்களேன்" என்று சொன்னதற்கு

''அவரு நானாவைத்தான் ஆம்பிளப் பிள்ளைனு செல்லம் கொடுத்து வளர்த்தாரு.

அதிகமாக செலவளித்து படிக்கவைச்சி வைத்தியரும் ஆக்கினாரு. இது என்னுடைய முயற்சியில் நான் படித்து நான் தேடிய வேலை. நான் தேடிய வாழ்க்கை. நான் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

அதனால் என்னை விட்டுவிடுங்கள். வேண்டுமென்றால் நானாவிடம் கேட்டுப் பாருங்கள்" என்று என்னை ஒதுக்கிவிட்டாள்.

மகனிடமிருந்து ஒரு அழைப்புக் கூட வருவதில்லை. நான் இப்போது ஓர் அனாதையைப்போல் தனிமையில் வாடுகிறேன்" என்று சொல்லிவிட்டு தேம்பித்தேம்பி அழுதார்.

அதனைப் பார்க்க எனக்குக் கவலையாக இருந்தது.

''முளைத்து வளர்ந்ததும் மரங்கள் வேர்களை மறந்து விடுகின்றன" என்று மனதிற்குள் நினைத்தபடி அவருடைய தலையை கோதிவிட்டேன்.

''என்னிடம் வந்துவிடு மச்சான். நான் உன்னை நன்கு பார்த்துக் கொள்கிறேன்'' என்று எவ்வளவோ கெஞ்சிய போதிலும் அவன் வருவதாக இல்லை. கடைசியில் திருமண அழைப்பைக் கொடுத்து விட்டு வேதனையோடு எழுந்து நடந்தேன்.

**முற்றும்**

---

# மலையகத்தின் சொல்ல மறந்த கதை

(கதை வடிவ கவிதைத் தொடர்)

இன்றைய இலங்கையின் முன்னேற்றத்தில் முதுகெலும்பாக பெருந்தோட்ட தொழிலாளர்களாகிய எமது அன்னை, தந்தையர் காணப்படுகின்றார்கள்.

மறைக்கப்பட்ட உண்மை வரலாற்றை, தியாகங்களை, சேவைகளை வெளிக்கொணரும் எனது சிறிய முயற்சியே இந்த 'சொல்ல மறந்த கதை' எனும் கவிதைத் தொடராகும்.

எமது உண்மை வரலாறுகள் இன்று திரிபடையச் செய்யப்பட்டுள்ளன.

மலையக மக்களின் வாழ்வியல் மற்றும் வரலாறுகள், பொய் விமர்சனங்களால், ஒடுக்கப்பட்ட சமூகமாக இன்னும் ஏனைய சமூகங்களால் பார்க்கப்படுவது கண்கூடே.

"ஆனால், உண்மை அதுவன்று."

கிட்டத்தட்ட 1830 ஆம் ஆண்டு காலம் தொட்டு இன்று வரையான வரலாறு கொண்டது எம்மினமாகும். மலையக உழைக்கும் மக்களின் வரலாறு உன்னதமானதும், போற்றத்தக்கதுமாகும்.

உதிரத்தை உரமாக்கி கோப்பி மரங்களுக்கும், பின்பு தேயிலைச் செடிகளுக்கும் தூவி விட்டவர்கள் அவர்கள். அவர்களின் தியாகங்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்களின் வரலாறு இனியாவது ஏடுகளில் பதிவுசெய்யப்பட வேண்டும். இந்திய வம்சாவளி மலையகத் தமிழரின் வரலாறு, சிலரால் நூலாக்கம் செய்யப்பட்டிருப்பினும், அது எத்தனை பேரை சென்றடைந்தது என்பது கேள்விக்குறியே.

எமது வரலாற்றை முதலில் நாம் அறியவேண்டும். எமது பெருமையை முதலில் நாம் உணர வேண்டும். பின்பு உலகுக்கு உரக்கச் சொல்வோம். எமது வரலாற்றை கடுகளவில் நானும் சிறிது ஆய்வு செய்துள்ளேன். அதனை நானறிந்த கவிநடையில், எம் மலையக மண் வாசம் வீசும் எமது மொழிநடையில், கவிதை நாவலாக வார்த்துள்ளேன். இந்தக் கதை கோப்பிக்கால யுகம் தொட்டு தொடர்கிற கதையானாலும் இவை யாவும் அன்று நடந்த உண்மையின் மறுவடிவமே ஆகும்.

இதை எனது "நெஞ்சம் கொண்ட ஈரமாக" ஏட்டில் சிந்தியுள்ளேன்.

சொல்ல மறந்த கதை நிச்சயம் சொல்லப்பட வேண்டும். இதுவே இந்தத் தொடரின் நோக்கமாகும்

---

### *சொல்ல மறந்த கதை-01*

### *1825-1898*

### *(தென்னிந்தியாவில்)*



*அப்ப ஒரு காலத்துல*
*நடந்தது இந்தக் கத*
*சொல்ல மறந்த கத*
*எங்க வீட்டு சொந்தக் கத*

*நம்ம ஆயி அப்பே பட்ட கத*
*அடிமையா வாழ்ந்த கத*
*சின்னப்பட்ட நம்ம கத*
*சொல்லுகிறேன்*
*கேட்டுக்குங்க*

*இந்திய தேசத்துல*
*தென்னகத்தில்*
*நாம் பொறந்தோம்*
*கோடி சனம் கூட சேந்து*
*ஒத்துமையா தானிருந்தோம்*

*தமிழ் வேந்தன் ஆண்ட*
*மண்ண வெள்ளக்காரன்*
*புடுங்கிபுட்டான்*

*குடியேற்ற தேசமின்னு*
*அவனும் ஒரு பேருவச்சான்*
*ஒலகம் பூராத்தயும்*
*ஆளுறானாம்*
*பிரிட்டிஷ் காரன்*
*அவே பேராம்*

*அப்பாவி மக்க சனோ*
*என்னா ஏது செய்ய*
*ஒன்னு மண்ணா*
*தின்னுக்கிட்டு*
*வாழ்ந்து வந்த மக்க நாங்க*
*மதுர தஞ்சாவூருலயும்*
*சொந்த பந்தம் இருக்குறாங்க*

*மூக்காயி அவ பேரு*
*முனியாண்டி*
*எம் பேரு*

*காதலிச்ச காலத்துல*
*கையி கூட பட்டதில்ல*
*காதலிச்சு கை புடிச்சோ*
*கல்யாணம் கட்டிக்கிட்டோம்*

*சோறு போடும் மண்ண*
*நாங்க*
*மகமாயா பாப்பமுங்க*
*கஞ்சி தண்ணி தான்*
*குடிச்சி வயித்த*
*கழுவிக்கிட்டோம்*
*எந்த கொறையும் இல்ல*
*வாழ்க்க நல்லா ஓடுனிச்சி*

*மூக்காய பத்தி கொஞ்சம்*
*ஒங்ககிட்ட சொல்லட்டுமா*
*கறுப்பு நெறந்தாங்க*
*சாமி அவ தங்க செலதாங்க*

*அவ கை நனச்ச*
*தண்ணியத்தா தொட்டு*
*கொஞ்சம் வாயில் வச்சா*
*பச்சத்தண்ணி தேனாகும்*
*பாயாசம் போலிருக்கும்*

*முனியாண்டி மட்டும் என்ன*
*லட்சணத்தில் கொறஞ்சவனா*
*மொரட்டுக் காளயாட்டம்*
*வீரமுள்ள ஆண்மகன் தான்*

*அவளோட வட்ட நிலா*
*நெத்தியில*
*பொட்டாக இவனிருப்பான்.*
*காதலோடு*
*கட்டிலுல*
*மல்லுக்கட்டி*
*முத்தமிட்டான்*

*கல்யாணப் பரிசாக*
*முத்தான புள்ள ஒன்ன*
*மூக்காயி பெத்தெடுத்தா*

*முத்தான குடும்பமது*
*அம்சமா இருக்குதையா*
*மல்லியப்பு தோட்டமாட்டம்*
*வாசம் வீசி மணக்குதையா*

*மல்லியப்பு வாடிடுமோ*
*வாசம் வீச மறுத்திடுமோ*
*தாலாட்டு கேக்கும் வீட்டில்*
*ஒப்பாரி கேட்டிடுமோ*

**தொடரும்...**

**எம்.ராமதாஸ்**
**இறம்பொடை**





# நான் நானாக இருக்கிறேன்
## அமலாபால்

தமிழ்த் திரையுலகில் முன்னணி நடிகையாக உள்ள அமலாபால் கடைசியாக நடித்த படம் ஆடை. இந்த படத்தைத் தொடர்ந்து அதோ அந்த பறவைபோல, ஆடுஜீவிதம், கடாவர் உள்ளிட்ட படங்களில் கவனம் செலுத்தி வருகிறார்.

அமலாபால் தனது திரையுலக பயணம் மற்றும் பர்சனல் வாழ்க்கை குறித்து மனம் திறந்து பேசியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது, இப்போதும் நான் நானாக இருக்கிறேன். 17 வயதில் சினிமாவுக்கு வந்தேன். என் தனிப்பட்ட வாழ்வில் நான் சந்தித்த விடயங்கள் சினிமாவிலும், சினிமாவில் நான் சந்தித்த விடயங்கள் என் வாழ்விலும் பிரதிபலித்தன. இதை எப்படி பிரிப்பதென தெரியவில்லை. 2020இல் என் அப்பா இறந்தது, நான் எதிர்கொண்ட விடயங்கள் எல்லாம் எனக்கான சுயபரிசோதனை காலமாகவே இருந்தன. திறந்த புத்தகமாக என்னை உணர்ந்தேன். எனக்கென்று வாழ்க்கை எதுவும் இல்லை, என் வாழ்க்கை தவறாக புரிந்து கொள்ளப்பட்டதை உணர்ந்தேன். தற்போது சினிமா வாழ்வையும், ரியல் வாழ்க்கையையும் பிரிக்க முயற்சிக்கிறேன் என்றார்.

ரசிகர்கள் அவருக்கு ஆறுதல் சொல்லி வருகின்றனர்.



# அசத்தும் மயில்சாமி

நடிகர் மயில்சாமி போட்டோஷூட் செய்து அசத்தலான புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

இந்தப் படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. மேலும் சிலர், வரவர கெட்டப்பெல்லாம் மாறுது ஹீரோவாகிடுவீங்க போல என்று மயில்சாமியை கேட்டு வருகின்றனர்.

'தாவணிக் கனவுகள்' திரைப்படத்தில் கூட்டத்தில் ஒருவராக நடித்தவர் மயில்சாமி. அந்த திரைப்படத்தையடுத்து, 'கன்னி ராசி' திரைப்படத்தில் மளிகை பொருட்களை டெலிவரிசெய்யும் வேடத்தில் வந்திருப்பார். இப்படி சிறிய சிறிய கதாபாத்திரங்களின் மூலம் தனது நடிப்பு பயணத்தை தொடர்ந்தார் மயில்சாமி.

குணச்சித்திரம், நகைச்சுவை என அனைத்திலும் மிரட்டிவரும் மயில்சாமி, நான் அவனில்லை, தூள், கில்லி, கண்களால் கைது செய், தேவதையைக் கண்டேன், ரெண்டு மற்றும் திருவிளையாடல் போன்ற திரைப்படங்களில் சிறப்பாக நடித்து புகழின் உச்சம் தொட்டார்.




தற்போதும், இளம் ஹீரோக்களுக்கு சவால் விடும் வகையில் ஒரு போட்டோஷூட் செய்து அசத்தியுள்ளார் மயில்சாமி. கோட் ஷூட்டில் அசத்தலாக விதவிதமான போஸுடன் செம்ம கெத்துக்காட்டி உள்ளார். இந்த போட்டோ இணையத்தில் வைரலாகி வருகிறது.





# சின்னத்திரையில் நந்திதா!

தென்னிந்திய சினிமாவில் பிரபல நடிகையாக வலம்வரும் நந்திதா நடிப்பில் வெளியான அட்டகத்தி, எதிர்நீச்சல், இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா, முண்டாசுப்பட்டி என வரிசையாக படங்கள் வெற்றிபெற்றதால் கவனிக்கப்படும் நாயகியாக மாறினார். சமீபகாலமாக நந்திதாவுக்கு பெரிய வாய்ப்புகள் எதுவும் வரவில்லை.

இந்நிலையில், 'அபியும் நானும்' என்ற சீரியலின் சிறப்பு ஒரு மணிநேர காட்சி ஒளிபரப்பாக இருக்கிறது. இதில் நந்திதா ஸ்வேதா சிறப்புத் தோற்றத்தில் தோன்றுகிறார். இதற்கான புரமோ தற்போது வெளியாகியுள்ளது. சினிமா வாய்ப்புகள் குறைந்ததால் சீரியலுக்கு வந்துவிட்டீர்களா? என்று ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

# என் காதல் முறிந்துவிட்டது
## அனுபமா பரமேஸ்வரன்

அனுபமா பரமேஸ்வரனையும் காதல் கிசுகிசுகளையும் பிரிக்க முடியாது.

எல்லா கிசுகிசுக்களுக்கும் தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளார். பிரேமம் படத்தின் மூலம் பிரபலமானவர் நடிகை அனுபமா பரமேஸ்வரன். இந்த படத்திற்கு பிறகு தமிழில் கொடி திரைப்படத்தில் நடிகர் தனுஷுக்கு ஜோடியாக நடித்து புகழ்பெற்றார்.

அதன்பிறகு மலையாளம், தெலுங்கு, கன்னடத்தில் பிசியாக நடித்து வருகிறார். தற்போது ஆர்.கண்ணன் இயக்கும் தள்ளிப் போகாதே படத்தில் அதர்வாவுக்கு ஜோடியாக நடித்து வருகிறார். திரைப்படங்களில் தற்போது பிசியாகிவிட்ட அனுபமா குறித்த திருமண வதந்திகள் அவ்வப்போது தலைப்பு செய்திகளாகி விடுகின்றன.

அதிலும் பிரபல கிரிக்கெட் வீரர் பும்ராவுடன் அனுபமா பரமேஸ்வரன் திருமணம் என்ற செய்தி தொடர்ந்து இணையத்தில் பரவியது. பும்ரா - அனுபமா காதலித்து வருவதாகவும், விரைவில் திருமணம் என்ற அளவுக்கு தகவல் பரவியது. ஆனால், அனுபமா பரமேஸ்வரன் குடும்பத்தின் தரப்பில் இது வதந்தி என முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இந்நிலையில், இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தீவிரமாக இருக்கும் அனுபமா, ரசிகர்களிடம் சமீபத்தில் உரையாடியபோது, நிஜ வாழ்க்கையில் காதலித்தது உண்டா என்று ரசிகர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அனுபமா, ஆம், நான் ஒருவரை உண்மையாக காதலித்தேன். ஆனால், அந்த காதல் நீண்டகாலம் நிலைக்கவில்லை. காதல் முறிவு ஏற்பட்டு இருவரும் பிரிந்துவிட்டோம் என்றார்.

மேலும் மன நிம்மதிக்கு என்ன செய்வீர்கள் என்று கேட்டதற்கு, சமீபத்தில்தான் ஓவியம் வரைய தொடங்கியிருக்கிறேன், அதில் கவனம் செலுத்துவது மிகவும் நன்றாக இருக்கிறது. அமைதி என்பது நமக்குள் இருந்து வரவேண்டும் என்றார். தெலுங்கில் பிரபலமாகி வரும் நடிகர் ராம் பொத்னேனி பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, நல்ல நண்பர் என்றார். உங்களுக்கு பிடித்த உணவு என்ன என்றதற்கு, அம்மா சமைக்கும் உணவுகள் பிடிக்கும். கேரளா உணவு வகைகள் அனைத்தும் பிடிக்கும். பிரியாணியை விரும்பி சாப்பிடுவேன் என்று கூறினார்.



# தயாரிப்பாளராகும் டாப்சி

திரைத்துறையில் 10 ஆண்டுகளை கடந்துள்ள டாப்சி, தற்போது புதிய தளத்தில் கால் பதித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

நடிகை டாப்சி தனுஷுடன் இணைந்து ஆடுகளம் படத்தின் மூலம் கோலிவுட்டில் அறிமுகமாகி ரசிகர்களை கவர்ந்தவர். அந்த படத்தில் இவரது நடிப்பு பேசப்பட்டது. இதையடுத்து தமிழ், தெலுங்கு மற்றும் இந்தியில் தொடர்ந்து நடித்து வருகிறார் டாப்சி. சமீபத்தில் இவரது நடிப்பில் ஹிந்தியில் வெளிவந்த 'ஹசீன் தில்ருபா' படம் நெட்பிளிக்சில் வெளியானது.

விக்ராந்த் மாசேவுடன் இவர் நடித்திருந்த இந்த படத்திற்கு கலவையான விமர்சனங்கள் எழுந்தன.

அடுத்ததாக தமிழில் விஜய் சேதுபதியுடன் அனபெல் சுப்ரமணியம் என்ற படத்தில் நடித்து வருகிறார். தீபக் சுந்தர்ராஜன் எழுத்து மற்றும் இயக்கத்தில் உருவாகி வரும் இந்த படத்தின் போஸ்டர்கள் வெளியாகி வரவேற்பு பெற்றுள்ளன.

திரைத்துறையில் 10 ஆண்டுகளை கடந்துள்ள டாப்சி, தற்போது தயாரிப்பாளர் அவதாரத்தை எடுத்துள்ளார். இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளார். தான் திரைத்துறைக்கு வருவேன் என்று கனவிலும் நினைத்ததில்லை என்றும் ஆனால் தற்போது தான் இதில் வெற்றிகரமான நடிகையாக வலம் வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

தனக்கு அனைத்தையும் தந்துள்ள திரைத் துறைக்கு திரும்பவும் எதையாவது செய்ய வேண்டும் என்ற ஆவல் தனக்கு இருப்பதாகவும் அதனால் தற்போது அவுட்சைடர் பிலிம்ஸ் என்ற தயாரிப்பு நிறுவனத்தை துவக்கியுள்ளதாகவும் அதை வெற்றிகரமாக நடத்த அனைவரது வாழ்த்துக்களும் தேவை என்றும் கூறியுள்ளார்.



# 'விக்ரம்' படப்பிடிப்பை தொடங்கிய லோகேஷ் கனகராஜ்

கமல், விஜய் சேதுபதி முதன்முறையாக இணைந்து நடிக்கும் 'விக்ரம்' படத்தின் படப்பிடிப்பு தற்போது சென்னையில் ஆரம்பமாகியுள்ளது.

மாநகரம், கைதி, மாஸ்டர் என ஹாட்ரிக் ஹிட் படங்களை கொடுத்த லோகேஷ் கனகராஜ் அடுத்ததாக இயக்கும் படம் 'விக்ரம்'. நடிகர் கமல்ஹாசன் ஹீரோவாக நடிக்கும் இப்படத்தில் விஜய் சேதுபதி, பகத் பாசில், நரேன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர். இப்படத்தை நடிகர் கமல்ஹாசன் தனது சொந்த தயாரிப்பு நிறுவனமான ராஜ்கமல் பிலிம்ஸ் நிறுவனம் மூலம் தயாரிக்கிறார்.

அனிருத் இசையமைக்கும் இப்படத்திற்கு கிரீஷ் கங்காதரன் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படம் குறித்த அறிவிப்பு கடந்த ஆண்டே வெளியான போதிலும், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக படப்பிடிப்பு தொடங்கப்படாமல் இருந்தது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 1 இதழ் : 1 - 18.07.2021



## மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனீபா உடனான ஓர் உரையாடல்



## பரதநாட்டியத்தின் தாற்பரியத்தை உணர்ந்து புதினங்களைப் படைக்க வேண்டும்

- ஸ்ரீமதி ஷாலினி வாகீஸ்வரன்

## வசந்தமாய் காற்றலைகளில் சுதந்திரமாய் வாழ்கிறேன்

–நித்தியகல்யாணி

(முகப்புப் படம்: ஷாலினி வாகீஸ்வரன்)

# தமிழ் முரசு

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்



மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com

தொலைபேசி: 0115 200 900/011 588 6187

விளம்பரம் :077 172 1880


## தரணியெங்கும் தமிழ் மணக்கும் மாதமொன்றில்...

கலை, இலக்கியங்களை ஊக்குவிப்பதற்கான சூழல் கொரோனா முடக்ககாலப்பகுதியில் அரிதாகி வருகின்ற நிலையில், கலை, இலக்கியத்தின் தனித்துவம் கருதி 'தமிழன்' பத்திரிகையுடன் இணைந்ததாக வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவந்த 'இலக்கிய சங்கமம்' இவ்வாரம் முதல் 'தமிழ் முரசு' எனும் புதிய நாமத்துடன் 'தமிழன் ஞாயிறு பத்திரிகை'யுடன் இலவச இணைப்பாக தனியான இதழாக தனித்துவமாக வெளி வருகின்றது.

கொவிட்-19 ஆரம்பித்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும் ஒவ்வொரு துறைசார் செயற்பாடும் ஏதோவொரு வகையில் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. பல துறைசார் செயற்பாடுகளை இயங்க வைப்பதற்காக இணைய செயலிகள் உட்பட பல சமூக வலைத்தளங்கள் உறுதுணையாக இருக்கின்றன.

வாராந்தம், நாளாந்தம் என தொடர்ச்சியாக கலை இலக்கிய செயற்பாடுகள் இணையதளத்தில் அரங்கேறுகின்றன. அந்தவகையில் கடந்த இரு வாரங்கள் பிரதான இலக்கிய நிகழ்வுகளாக இளந்தலைமுறையினரால் நினைவுபடுத்தப்பட்டு கொண்டாடப்பட்ட மூன்று முக்கிய ஆளுமைகளின் நிகழ்வுகளை குறிப்பிடலாம்.

எழுத்தாளர்,இதழியலாளர், சமூகப்போராளி டொமினிக் ஜீவா மற்றும் புலமையாளர், தமிழறிஞர் என போற்றப்படும் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஆகிய இருவருக்கும் இணைய தளத்தில் விழா எடுத்துக் கொண்டாடப்பட்டது. முன்னையவர் பிறந்தநாளும், அடுத்தவர் நினைவுநாளும் என அந்த நிகழ்வுகளுக்கு கால்கோளிட்டது.

இதற்கிடையே இலக்கிய, அரசியல், சமூக செயற்பாட்டாளர் கதைசொல்லி எஸ்.எல்.எம்.ஹனிபா பிரதேச மட்டத்தில் மட்டக் களப்பில் விழா எடுத்துக் கொண்டாடப்பட்டார். 'மக்கத்துச் சால்வை மண்ணும் மணமும்' என்ற நினைவு நூலும் வெளியிடப்பட்டது.

முன்னைய இரண்டு நிகழ்வுகளிலும் இணையவழி ஊடாகவே உள்நாட்டிலும், உலக நாடுகளிலும் உள்ள ஆளுமைகள் பலர் இணைந்து இவ்வாறான நிகழ்வுகளை நடத்துவது வரவேற்கத்தக்க விடயம்.

தகவல் யுகத்தில் இந்நிகழ்ச்சிகள் இடம்பெற்றாலும் அது அச்சில் பதிவு பெற வேண்டியது அவசியம். அந்த வகையில் 'டொமினிக் ஜீவா 'நெடுவாழ்வின் எழுதித் தீரா நினைவு' எனும் நினைவு நூல் தொகுப்பால் பதிவுசெய்யப்பட்டார்.

'பேராசிரியர் கா.சிவத்தம்பி எனும் தமிழ்ப் பேராறு' எனும் தலைப்பில் நினைவுரைகள் பலதும் ஒரு தமிழாராய்ச்சி மாநாடுபோல் 7 நாட்கள் தமிழகம், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழறிஞர்கள், சமூக ஆய்வாளர்கள் ஆகியோரின் உரைகளினாலும், உரையாடல்களினாலும் நிரம்பி வழிந்தது. அந்தக் கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து நூலாக்குவதும் விழா ஏற்பாட்டாளர்களின் வரலாற்றுப் பணியாகும். அதற்கான ஒத்துழைப்பை தமிழ் கூறும் நல்லுலகம் வழங்க முன்வருதல் வேண்டும்.

இப்படியாக தரணியெங்கும் தமிழ் மணக்கும் ஒரு மாதத்தில், தமிழ் முரசு எனும் கலை இலக்கிய பல்சுவை வார இதழை அறிமுகம் செய்வதில் 'தமிழன்' பத்திரிகை பெருமை கொள்கிறது.

அனைத்து கலை, இலக்கியவாதிகள் உங்கள் பிரதேச நிகழ்வுகள் தொடர்பான ஆக்கங்களையும், கட்டுரைகளையும் தமிழ்முரசுக்கு அனுப்பிவைக்கலாம். உங்களது ஆதரவும் ஒத்துழைப்பும் எம்மையும் பலமாக்கும் இலக்கியத்தை வளமாக்கும்.



## 'பாரம்பரியம்' நிகழ்ச்சியில் நாடக எழுத்தாளர்



கலாபூஷணம் எம்.அஷ்ரப்கான் கலந்து கொள்ளும் 'பாரம்பரியம்' நிகழ்ச்சி எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8.15 மணியளவில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகவுள்ளது. எம்.எஸ்.எம்.ஜின்னா இவரை செவ்விகாண, நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப்பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார். ஆறு தசாப்தங்களாக தலைமுறை கடந்தும் இன்றும் நினைவு கூரப்படும் பிரபல நாடக எழுத்தாளர் 'லியாவுல் பன்னான்' (கலைச் சுடர்) கலாபூஷணம் எம்.அஷ்ரப்கான் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் மட்டுமல்லாது, தமிழ் வர்த்தக சேவைகளிலும் நூற்றுக்கணக்கான நாடகங்கள் எழுதி தமிழ்மொழி பேசும் அனைவர் மத்தியிலும் பெரும் புகழைத்தேடிக் கொண்டவர். இன்றும் மதம் கடல் கடந்தும் பேசப்படும் அளவிற்கு உச்சம் தொட்ட முஸ்லிம் சேவையின் ''நாடக பாரம்பரியத்திற்கு'' வித்திட்டோர் வரிசையில் இவர் ஒரு முக்கியஸ்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## இணையவழி உரையாடல்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க பொதுச் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரம் பற்றிய ஓர் உரையாடல் இன்று 18 ஆம் திகதி இலங்கை நேரம் காலை 6.30 மணி முதல் முகநூல் வழியாக இடம்பெறவுள்ளது.

உரையாளர்களாக லெ.முருகபூபதி (எழுத்தாளர் -அவுஸ்ரேலியா), க.நவம் (எழுத்தாளர், இதழியலாளர் - கனடா) ஆகியோர் பங்குபெறவுள்ளனர். கவிஞர் மேமன் கவியின் ஒருங்கிணைப்பில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், பிரேம்ஜியின் மருமகன், டீ.ஞானேந்திரன் (கனடா) நன்றியுரை வழங்குவார்.

## 'பிறப்பிட நிழலிலே...' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா




வெள்ளாப்புவெளி நடத்தும் கொடகே நடத்திய ஆக்க இலக்கியப் போட்டியில் பரிசு பெற்ற ஜன்ஸி கபூரின் 'பிறப்பிட நிழலிலே...' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கை நேரம் மாலை 4.00 மணிக்கு ZOOM வழியாக இடம்பெறவுள்ளது.

இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் முதல் பிரதியைப் பெற்றுக்கொள்வார். ஏற்புரையை நூலாசிரியை ஜன்ஸி கபூர் நிகழ்த்துவார். இலக்கிய ஆர்வலர்கள் Meeting ID: 897 4587 1299 Pass code: 123456 எனும் முகவரியுடன் இணைந்து கொள்ளலாம்.

## ஹஜ்ஜுப் பெருநாள் கவியரங்கம்



முழு மனித சமூகத்திற்கும் ஈமானியப் பாடம் சொல்லித்தந்து சன்மார்க்கத்தின் தாற்பரியத்தை தியாகத்தின் மூலம் முழு உலகிற்கும் கற்றுத்தரும் தியாகத்திருநாளாம் புனித ஹஜ்ஜுப்பெருநாளை முன்னிட்டு, இலங்கை வானொலி முஸ்லிம் சேவை எதிர்வரும் புதன்கிழமை (21) பெருநாள் தினத்தன்று காலை 10.05 மணிக்கு பண்பலை 102.1 Mhz, 102.3Mhz இல் ஹஜ்ஜுப் பெருநாள் கவியரங்கத்தை வழங்குகிறது.

இக்கவியரங்கிற்கு எழுத்தாளர், கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் தலைமை தாங்குகிறார். அவரின் தலைமையில் இளம் கவிஞர்களான கல்முனை அறூபா அஹ்லா, கெக்குனு கொல்ல சப்ராஸ் அபூபக்கர், கிண்ணியா நசார் இஜாஸ், அனுராதபுரம் சீமா சைரீன், புத்தளம் -ஏத்தாலை சவ்துன் நிசா ஆகியோர் பங்குகொள்ளவுள்ளனர்.

# இடர்கால இலக்கியங்கள்

இடர்காலத்தில் இளைஞர்கள் பலர் இணைந்து பல மனிதநேயப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். அதேசமயம் அவர்களில் சிலர் சமூகத்தை வளப்படுத்துகின்ற நோக்கில், சமூக மேம்பாட்டை ஓங்கச்செய்கின்ற வகையில் சமூகத்தின் நாற்றுகளை நோக்கி தமது செயற்றிட்டங்களை முன்வைக்கின்றனர். அந்தவகையில் அவர்கள் சிறுவர்கள் தொடர்பான இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருக்கின்றனர். இதற்கு முன்னரும் அவர்கள் பற்றி இப்பத்தியில் தொட்டிருக்கிறேன். அவர்களின் இலக்கியச் செயற்பாடுகளைப் பற்றி எழுதியிருக்கிறேன். இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி அமைத்துச் செயற்படும் மனிதம் என்ற அமைப்பைப் பற்றியே நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

மனிதம் – அறம் செய்ய கரம் கோர்ப்போம் என்ற கோஷத்தோடு ஆரம்பமாகியது. கொரோனா தொற்றுநோய்க்கால ஊரடங்கு வேளைகளில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கான அத்தியாவசிய உணவுப்பொருட்களைத் திரட்டுவதற்கும் விநியோகித்தலுக்குமான வலையமைப்பு ஒன்றினை உருவாக்கிச் செயற்பட்ட அந்த அமைப்பானது இன்று பல்வேறு மனிதநேயப் பணிகளை முன்னெடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

அதில் முக்கியமாக சிறுவர்களிடையே இலக்கிய இரசனைகளை உருவாக்கி அதனை வளத்தெடுப்பதன் மூலம் ஆரோக்கியமான தொரு சமூகத்தைக் காணலாம் என்ற விருப்பில் தொடங்கப் பட்டதே வாசிப்பு வட்டம் என்ற சிறுவர் செயற்பாடு. பல சிறுவர் அமைப்புகள், நூல் நிலையங்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றினூடாக இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அந்த நிகழ்விலே பல சிறுவர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டதாகவும் மனிதம் அமைப்பினர் குறிப்பிடுகின்றனர்.

சிறுவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்கள், அவர்களது சுயம் என்பது புத்தகத்தை தாண்டியும் மிகவும் வண்ணமயமானது. அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணரவேண்டியது எமது கடமையாகும். இப்பயணத்தடைக் காலத்தில் சிறுவர்கள் தம்மைத் தாமே அடையாளம் கண்டுகொள்ள ஏதுவாக அமையும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே மனிதத்தின் ஆளுமை விருத்தி முயற்சி தொடங்கப்பட்டதாக சொல்கின்றனர். அச்செயற்பாட்டினூடாக மழலைகளுடனான சந்திப்பு மிகவும் மகிழ்ச்சிகரமானதாக மட்டுமல்ல, ஆக்கபூர்வமானதாகவும் அமைகின்றது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். எனவே, இவ்வாறான சந்திப்புகள் தொடர்ச்சியாக வாரந்தோறும் நடைபெறும். இன்றைய அறிமுகங்கள் நாளைய அடையாளங்களாகலாம். பரந்த இச் சமூக அரங்கில் நாம் யாரென உரத்துக் கூறுவதற்கான உந்துதலை இளம்பராயத்திலேயே வளர்த்தெடுக்கவேண்டியது ஒன்று. அவர்களுக்கான வெளியில் குழந்தைகள் தத்தமது சுயங்களை நிலைநாட்டல் அவசியம் – என்றவகையில் அவர்கள் சிறுவர்கள் தொடர்பான நிகழ்வுகள் தொடர்கின்றனர். தற்போது காணப்படும் நோய்த்தொற்றுச் சூழலுக்கேற்றவாறு நிகழ்வுகளை ஒழுங்கமைத்துச் செயற்படும் அவர்கள் தமது எல்லா நிகழ்வுகளையும் சூம் இணையச் செயலியினூடாவே நகர்த்துவதே தெரிகிறது.

நூற்கல்வி மட்டும் குழந்தைகளது எதிர்காலத்தை தீர்மானித்து விடாது. ஆற்றல்கள் மட்டுமல்ல, அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றுகையும் அதற்கான உந்துதலும் இன்றியமையாதது. குழந்தைகளைத் தக்க தருணத்தில் வளப்படுத்தி அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்தலானது எவ்வளவிற்கு அவசியமோ, அவ்வளவுக்கு அவர்களை முறையாகக் கையாளுதலும் அவசியம். பெரியவர்களை அவதானிப்பதன் மூலமே அவர்கள் அதிகளவாக கற்றுக்கொள்கின்றார்கள். மழலைகளின் எண்ணங்கள் ஆக்கபூர்வமானவை. அதேபோன்று அவர்களின் ஆக்கங்களும் வண்ணமயமானவை எனக் குறிப்பிட்டு அதனூடாகப் பங்குபெறும் சிறுவர்களின் திறமைமிக்க பங்களிப்புகளை அவர்கள் தமது முகநூலிலே பதிவிட்டு வருகிறார்கள். அது பல சிறுவர்களை நிச்சயம் ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை.

**கணபதி சர்வானந்தா**

# சமூக உணர்வும் இலக்கிய ஆர்வமும்கொண்ட புதுமைப்பிரியை திருமதி பத்மா சோமகாந்தன்



சமூகச் சூழலினாலோ காலத்தினாலோ எழுத்தாளரானவர் அல்ல பத்மா சோமகாந்தன். இளம் வயதிலிருந்தே இலக்கிய ஆர்வத்தால் உந்தப்பட்டு எழுத்துத்துறைக்குள் பிரவேசித்து இலக்கியவாதியாக உயர்ந்தவர் இவர்.

மிகவும் ஆசாரமான ஒரு பிராமணக் குடும்பம் பத்மாவினுடையது. தந்தையார் பஞ்சேஸ்வரக் குருக்கள். தாயார் அமிர்தம்மாள். வைதீகமான ஒரு குடும்பத்தில் பிறந்து கட்டுக்கோப்பான சூழலில் வளர்ந்து கல்வி கற்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் பயின்று தமிழாசிரியை ஆனவர்.

சிறுவயதிலிருந்தே தணியாத தாகத்தோடு இலக்கியங்களை கற்று வந்தாலும், இசை, நடனம் போன்ற பிற கலை பயிற்சிகளைப் பெற்றதாலும் கலையுணர்வு படைப்பாற்றல் போன்ற எழுத்துத்துறை உந்துதல்கள் இவற்றுள் ஏற்படத் தொடங்கின.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இலக்கிய கையெழுத்துப் பிரதியான கலைமலர் ஏட்டில் எழுதியும் இதழாசிரியராக இருந்தும் எழுதும் தனது ஆற்றலை வளர்த்துக்கொண்டவர் இவர்.

யாழ்ப்பாணத்தில் சாதிக்கட்டுப்பாடுகளும் அடக்குமுறைகளும் தலைவிரித்தாடிய ஒரு காலகட்டத்தில், மிக உயர்ந்த சாதியாகக் கருதப்பட்ட பிராமணக் குலத்தில் பிறந்து கட்டுப்பாடுகளுடன் வளர்ந்த ஓர் இளம் பெண், திடீரென அதிலிருந்து விடுபட்டு, மொழிப்பற்று, இன உணர்வு, மனிதநேயம், சமூகசேவை போன்றவற்றை தனக்கான வழியாக வரித்துக்கொள்கின்றாரென்றால் அதற்கான அகக் காரணியாய் திகழ்வது அவரது இலக்கிய மனம்.

புறக்காரணியாய்த் திகழ்வது ஐம்பதுகளின் தமிழகத் திராவிட இயக்கங்களின் கருத்தியல் பேரலையும் இலங்கையில் தமிழரசுக் கட்சியின் தோற்றமும் இனமொழி உணர்வுக்கான அதன் செயற்பாடுகளும். பத்மா பஞ்சநாதேஸ்வரனாக இருந்த இவர், 50களின் ஆரம்பத்தில் எழுத்துப் பிரவேசம் செய்து ஒரு படைப்பாளியாக பரிணமிக்க தனக்கிட்டுக்கொண்ட பெயர் புதுமைப்பிரியை. அர்த்தங்கள் நிறைந்த பெயர் அது.

1947 ஜுனில் தமிழரசுக் கட்சியின் ஏடாக ஆரம்பம் கொண்டது சுதந்திரன். 1951இல் சுதந்திரன் சிறுகதைப் போட்டியை நடத்தியது. சுதந்திரன் நடத்துகின்ற சிறுகதைப்போட்டி என்பதால் தமிழ் எழுத்தாளர்கள் மத்தியில் ஆர்வமும் எதிர்பார்ப்பும் அதிகமாகவே இருந்தன. போட்டி முடிவுகள் வந்தபொது பெரும் ஆச்சர்யம் நிகழ்ந்திருந்தது.

**முதல் பரிசு – புதுமைப்பிரியை**
**சதங்கையின் நாதம்**
**இரண்டாம் பரிசு - கே.டானியல்**
**அமர காவியம்**
**மூன்றாம் பரிசு – ஏ.எஸ்.வடிவேல்**
**செங்கரும்பு**

புதுமைப்பிரியை எனும் பத்மாவுக்கான இந்த முதல் பரிசும் ஆசிரியர் குழுவினர் இந்தச் சின்னப்பெண்ணை வீடு தேடி வந்து பரிசு வழங்கியதும் இலக்கிய உலகை அவர் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது.

ஒரு நல்ல சிறுகதை எழுத்தாளராகக் தன்னை ஸ்தாபித்துக்கொண்ட பத்மா சோமகாந்தன், பெண் விடுதலை, இன உரிமை, மொழி, சமயம், சமூக நலம், பண்பாடு, முற்போக்கு சிந்தனை என்னும் படைப்புத்தளங்களை தனது படைப்பின் மையமாகக்கொண்டியங்கினார். ‘கடவுளின் பூக்கள்’, ‘புதிய வார்ப்புகள்’, ‘வேள்வி மலர்கள்’ ஆகியவை இவருடைய சிறுகதை நூல்கள்.

தமிழ்நாட்டின் வில்லிதேவசிகாமணி அறக்கட்டளை விருது உட்பட பல விருதுகள் இவருடைய சிறுகதை தொகுதிகளுக்குக் கிடைத்துள்ளன.

சிறந்த மேடைப்பேச்சாளரான பத்மா சோமகாந்தன் இலங்கை, தமிழ்நாடு மற்றும் மேலைநாடுகளில் மேடைகள் பல கண்டவர். புலவர் ஈழத்துச் சிவானந்தன் தான் எழுதிய 'ஈழத்தில் நான் கண்ட சொற்செல்வர்கள்' என்ற நூலில் பத்மாவைப் பற்றி ஒரு அத்தியாயமே எழுயுள்ளமை இவருடைய மேடைப்பேச்சு வன்மைக்கான சான்றாகும்.

ஈழத்து மாண்புறு மகளிர் 2002, The stories from Hindu mythology 2005 போன்ற பத்மாவின் நூல்கள் வித்தியாசமானவை.

எழுத்தையும் எழுதுவதையும் ஸ்வாசமாகக் கொண்டவர் இவர். நூற்றுக்கணக்கான அவரது கட்டுரைகள் அதற்குச்சான்றாகும். எழுத்துகளுக்கப்பாலான அவருடைய இலக்கிய சமூக செயற்பாடுகள் போற்று தலுக்குரியன. செல்வி திருச்சந்திரனின் WERC சாந்தி சச்சிதானந்தனின் அரசசார்பற்ற அமைப்பு. ஊடறு மற்றும் கொழும்பு தமிழ்ச்சங்கம் போன்றவைகளுடன் அவரது நட்பும் உறவும் செயற்பாடுகளும் அபூர்வமானவை.

‘பெண்ணின் குரல்’ மாத இதழின் ஆசிரியையாகவும் பணியாற்றினார்.

சோமகாந்தனை 60களில் மணம் முடித்து பத்மா சோமகாந்தனாகி முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இயங்குவிசையாகி நின்ற அமரர் சோமகாந்தனின் வலது கரமாய் நின்று முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் ஐக்கியமாகிவிட்டவர்.

எழுத்தாளர்கள் அனைவரையும் தனது உறவினராக எண்ணி வாழ்ந்த திருமதி பத்மா சோமகாந்தனின் மறைவு (15.07.2020) துயர் தருவது. மறந்துவிட முடியாது. மல்லிகை மே 1986 இதழும் ஞானம் செப்டெம்பர் 2005 இதழும் பத்மாவின் படத்தை அட்டையிட்டு கௌரவித்துள்ளன.

**தெளிவத்தை ஜோசப்**

# பரதநாட்டியத்தின் தாற்பரியத்தை உணர்ந்து புதினங்களைப் படைக்க வேண்டும்

## பரத கலாவித்தகர் ஸ்ரீமதி ஷாலினி வாகீஸ்வரன்

உரையாடல்: ராம் ஜீவா

முன்னேஸ்வரத்தை பிறப்பிடமாகக்கொண்ட பரதகலா வித்தகர் ஸ்ரீமதி ஷாலினி வாகீஸ்வரன் தனது ஆறாவது வயதில் பரதநாட்டியத்தை குரு ஸ்ரீமதி சாமுண்டீஸ்வரி சதாசிவத்திடம் கற்க ஆரம்பித்தார். பின் 2000 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் புகழ் பூத்த நடனக்கலைஞரும், நாட்டிய கலமந்திர் எனும் நடனப்பள்ளியின் ஸ்தாபகருமான குரு கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனிடம் நடனத்தைப் பயின்று 2004ஆம் ஆண்டு அரங்கேற்றம் செய்தவர். இந்தியாவில் சென்னையிலுள்ள சர்வதேச கவின் கலைக்கூடமான கலாஷேத்ராவில் நான்கு வருடங்கள் நடனம் பயின்று பரதநாட்டியதில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்பட்ட பரீட்சையில் விசேட சித்தி பெற்று பரத கலாவித்தகர் எனும் பட்டம் பெற்றவர்.

இந்தியாவில் சென்னை, சிதம்பரம், டில்லி ஆகிய இடங்களிலும், லண்டனில் கேட்வே அரங்கிலும், பெர்மின்கம் பாலாஜி கோயிலிலும் தனது நடன ஆற்றுகையை நிகழ்த்தியுள்ளார். 2018இல் இந்தியாவில் டெல்லி, அஹமதாபாத், பரோடா ஆகிய இடங்களில் நடைபெற்ற சர்வதேச இராமாயண நிகழ்வில் பங்குபற்றியுள்ளார். தற்போது கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்திலும், தனிப்பட்ட ரீதியிலும் பரத நாட்டியத்தைக் கற்பித்து வருகிறார். அவரை தமிழ் முரசுக்காக சந்தித்தபோது,



**உங்களது கலைப்பயணம் பற்றி..?**

இந்த உன்னதமான தெய்வீகக் கலையின் மேல் எனக்கு வந்த ஈடுபாட்டிற்கு முழுமுதல் காரணம் எனது தாய். அவரின் விருப்பத்திற்கிணங்க எனது ஆறாவது வயதில் குரு திருமதி சாமுண்டீஸ்வரி சதாசிவத்திடம் இணைந்தேன். ஆரம்பத்தில் கட்டாயத்தின் பெயரில் மட்டுமே நடனம் பயின்றேன். எப்போது இந்த கலைசாகரத்திற்குள் என்னைத் தொலைத்தேன் என்று தெரியவில்லை. இப்போது என் வாழ்க்கையே கலைதான் என்றாகிவிட்டது.

சிறு வயதில் பல நடனப்போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றுள்ளேன். பின்னர் 2000 ஆம் ஆண்டில் குரு கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனிடம் நடனம் பயில ஆரம்பித்தேன். 2000 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை என, இரண்டு தசாப்த காலமாக அவரின் வழிகாட்டலுடன் எனது நடனத்தின் பயணம் தொடர்கிறது. என்னுடன் மட்டுமல்லாது, தற்போது எனது மகளுடனும் சேர்ந்து தொடர்கிறது. இலங்கையில் நானும் ஒரு நடன ஆசிரியராகத் திகழ்வதற்கு முக்கிய காரணம் எனது குரு கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் ஊக்குவிப்பே.

எனது ஆற்றுகைகள் முடிவடைந்தவுடன், என்னை மனமார வாழ்த்துபவர்களின் வார்த்தைகளைக் கேட்டு என் தாய் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே கிடையாது.

**நீங்கள் அரங்கேற்றம் செய்த அன்றைய காலத்திற்கும் இப்போதைக்கும் உள்ள கலையின் ஆத்மார்த்த உணர்வு பற்றி?**

நாட்டிய கலாமந்திரில் இணைந்து நான்கு வருடங்களின் பின் 2004இல் எனது அரங்கேற்றம் நடைபெற்றது. அந்த நான்கு வருடங்களில் என் குருவின் வழிகாட்டலின் கீழ் பல சிரேஷ்ட மாணவர்களுடன் சேர்ந்து பல நடன நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளேன். அவர்களில் பொறியியலாளர்கள், வைத்தியர்கள் என்று பல துறைகளைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். அரங்கேற்றத்தின் பின்புதான் பல நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளோம் என்று கூறலாம்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் அரங்கேற்றம் என்ற ஒரு நிகழ்விற்காக நடனத்தைப் பயின்று பின்னர் அதனை நிறுத்திவிடுகிறார்கள். அரங்கேற்றம் என்பது தற்போது ஆடம்பர நிகழ்வாக மாறிவிட்டது. அரங்கேற்றம் என்பது இப்புனித கலையை மேலும் கற்றுக்கொள்வதற்கு எமக்கான தகுதியை ஒருபடி உயர்த்திக்கொள்வதற்கான அடித்தளம் என்பது எனது தனிப்பட்ட கருத்து. இதன் பின்பு நான் கற்றவை ஏராளம். சென்னையிலுள்ள கலாஷேத்ராவில் சேர்ந்து 4 வருடங்கள் நடனத்தை ஆரம்பத்திலிருந்து கற்றேன். பின்னர் இலங்கை வந்து வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்பட்ட ஆசிரியர் தரப் பரீட்சையில் விசேட சித்திபெற்று பரத கலாவித்தகர் பட்டம் பெற்றேன், ஜெயாஞ்சலி நிறுவனத்தினால் நடைபெற்ற பரீட்சையில் விசேட சித்தி பெற்று அதற்கான பரிசளிப்புவிழா லண்டனில் கேட்வே தியேட்டரில் நடைபெற்றது. அதில் எனது ஆற்றுகையும் இடம்பெற்றது .





எனது வாழ்வின் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனது அரங்கேற்றமாகும். இந்தியாவிற்கு சென்று நடனத்தை மேலும் பயில அது தூண்டியது. நடனம் என்பது கலை என்பதைத் தாண்டி ஒரு தவம் என்பதையும், கடவுளை அடைவதற்கான ஒரு வழி என்பதையும் உணர்ந்தேன். கலாஷேத்ராவில் பல புகழ்பெற்ற கலைஞர்களுடன் சேர்ந்து நடனமாடும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களிடமிருந்து நான் கற்ற விடயம் தன்னடக்கமாகும். இது கலைஞனுக்கு இருக்க வேண்டிய ஒரு சிறந்த பண்பாகும்.

**மாணவியாக இருந்து கற்றதற்கும் அதுவே தற்போது ஆசிரியராக இருந்து செயற்படுவதற்கும் இடையிலான வித்தியாசத்தை எவ்வாறு உணர்கின்றீர்கள்?**

குரு - சிஷ்யை உறவென்பது தாய் - சேய் உறவைப்போன்றது. எனது குருமாரும் தாய்க்கிணையாக என்னை நல்வழியில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கலைத்துறையில் காலடி வைப்பதற்கான தகுதியை என்னுள் வளர்த்தவர் குரு கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன் ஆவார். இந்தியாவில் கலைக்கோவிலான கலாஷேத்ராவில் எனக்கு நான்கு வருடங்கள் நடனம் பயிலும் வாய்ப்புக் கிட்டியது. அங்கு என்னை கலைவாழ்க்கையின் அடுத்த படிநிலைக்கு எடுத்துச்சென்றவர்களுள் முக்கியமாக திகழ்பவர்கள் குரு ஸ்ரீமதி நந்தினி நாகராஜ், குரு லோகேஷ்ராஜ் ஆகியோரே. இவர்கள் என்னை இன்னும் நெறிப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

இன்றைய மாணவர்கள் ஆசிரியர்களை ஒருவரோடு ஒருவர் ஒப்பிடுகிறார்கள். குருவைத் தேர்ந்தெடுப்பதில் பல கேள்விகள் எழலாம். ஆனால், தேர்ந்தெடுத்த குருவின் மீது சந்தேகம் எழுவது எமது கலை விருத்திக்கு ஆரோக்கியமானதாக அமையாது.

**இணைய வருகையின் பின்னர் பல பரதநாட்டிய நிகழ்வுகள் ரீமிக்ஸ் செய்யப்பட்ட பாடல்களை கொண்டதாகவே இருக்கின்றது. இது பரதத்தின் பாரம்பரிய தன்மையை குறைத்துவிடாதா?**

பரதநாட்டியம் என்பது சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட வழிமுறைகளுக்கமைய செய்யப்பட வேண்டிய சாஸ்திரிய நடனமாகும். அதன் எல்லைக்குள் பல புதுமைகளைக் கொண்டு வரலாம். அது மட்டுமே அக்கலையின் சிறப்பை நிலைத்து நிற்கச்செய்யும். ரீமிக்ஸ் பாடல்களுக்கு நடனமாடுவதில் எனக்கு அவ்வளவு ஈடுபாடு இல்லை. ஆனால், ஒரு கலைஞனால் செய்ய முடியாது என்று ஒன்றுமில்லை. பரதநாட்டியத்தின் தாற்பரியத்தை நன்கு உணர்ந்து அதற்கேற்றவாறு புதியவற்றை படைக்க வேண்டும். அதுவே இக்கலையை ஆண்டாண்டு காலம் நிலைத்து நிற்கச் செய்யும்.

**கொரோனா கால இணையவழி கல்வி முறையை எவ்வாறு கையாளுகின்றீர்கள்? உங்களது மாணவர்கள் அதனை எவ்வாறு உணர்கின்றார்கள்?**

கொரோனா என்ற கண்ணுக்குத்தெரியாத கிருமி கற்றுத்தந்த பாடங்கள் பல. இப்போது குருவை இணையவழியின் ஊடாகவே பார்த்துக் கற்கிறார்கள். மாணவர்களின் அங்க அசைவுகளில் ஏற்படும் தவறுகளை அவர்களே திருத்திக்கொள்ள வேண்டிய ஒரு நிலை. பெரும்பாலும் தொடர்மாடி வீடுகளில் வசிக்கும் மாணவர்கள் பெரும் அசௌகரியத்திற்கு முகங்கொடுக்கின்றார்கள். அதையும் சாதகமாக்கிக் காட்டியது எமது பாடசாலையின் நிகழ்நிலையினூடாக இடம்பெற்ற 'அபிநவம்' என்கின்ற கலைநிகழ்வாகும்.

நடனம் பயிலும் அனைத்து மாணவர்களும் அதில் பங்குபற்றியிருந்தனர். இதன்மூலம் நான் பெற்ற அனுபவங்கள் பல. இதனை நிகழ்த்துவதற்கு பக்கபலமாக இருந்து எமக்கு ஊக்கமளித்தவர் எமது பாடசாலை அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன் ஆவார். கலையையும், கலைஞனையும் எந்தக் கிருமியினாலும் முடக்கிவிட முடியாது. தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பல மாற்றங்களை மாணவர்களிடத்தில் காணக்கூடியதாக உள்ளது.

அவை சாதகமானதாகவும், அதே நேரத்தில் பாதகமானதாகவும் இருக்கின்றன. குருவிடம் சென்று நடனத்தைப் பயில்வதைத் தவிர்த்து யூடியூப் அல்லது காணொளிகளைப் பார்த்து சுயமாக நடனத்தை பயின்று வருகிறார்கள். அது கலை வளர்ச்சிக்கு சிறந்ததொரு முறையாக எனக்குத் தோன்றவில்லை.

குருவிடம் சென்று நேரத்தை செலவிடுவதிலும் பார்க்க வீட்டிலிருந்தே இணையத்தின் வழியாக நடனத்தில் கரை கண்டுவிடலாம் என எண்ணுகிறார்கள். இவ்வாறான எண்ணங்களை ஊக்குவிப்பதாக இக்காலச் சூழ்நிலையும் அமைந்துவிட்டது.

**நீங்கள் ஆற்றுகை செய்த நிகழ்வுகளில் மறக்க முடியாதவை..?**

நான் பங்குபற்றிய நிகழ்வுகளில் மறக்க முடியாத நிகழ்வுகளாக, 2020 இல் சிவராத்திரியின் போது இந்தியாவில் சிதம்பரம் ஆடல்வல்லானின் ஆலயத்தில் ஆடும் பாக்கியம் கிடைத்தமை, தஞ்சை பெருவுடையார் கோயில், திருவானைக்காவல் சிவன் கோயில் ஆகிய தலங்களில் நடைபெற்ற நாட்டியாஞ்சலி நிகழ்வுகளில் பங்குபற்றியமை, 2019 புதுடெல்லியில் நடைபெற்ற சர்வதேச இராமாயண நிகழ்வில் சீதையாக பங்கேற்றமை, கலாஷேத்ரா மார்கழி உற்சவத்தில் கருமாரிக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் கருமாரியாகப் பங்கேற்றமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**நடனத்துறையில் இத்தலைமுறையினரின் பங்களிப்பு எத்தகையது?**

பெரும்பாலானவர்கள் கலைத்துறையை குறிப்பாக நடனத்துறையை தேர்ந்தெடுப்பதற்கு சற்று யோசிக்கிறார்கள். சரியான அங்கீகாரம் கிடைக்குமா, தொழில் வாய்ப்புகள் கிடைக்குமா என சிந்திக்கிறார்கள். மனிதனை மேம்படுத்துவது கலை. அதனை சாதாரண உடற்பயிற்சியாகப் பார்க்காமல் தமிழர் பண்பாட்டையும், கலாசாரத்தையும் அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் சிறந்த ஊடகமாகக் கருத வேண்டும்.

ஒரு கலைஞருடைய குடும்ப வாழ்க்கை சிறந்த முறையில் அமைந்தால் மட்டுமே அவருடைய கலை வாழ்க்கையில் வெற்றிக்கனியை எட்ட முடியும். என்னுடைய கலைப்பயணத்தில் என் கணவரின் (வாகீஸ்வரன்) பங்கு மிகவும் முக்கியமானது. நான் சோர்வடையும் போதெல்லாம் அவருடைய அறிவுரைகள் எனக்கு நம்பிக்கையையும், தைரியத்தையும் ஏற்படுத்தின. என்னுடைய வளர்ச்சியின் ஒவ்வொரு படியிலும் அவருடைய ஒத்துழைப்பும், ஊக்குவிப்பும் நிறைந்து காணப்படுகின்றன. அந்த வகையில் நான் பாக்கியசாலி என்றே கூறவேண்டும்.



**அனுபவத்தினால் கிடைத்த வெற்றி எனக் கருதுவது...?**

2018 இல் கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்தில் நடன ஆசிரியராக நியமனம் பெற்றேன். 2019இல் நான் நெறியாள்கை செய்த 'சீதாபஹரணம்' என்ற நாட்டிய நாடகம் தமிழ்த் தினப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடத்தைப் பெற்றது. இந்நாட்டிய நாடகத்தை 2019இல் கம்பன் கழகத்தினால் நடத்தப்பட்ட ஆடல் வேள்வியில் முதலாம் நாள் நிகழ்வாக மேடையேற்ற சிறந்ததொரு வாய்ப்புக் கிடைத்தது. இது எனது கலை வாழ்க்கையின் முக்கியமானதொரு நிகழ்வாகும். மேலும், எனக்கு பல வழிகளில் உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருக்கும் பாடசாலையின் முகாமையாளர் திருமதி சிவானந்தினி துரைசுவாமி அம்மையாருக்கும், பாடசாலையின் அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயனுக்கும் எனது நன்றிகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

வருங்கால சமுதாயம் நம் தமிழர் பண்பாடையும், கலாசார விழுமியங்களையும் பேணிப்பாதுகாக்கும் ஆரோக்கியமான சமுதாயமாக வளர கலைகளைப் பேணிப் பாதுகாப்போமாக. எனது துறைசார்ந்த கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதற்கு சிறந்த வாய்ப்பினையளித்த தமிழ் முரசுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

# ஒரு சமூகத்துக்கு பயன்படாத எந்த விடயத்தையும் எழுத்துக்குள் கொண்டு வருவதில் அர்த்தமில்லை!



## மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா உடனான ஓர் உரையாடல்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி - மீராவோடை பிரதேசத்தில் 1946 ஆம் ஆண்டு 04 ஆம் மாதம் முதலாம் திகதி தம்பி சாய்வு சின்ன லெப்பை, முகைதீன் பாவா கலந்தர் உம்மா ஆகிய தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார் எஸ்.எல்.எம்.ஹனீபா.

மூத்த எழுத்தாளரான எஸ்.எல்.எம்.ஹனீபா தனது ஆரம்பக் கல்வியை 1951 ஆம் ஆண்டு மீராவோடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் நான்கு வரை கற்று, பின்னர் ஓட்டமாவடி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் தனது கல்வியைத் தொடர்ந்துள்ளார். 1966, 1967 ஆம் ஆண்டுகளில் கிளிநொச்சி விவசாயப் பாடசாலையில் இணைந்து கல்வி கற்றுள்ளார். 1969.01.03 அன்று கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் நியமனம் கிடைத்துள்ளது. 21 வருட அரச சேவையிலிருந்து 1990.12.31 அன்று ஓய்வுபெற்றுள்ளார்.

விளையாட்டுத்துறையிலும் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். 1963 இல் மட்டக்களப்பில் நடைபெற்ற மாகாண மட்ட குறுந்தூர ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்று அகில இலங்கை மெய்வல்லுநர் போட்டியில் கலந்துகொண்டு தேசிய ரீதியில் மூன்றாமிடம் பெற்று பிறந்த மண்ணுக்கு தேசிய ரீதியில் புகழினை ஈட்டிக் கொடுத்துள்ளார். கல்வி கற்கும் காலத்திலேயே வாசிப்பில் மிகவும் ஆர்வம் கொண்ட இவர் தனது இருப்பிடத்திலிருந்து 40 மைல் தாண்டி மட்டக்களப்பு வாசிகசாலையில் அங்கத்தவராக இணைந்துள்ளார்.

1962 ஆம் ஆண்டு 'ராதா' சஞ்சிகையில் ஓடையூர் எஸ்.எல்.ஹனீபா என்ற பெயரில் 'நெஞ்சின் நினைவினிலே' என்ற அவரது முதல் சிறுகதை பிரசுரமாகியுள்ளது. அதன் பின்னர் சஞ்சிகைகள் மற்றும் தேசிய பத்திரிகைகளில் இவர் கதைகள் மற்றும் ஆக்கங்களை எழுதியுள்ளார்.

50 வருட எழுத்துத்துறையில் ஐம்பது கதைகள்தான் எழுதியிருக்கிறார். 1992 இல் 'மக்கத்துச் சால்வை', 2007 இல் 'அவளும் ஒரு பாற்கடல்' இரண்டும் இரு தொகுதிகளாக பிரசுரம் பெற்றுள்ளன. கடந்த 12 வருடங்களில் எழுதிய ஏழு கதைகளும் நூலுருப் பெறவில்லை.

1992 இல் வெளிவந்த 'மக்கத்துச் சால்வை' தொகுதிக்கு தமிழ்நாடு கோவை வில்லி தேவசிகாமணி விருது கிடைத்துள்ளது. அதே ஆண்டில் ஆனந்தன் என்பவர் தனியார் பாடத்திட்ட தமிழ் மொழித் தொகுப்பில் 'மக்கத்துச் சால்வை' சிறுகதையை இணைத்துக் கொண்டுள்ளார். 1994 ஆம் ஆண்டு 'மக்கத்துச் சால்வை' சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான இலங்கை சாகித்ய மண்டல பரிசினைப் பெற்றுள்ளது. அதே ஆண்டில் அரச பாடத்திட்டத்தில் க.பொ.த. சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் இலக்கியத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. 15 ஆண்டு காலம் அந்தச் சிறுகதை பாடத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவரது இலக்கியப் பணிகளுக்காக 2000 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண ஆளுநர் விருது கிடைத்துள்ளது. 2005 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் கலாபூஷணம் கௌரவத்தைப் பெற்றுள்ளார். மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவையின் விருது, ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையின் விருது, 2009 இல் மட்டக்களப்பு மாவட்ட கலை இலக்கிய விழாவில் இலக்கிய மணி விருது, 2014 இல் சாய்ந்தமருது தோப்பு இலக்கிய வட்டம் மொழி விருது, 2020 இல் தமிழ் உணர்வாளர் விருது உள்ளிட்ட பல விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.

வட கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு 1989 இல் வடகிழக்கு மாகாண சபையின் உறுப்பினராக இவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

இவர் பல அதிகாரிகளின் ஒத்துழைப்புகளுடன் மாவடிச்சேனை, கேணி நகர், மாஞ்சோலை ஆகிய பிரதேசங்களில் ஆரம்பப் பாடசாலைகளையும் ஆரம்பித்து வைத்துள்ளார். அத்துடன் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா பெண்கள் பாடசாலையை தனியாக ஆரம்பிப்பதில் பெரும்பங்கு வகித்த சமூகசேவகர் இவராவார்.

**உரையாடியவர்:**
**எச்.எம்.எம்.பர்ஸான்**

கல்குடா தொகுதியின் மூத்த எழுத்தாளரும், சிரேஷ்ட அரசியல்வாதியும், யதார்த்த சமூகவியலாளரும், முற்போக்கு சிந்தனையாளருமான எஸ்.எல்.எம்.ஹனீபாவிடம் உரையாடச் சென்றால் சோர்வின்றி நீண்ட நேரம் உணர்வுபூர்வமான, சுவாரஸ்யமான கதைகளைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

அவ்வாறு அவரைச் சந்தித்து நாம் பேசியபோதே அவர் எம்மிடம் இவ்வாறு பேச ஆரம்பிக்கிறார்...


''இன்று ஒவ்வொரு தனி மனிதனுடைய கைகளிலும் ஸ்மார்ட் போன் வந்ததன் பின்னர் ஒவ்வொருவரும் ஒரு ஊடகமாகத் திகழ்கின்றனர். அதனால் ஒரு விநாடியிலேயே ஒருவர் ஒரு பதிவை முகநூலில் பதிவிட்டால் அதனை அரை மணிநேரத்துக்குள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பகிர்ந்து கொள்வார்கள். அந்த விடயம் நல்லதா, கெட்டதா என்று பார்ப்பது கிடையாது. அதன் உள்ளடக்கம் என்ன, அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் என்ன, இது சமூகத்திற்கு நல்லதா, கெட்டதா என்றெல்லாம் பார்ப்பது கிடையாது. அதனை உடனடியாக மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொள்கிறார்கள். பின்னர், அதை நாம் யோசிக்காமல் பகிர்ந்து விட்டோம் என்று கவலைப்படுகிறார்கள்'' என்று சமூக வலைத்தள பாவனை தொடர்பாக தொடர்ந்தும் பேசிக்கொண்டே செல்கிறார் எஸ்.எல்.எம்.ஹனீபா.

''இந்நாட்டில் வாழும் பல்லின மக்கள், மனிதர்களை மதிக்கின்ற, மற்றைய சமூகத்தின் கலை, கலாசாரம், விழுமியங்களை மதிக்கின்ற மனிதர்களாக வாழ வேண்டும். அவ்வாறான வாழ்வுதான் எமது எதிர்கால சமூக வாழ்வுக்கும் இருப்பு, பாதுகாப்பு, மகிழ்ச்சி ஆகியவற்றுக்கும் உதவும் என்று நான் நம்புகிறேன்.''

இவ்வாறு பேசிக்கொண்டு செல்லும் எழுத்தாளர் ஹனீபாவுடன் இலக்கியம் பற்றிப் பேசுங்கள் என்று கேட்டதற்கு அவர் இவ்வாறு பேசத் தொடங்கினார்.

''இன்று நாம் இடறி விழுந்தால் ஒரு கவிஞனில் விழுவதைப்போல்தான் உள்ளது. கவிஞர்கள் அதிகமாகி விட்டார்கள். மற்றைய துறைகளைப் பற்றி யாருக்கும் அக்கறையில்லை. இப்போதைய காலத்தில் கவிதை எழுதுவது மிகவும் இலகுவாகி விட்டது. அவ்வாறான கவிதைகளுக்கு இடும் தலையங்கங்கள் வித்தியாசமாக இருக்கின்றன. தலைப்புக்கும், கவிதைகளுக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. தற்கால இலக்கியத்தில் ஓர் எழுத்து வரும்போது அதில் ஒரு சமூகப் பார்வை இருக்க வேண்டும். ஒரு சமூகத்துக்குப் பயன்படாத எந்த விடயத்தையும் எழுத்துக்குள் கொண்டு வருவதில் அர்த்தமேயில்லை.

ஒரு மரக்கன்றைக் கூட, நாம் பயன் பெறுவதை விட அதனால்




மற்றவர்களும் பயன்பெற வேண்டும் என்றுதான் அதனை நாம் நாட்டுகிறோம். அது தருகின்ற நிழலில் மற்றவர்கள் பயன்பெற வேண்டும்.

இன்றைய படைப்புகளில் இலக்கியம் உள்ளதா என்று சந்தேகமாகவுள்ளது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் 1970களில் தான் தமிழ் இலக்கியத்தில் நவீன இலக்கியம் கொடிகட்டிப் பறந்த காலம் எனலாம். பேனை பிடித்து எழுத வந்தவர்கள் எல்லாம் அவர்களின் சம காலத்து படைப்பாளிகளை அறிந்திருப்பார்கள். ஒருவர் நூறு நல்ல கதைகளைப் படித்தால் ஒரு நல்ல கதையை எழுதலாம். இப்போது அப்படியெல்லாம் இல்லை. தான் எதைப் பற்றி எழுத வருகிறோம் என்றும் தெரியாமல் எழுதுகிறார்கள்.

அதில் இலக்கியம் உள்ளதா, கலை உள்ளதா அல்லது மொழி உள்ளதா என்றெல்லாம் பார்ப்பது கிடையாது. ஒரு சமையலுக்கு அனைத்து விதமான பொருட்களும் இருக்கவேண்டும். எல்லாம் சேர்ந்தால்தான் அது பக்குவமாக வந்துசேரும். அதேபோன்றுதான் இலக்கியத் துறையையும் நாம் பார்க்க வேண்டும்.

எழுத்து, கற்பனை வளம், சமூகம் சார்ந்த பார்வை என மூன்றும் வேண்டும். இந்த மூன்றுக்கும் அடிப்படை வாசிப்புத் தேவை. ஒருவர் நிறைய வாசிப்பவராக இருந்தால்தான் ஒரு தரமான இலக்கியப் படைப்பை உருவாக்கலாம். தற்போது வாசிப்பு மிகவும் குறைந்து போயுள்ளது. ஆனால், எழுத்தாளர்கள் அதிகமாகி விட்டார்கள்'' என்று சிரித்துக்கொண்டே அவரது கதையை தொடர்ந்தும் ஆரம்பிக்கிறார்...

> **“ஒருவர் நிறைய வாசிப்பவராக இருந்தால்தான் ஒரு தரமான இலக்கியப் படைப்பை உருவாக்கலாம். இன்றைக்கு வாசிப்பு மிகவும் குறைந்து போயுள்ளது. ஆனால், எழுத்தாளர்கள் கூடிவிட்டார்கள்”**

''பெரும்பாலும் கவிதைப் புத்தகங்கள்தான் வெளிவருகின்றன. எப்போதாவது ஒரு தடவைதான் சிறுகதைத் தொகுதி வெளிவரும். புத்தகத்தைப் படித்தால் அத்தோடு முடிந்து விட்டது. அதற்குப் பிறகு அந்தப் படைப்பு மனதில் நிற்பது மாதிரி இருக்காது. ஆனால், ஒரு சிறந்த படைப்பு ஒருவருடைய மனதில் நிற்கும். ஒரு படைப்பை வாசிக்கும்போது மட்டுமல்ல, அது நினைக்கும்போதும் இருக்க வேண்டும். சொற்கள் மந்திரம் போன்று இருக்க வேண்டும். அவசியமற்ற சொற்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஒரு சொல்லை தெரிந்து போட வேண்டும். எழுதுவதற்காக வேண்டி சிலர் ஒரு உருப்படியான சொல்லுக்காக தவமிருப்பார்கள்'' என்றார்.

***அவரது எழுத்துத்துறை பற்றி நாம் கேட்டோம்..***

நான் 50 வருடத்துக்குள் கூடுதலாக எழுதவில்லை. நான் எழுதியது குறைவு. ஆனால், எனக்குக் கிடைத்த சமூக அங்கீகாரம் கூடிப் போனது.

ஒருவர் எழுத்துத்துறையில் பிரகாசிக்க அவரது நீண்ட ஆயுள் மிக முக்கியமாகக் காணப்படுகிறது. அதேபோன்று அவருக்கு குடும்ப ரீதியான ஒத்துழைப்புகள் தேவைப்படுகின்றன. எழுதுபவருக்கு ஏனையவர்கள் பக்கபலமாக இருக்க வேண்டும். அவ்வாறான புரிந்துணர்வுடன் இருப்பவர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர்.

எப்போது ஒரு கவிஞனோ, ஒரு கதாசிரியரோ, நாவலாசிரியரோ நான் எழுதி விட்டேன், திருப்தியான ஒரு படைப்பைப் படைத்து விட்டேன் என்று நினைக்கிறாரோ, அப்போதே அவரது படைப்பும் தோற்றுப் போகிறது. அவரும் தோற்றுப் போகிறார். கடைசி வரை அவரால் படைப்புகள் பற்றி திருப்தி காண முடியாது. நான் ஐம்பதுக்கும் மேற்பட்ட கதைகளை எழுதியுள்ளேன். அதில் ஐந்து கதைகள் ஓரளவு திருப்திகரமாக உள்ளன. எனக்கு முற்று முழுதாக திருப்தி தந்த கதையை நான் இன்னும் நூல் வடிவில் கொண்டு வரவில்லை. அதை எப்போது எழுதப் போகிறேன் என்று எனக்குத் தெரியாது'' என்று பெருமூச்சுடன் கூறினார் எஸ்.எல்.எம். ஹனீபா.



***அவரது அரசியல் விவகாரம் தொடர்பாகவும் நாம் பேசியபோது,***

''இந்த உலகிலுள்ள பாவப்பட்ட மக்களுக்கு நன்மை செய்கின்ற அரசியலை நாம் காண முடியாது. பெரிய நாடுகள் எனப்படும் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் கூட நல்ல அரசியலைக் காண முடியவில்லை. இந்தியாவில் கூட அரசியலின் பெயரால் எவ்வளவோ கூத்துகள் நடக்கின்றன. உலக அரசியல் வரலாற்றில் மதத்தின் பெயராலும், மதம் சார்ந்த அரசியலின் பெயராலும்தான் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது.

இப்போதைய அரசியலுக்கு ஆளுமை, சமூகப்பற்று, கல்வியறிவு என ஒன்றுமே தேவையில்லை. அன்றைய நாளில் பெரும்பாலானோர் சட்டம் படித்தவர்களாகத்தான் இருந்தார்கள். இப்போது யாரிடம் பணம் அதிகம் உள்ளதோ அவர் மக்களுக்கு பணத்தைக் கொடுத்து வெற்றி பெற்றுச் செல்வார்.

சென்ற தேர்தலில் நம் நாட்டில் கூட ஒரு வாக்கினைப் பெற பத்தாயிரம் ரூபா அளவில் செலவு செய்யப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்தது.

ஒருவர் பல்லாயிரம் கோடி ரூபாவை அரசியலுக்கு செலவு செய்கிறார் என்றால் அந்த அரசியலில் சமூக மாற்றமோ, சமூகத்தின் வாழ்வில் மாற்றத்தையோ கொண்டுவரும் அரசியலாக அது இருக்காது. அது சராசரி மக்களை ஏதோ ஒரு விதத்தில் சுரண்டும் அரசியலாகத்தான் பார்க்கப்படுகிறது'' என்கிறார்.

இயற்கையை நேசிக்கும் இவர் ஆயிரம் பனைவிதைகள் நடும் வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார். இது பற்றிக் கேட்டபோது,

''இந்த உலகிற்கு சவாலாக அமைவது புவி வெப்பமடைதல், சுற்றுச்சூழல், நீர் வீண்விரயம் எனப் பல காரணங்களை சொல்லிக் கொண்டே போகலாம். எங்களுடைய தேவைகளை சுருக்கிக் கொண்டு மற்றவர்களின் தேவைகளை செய்து கொடுக்கின்ற சமூகம் உருவாக வேண்டும்.

ஒருவர் பிறந்ததிலிருந்து ஐந்து மரங்களை யாவது நாட்டியிருக்க வேண்டும். நம் வாழ்வில் எத்தனை மரங்களை நாட்டி இயற்கை வளத்தை பாதுகாக்க முயற்சி செய்துள்ளோம் என்பதனை சிந்திக்க வேண்டும். நான் பல்லாயிரம் மரங்களை நாட்டியுள்ளேன். அது எனது மூச்சு இருக்கும் வரை தொடரும்.''

இவ்வாறு நாம் அவருடன் உரையாடும்போது அவரது கதையில் சோர்வின்றி பேசிக் கொண்டே செல்கிறார் மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா.




***ஓட்டமாவடி பிரதேசத்தின் மூத்த எழுத்தாளரும், முன்னாள் வட கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான எஸ்.எல்.எம்.ஹனீபாவின் நினைவுக் குறிப்புகள் அடங்கிய 'மக்கத்துச் சால்வை மண்ணும் மணமும்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, நாவலடி சஹ்வி கார்டனில் வாசகர் வட்டத்தின் தலைவரும், எழுத்தாளருமான எஸ்.எச்.அரபாத் சஹ்வி தலைமையில் இடம்பெற்ற போது...***

இவ்வாறு பன்முகத்தன்மை கொண்ட எழுத்தாளர் எஸ்.எல்.எம்.ஹனீபாவை அவர் வாழும் போதே அவரின் பணிகளை ஆவணப்படுத்த வேண்டும், அவரை கௌரவப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் 'மக்கத்துச் சால்வை வாசகர் வட்டம்' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு அந்தப் பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு 'மக்கத்துச் சால்வை மண்ணும் மணமும்' எனும் ஒரு நூலை தொகுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. 220 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் எஸ்.எல்.எம்.ஹனீபாவின் வாழ்வைப் படித்து பாருங்கள். நீங்களும் அதிர்ந்து போவீர்கள்!

தமிழலை

# ''வசந்தமாய் காற்றலைகளில் சுதந்திரமாய் வாழ்கிறேன்''

## நித்தியகல்யாணி



***வானலையில் வலம் வரும் இளம் அறிவிப்பாளர்களை அறிமுகப்படுத்தி அவர்களை ஊக்கு விக்கும் முகமாக இவ்வாரம் முதல் 'தமிழலை' எனும் இக்களம் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. முதலாவது அதிதியாக நித்தியா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படுகின்ற நித்தியகல்யாணி தனது அனுபவங்களை இவ்வாறு பகிர்ந்துகொள்கிறார்...***

நான் நித்தியகல்யாணி வேலுசாமி. எப்போதும் குளிர்மையாகவும் பச்சைப் பசேலென இருக்கும் அம்பேவெல என்னும் அழகிய ஊரைச் சேர்ந்தவள். என்னுடைய அப்பா வேலுசாமி ஒரு விவசாயி, அம்மா சாந்தி இல்லத்தரசி. அக்கா, தம்பி, நான் உட்பட ஐந்து பேர் கொண்ட சிறிய குடும்பம்.

நடுத்தர குடும்பம் என்றாலே எல்லா விடயங்களுக்கும் போராட்டம் தானே. நானும் இதற்கு விதிவிலக்கல்ல. பாதிநேரம் படிப்பு, மிகுதி நேரம் அப்பா - அம்மாவுக்கு உதவியாக தோட்ட வேலைகளும் செய்வேன்.

ஸ்ரீகணபதி இந்துக்கல்லூரியில் உயர்தரம் வரை கல்வி கற்றேன். பின்னர் ஊடகத்துறையைத் தெரிவுசெய்தேன். பாடசாலை நாட்களில் மேடை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதில் அதிக ஆர்வம் இருந்தது. ஆகையால், பாடசாலை அதிபர் வேலாயுதம், எனது தமிழ்ப்பாட ஆசிரியை திருமதி சந்திரகலா உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்களும் எனக்கு ஊக்கமளித்தார்கள். அவர்களின் வழிகாட்டல்தான் என்னை இந்தளவு தூரம் உயர்த்தியிருக்கிறது.

ஆரம்பகாலங்களில் எனக்கு ஊடகம் என்ற வார்த்தைக்கு அர்த்தமே தெரியாது. எனக்கு தெரிந்ததெல்லாம் வானொலி. ஒரு வானொலி அறிவிப்பாளராக ஆகவேண்டும் என்பது எனது மிகப்பெரிய ஆசை, கனவு. சிறு வயதிலிருந்தே வானொலியோடுதான் என் நாட்கள் ஆரம்பிக்கும். தொலைக்காட்சி பார்ப்பதில் அந்தளவு ஆர்வம் இல்லை. அதற்கு காரணம் எங்கள் வீட்டிலிருந்த கறுப்பு வெள்ளை தொலைக்காட்சியாகும். கறுப்பு வெள்ளை படங்களை அதுவும் அன்டனாவை கஷ்டப்பட்டு திருப்பி சரி செய்து பார்ப்பது சுத்தமாக பிரியம் இல்லை. அதனால் வானொலிக்கு தானாகவே பழக்கப்பட்டு விட்டேன். அத்தோடு என் அப்பாவின் பழக்கம் என்னையும் தொற்றிக் கொண்டது. காலை முதல் இரவு தூங்கும்வரை வானொலியோடுதான் அப்பா காணப்படுவார். பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர் எங்கிருந்து எனது ஊடகப் பயணத்தை ஆரம்பிப்பது என யோசித்துக் கொண்டிருந்தேன். ஊடகத்தில் பணிபுரிகின்ற யாரையும் எனக்குத் தெரியாது. முதல் தடவையாக ஒரு பத்திரிகை விளம்பரத்தில் ஊடக கற்கைநெறிகளுக்கான விளம்பரத்தைப் பார்த்தேன். பிறகு வானொலித்துறைக்கு தேவையான கற்கை நெறியைத் தெரிவுசெய்தேன். அதற்காக தலைநகர் கொழும்புக்கு வரவேண்டியதாயிற்று.

20 வருடங்களாக ஒருமுறை கூட பிரியாத என் குடும்பத்தை விட்டுப் பிரிய மனமில்லை, என்றாலும் என் கனவுகளுக்காக மனதை கல்லாக்கிக்கொண்டு கொழும்பை நோக்கி வந்தேன். இங்கு எல்லாமே எனக்குப் புதிதாக இருந்தது. மனிதர்களும் கூட. என்னை எப்படி மாற்றிக்கொள்வது என்பதைக் கற்றுக்கொள்ளவே எனக்கு மிகப்பெரிய காலம் தேவைப்பட்டது. ஊடக கற்கை நெறியோடு, பகுதிநேர வேலையும் செய்தேன். அதன் பிறகு இணைய வானொலியில் பணியாற்ற ஒரு வாய்ப்பு கிடைத்தது.

இளமை இணைய வானொலியில் இரு வருடங்கள் பணியாற்றி பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டேன். இந்த அனுபம் தான் என் முதல் வானொலி அனுபவம். இந்த நேரத்தில் இளமை வானொலியில் பணியாற்ற வாய்ப்பளித்த மிருணனுக்கு நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். அதனைத்தொடர்ந்து தனியார் வானொலியில் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது. இதுதான் வாழ்வின் சவாலுக்குரிய ஒரு காலப்பகுதி என்பேன். நான் கற்றுகொண்டவை போதவில்லை என்பதைப் புரியவைத்த காலப்பகுதி.

என்னை வளர்த்துக் கொள்ள ஒரு வாய்ப்பு கிட்டியது. அங்கு பணிபுரிந்த 4 வருடங்களில் பெரும்பாலான விடயங்களைக் கற்றுக் கொண்டேன். நடையுடையிலிருந்து, பேசுவது வரை. முதன்முறை ஒரு நிகழ்ச்சிக்கான வாய்ப்பு வழங்கப்பட்டு அதனை நான் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஒருவேளை இந்த துறைக்கு நான் பொருத்தமானவள் இல்லையோ என இடையில் சற்றுத் தடுமாறியும் பானேன். என்னால் முடியாது என நினைத்த போதெல்லாம் ''உன்னால் முடியும்'' என ஊக்கப்படுத்தியவர்கள் என் நண்பர்கள்தான்.

அதன் பிறகு இரண்டாம் வாய்ப்பு கிடைத்தது. அதனை கண்டிப்பாக சரியாக பயன்படுத்துவேன் என எனக்குள் உறுதி பூண்டேன். நினைத்ததை போல் நடந்தும் கொண்டேன். எனக்கென ஒரு பெயரைக் கொடுத்தது. என்னை ஒரு அறிவிப்பாளராக அறிமுகம் செய்த சூரியன் வானொலிக்கும், பணிப்பாளர் மற்றும் சக அறிவிப்பாளர்களுக்கும் நன்றிக் கூற கடமைப்பட்டுள்ளேன்.

பின்னர் வசந்தம் வானொலியுடன் இணைந்தேன். அங்கு 2 வருடங்களாகப் பணியாற்றி வருகின்றேன். எனக்கு இன்னுமொரு முகவரியாக வசந்தம் என் வாழ்வில் மலர்ந்தது. சுதந்திரமாகவும் மனதுக்கு பிடித்தது போன்றும் பணிபுரிய வாய்ப் பளித்த முகாமையாளர் எம்.கிருபாகரனுக்கு மனமார்ந்த நன்றிகள். வார நாட்களில் மாலை 03:00 - 05:00 மணிவரை ஏழாம் அறிவு நிகழ்ச்சியும், வார இறுதி நாட்களில் மலரும் மொட்டுக்கள், செய்தி வாசிப்பு என வசந்தமாய் காற்றலைகளில் சுதந்திரமாய் வாழ்கிறேன். அவமானங்களும் நிராகரிப்புகளும் தான் என்னை தனியொரு பெண்ணாக குறிக்கோள் மாறாது, முட்டி மோதி வாழச் செய்திருக்கிறது. ''உன்னால் முடியாது. இத்துறையை விட்டு விலகி விடு'' என்று அவநம்பிக்கை ஊட்டிய அறிவிப்பாளர்களும் இல்லாமலில்லை. அன்று அவர்கள் சொன்ன வார்த்தைகளுக்காக இத்துறையை விட்டு விலகியிருந்தால் நான் உண்மையாக வாழ்வில் தோற்றிருப்பேன்.

ஊடகத்துறையில் பணியாற்ற கண்டிப்பாக தைரியம் அவசியம். அதே சமயம் பெண்களாகிய நாம் எந்தெந்த விடயங்களில் கவனமாகவும், துணிச்சலாகவும், பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து வைத்திருந்தால் போதுமானது. மேலதிகமாக தேடலும், கற்றுக்கொள்ளும் ஆர்வமும் உங்களை இத்துறையில் நிலைக்கச் செய்யும். புதிதாக ஊடகத் துறையை தெரிவுசெய்கின்றவர்கள் ஊடகம் பற்றிய சரியான புரிதலோடு உள்ளே வாருங்கள். வெறுமனே புகழுக்காக மாத்திரமில்லாமல் தேடல்களோடு இந்த துறையில் சாதிக்கும் உறுதியோடு வாருங்கள்.

எனக்கு இன்னும் இந்த ஊடகப் பயணத்தில் கற்றுக் கொள்ளவும் சாதிக்கவும் நிறைய விடயங்கள் இருக்கின்றன. இது அத்தனைக்கும் நேயர்களின் அன்பும், ஆசியும் எப்போதும் வேண்டும். அநேகமான நேயர்கள் என்னை அவர்களது குடும்பத்தில் ஒருத்தியாகவே பார்க்கின்றார்கள். அந்தவிதத்தில் நான் மிகவும் பாக்கியசாலிதான்.

-கனிஸ்டா

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7